

சக்தி

மாத வெளியீடு

●

சாரத் திரள்

சுதந்தர இந்தியா	... பண்டித நேரு	1
எழுத்துலகம்	... ஈச்வர - அறிவோன்	3
மனைவி அவசியமா ?	... சுப. நாராயணன்	4
கிராமக் கைத்தொழில்	... மகாத்மா காந்தி	9
தமிழ் மாகாணம் தேவையா?	... கே. ராமராவ்	13
ஒரே ஒரு கப் காப்பி	... 'ராக்கி'	16
என்னபொம்மை வாங்கலாம்?	... சி. சு, வைத்தீஸ்வரன்	19
சக்திப் பிரதாபம்	... ரா. திருவேங்கடம்	23
புதுச் சட்டை	... கிருஷ்ண சந்தர்	25
எண்ணெய்ச் சுத்தம்	... ப. வெ. வேங்கட...	41
பிரசாரம்	... டி. கே. துரைசாமி	45
காந்தளூர்ச்சாலை	... தி.நா.சுப்பிரமணியன்	46
நமனை அஞ்சேல் !	... விஞ்ஞானி	51
விடுதலைக்கு வழி	... ஆர். ராமநாதன்	55
அவன் பட்ட பாடு	... ஆர்.கே.பார்த்தசாரதி	57
பர்மியத் தலைவர் ஆங்ஸான்	... 'பதி'	64
தேவகானம்	... எஸ். ஆர். குப்புஸ்வாமி	67
புத்தக உலகம்	... நாரா	72

முதலியவை

✲

விய — தை

மலர் 13 — இதழ் 10

அணா 8

★ மங்கலமாக பொங்கல்
பொங்கி விட்டது—

★ மங்கலமாக முடிந்தது
மகாமகம்

★ மங்கலமான பாக்கு

அசோகா

சுகந்த பாக்குத்தூள்

தயாரிப்பவர் :
எம். கே. கிருஷ்ண செட்டி
அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்

குதூகலம்
சிறுவர்களுக்கும்பெரியோர்களுக்கும் மனமுவந்த நல்ல ஆடைகள் அணிவது குதூகலத்தைக் கொடுக்கிறது. கண்ணைப் பறிக்கும் பல வர்ணங்களிலும், எக்கால உபயோகத்துக்குமான ரேயன், பட்டு, ஜார்ஜெட் ஆடைகள் எங்களிடம் எப்பொழுதும் கிடைக்கும்.
கேவல்ராம்ஸ்
சென்னை
Kewalram's
FOR FASHIONS IN SILK

யுனைடெட் கமர்ஷியல் பாங்கு லிமிடெட்

2, ராயல் எக்ஸ்சேஞ்சு பிளேஸ், கல்கத்தா

வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 4-கோடி
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 2-கோடி
ரிசர்வு நிதி	ரூ. 17½-லட்சம்

ஸ்ரீ. ஜி. டி. பிர்லா
(சேர்மன்)

ஸ்ரீ. எம். ஏ. இஸ்பஹானி
(வைஸ்-சேர்மன்)

ஸ்ரீ. ரமன்லால் ஜி. ஸரய்யா
(வைஸ்-சேர்மன்)

எல்லா விதமான பாங்கு அலுவல்களும் நடத்தப்படுகின்றன

பிராஞ்சுகளும் ஏஜன்ஸிகளும் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் எல்லா முக்கிய நகரங்களிலும் உள்ளன

பி. டி. தாகூர்
ஜெனரல் மானேஜர்

சென்னை கிளைகள் :

310-311, லிங்க செட்டி தெருவு
கே. ஆர். கே. ஐயங்கார்
கிளை மானேஜர்

சௌகார்பேட்டை
ஆர். வேணுகோபால்
கிளை மானேஜர்

UCB 3

உங்கள் விருப்பத்திற்கேற்ற
நேர்த்தியான பர்னிச்சர்களுக்கு

ரென் கம்பெனியே

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 FEB 1947
MADRAS



ரென் பென்னட் அண்ட் கம்பெனி
(இந்தியா) லிமிடெட்

பர்னிச்சர்கள் தயாரிப்பவர்கள்

34, மவுண்ட் ரோடு - சென்னை

நீங்கள் நேரில் வந்து
பரீக்ஷை செய்யுங்கள்

முதல்தரமான வஸ்துக்களுக்கு ஈடு கிடையாது. எதிலும் தரம் வேண்டுமானல் அதற்கு உண்டான மதிப்பைக் கொடுத்துத்தான் ஆக வேண்டும். நீங்கள் தேர்ந்தெடுக்கும் வைரங்கள் பாபாலால் கம்பெனியிலிருந்து வாங்கினதானல் அவைகளின் கண்ணியமான தரத்தைப்பற்றி உங்களுக்கு கவலை வேண்டியதில்லை. அவைகள் எப்பேர்ப்பட்ட பரீக்ஷைகளுக்கும் தயாராக இருக்கின்றன.

பாபாலால் & கம்பெனி

கீர்த்திபெற்ற வைர நகை வியாபாரிகள்

மதராஸ்

DIRECT IMPORTERS OF QUALITY DIAMONDS

விய
மலர் 13

சக்தி

தை
இதழ் 10

மெய்ப்பொருள் காண்பது அறிவு

சுதந்தர இந்தியா

பண்டித ஜவாஹர்லால் நேரு

இந்தியா சுதந்தரமும் ராஜாங்கக் கௌரவமும் உள்ள குடியரசு எனப் பிரகடனம் செய்யவும், இப்பொழுது பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள பிரதேசங்கள், தற்போது பிரிட்டிஷ் சமஸ்தானங்களாயுள்ள பிரதேசங்கள், சுதந்தரமும் ராஜாங்கக் கௌரவமு முள்ள இந்தியாவுக்குள் இருக்க விரும்புகிற, பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் சமஸ்தானங்களுக்கும் வெளியிலுள்ள இந்தியாவின் இதர பகுதிகள் ஆகியவை எல்லாம், ஒரு யூனியனாக ஆனல், அதன் வருங்கால ஆட்சி முறைக்கு ஓர் அரசியல் அமைப்பு வகுக்கவும், அரசியல் நிர்ணய சபை திட சங்கல்பம் கொண்டுள்ளது.

இந்தப் பிரதேசங்கள், இப்பொழுது உள்ள எல்லைகளோடு இருந்தாலும் சரி, அல்லது அரசியல் நிர்ணய சபை தீர்மானிக்கிறபடி வேறு விதமாக இருந்தாலும் சரி, அரசியல் அமைப்புச் சட்டப்படி, சுயாட்சி அங்கங்களின் அந்தஸ்தை வகிக்கும்.

இம் மாதிரியான சுயாட்சிப் பிரதேசங்கள், மத்திய சர்க்காருடைய அதிகாரங்கள் போக, எஞ்சிய அதிகாரங்களோடு யூனியனுக்கு விடப்பெற்றுள்ள அதிகாரங்களையும், வேலைகளையும் தவிர, அல்லது யூனியனுக்கு இயற்கையாகவே உள்ள அதிகாரங்களும் அலுவல்களும் தவிர மற்ற எல்லா நிர்வாக, துரைத்தன அதிகாரங்கள் வகிக்க உரிமை பெற்றுள்ளன. சுதந்தரமும், தன்னரசுக் கௌரவமும் பெற்ற இந்தியா, அதனுள் அடங்கியிருக்கும் பல்வேறு பகுதிகள்,

நிர்வாக உறுப்புக்கள் ஆகியவற்றின் அதிகாரங்கள் யாவும் மக்களிடமிருந்து பெற்றவையே.

இந்தியாவிலுள்ள எல்லா மக்களுக்கும் சமூக, பொருளாதார, அரசியல் விஷயங்களில் சம அந்தஸ்து அளிக்கப் பெறும். எல்லோரும் சமம், அனைவரும் வாழ்க்கையின் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொண்டு, வாய்ப்புகள் பெற்று வாழலாம். சட்டத்துக்கும், பொது ஒழுங்குக்கும் முரண்படாமல், சுதந்தரத்தோடு எண்ணவும், பேசவும், எழுதவும், எவர் தலையீடுமின்றி மதச் சடங்குகள் செய்யவும் யாருக்கும் உரிமை உண்டு. தொழிற் சங்கம் கூடுதல், செயல்புரிதல் முதலியவற்றுக்கும் சுதந்தர முண்டு.

சிறுபான்மையினருக்கும், பிற்போக்கு இனங்களுக்கும், மலைஜாதியினருக்கும், போதிய பாதுகாப்பு அளிக்கப்பெறும்.

குடியரசைச் சேர்ந்த பிரதேசத்தின் ஒருமைத் தன்மையும், நாகரிக நாடுகளின் நீதிச் சட்டத்துக் கிணங்க குடியரசின் ஆதிபத்ய உரிமைகளும் பாதுகாக்கப்பெறும்; பழம் பெருமை வாய்ந்த நம் இந்தியா தேசம் தனக்குரிய கௌரவமான ஸ்தானத்தைப் பெற்று, உலகச் சமாதானத்தை நிலைநாட்டவும், மனித ஜாதி நலம் பெற வாழவும், மனப்பூர்வமாகத் தன்னால் இயன்றதைச் செய்யும்.

[இந்திய அரசியல் நிர்ணய சபையில் பண்டித நேரு கொண்டுவந்து, அங்கத்தினர்களின் ஏகோபித்த அங்கீகாரத்துடன் நிறைவேறிய லட்சியத் தீர்மானம்.]

*

அரசியல் நிர்ணய சபையில்...

மந்திரி சபைத் தூதுகோஷ்டியின் திட்டத்திற்குள்ளாகவே நாம் உண்மையான ஒற்றுமையையோ, அல்லது உண்மையான சுதந்தரத்தையோ, பொருளாதாரப் பாதுகாப்பையோ பெற முடியாது என்று நினைப்பவர்களும் இருக்கிறார்கள். தன்னம்பிக்கையும், தீர்க்க தரிசனமும் உள்ளவர்கள் சிறு சந்தர்ப்பத்தைக்கூடப் பயன்படுத்திக்கொள்கின்றனர்.

சுதந்தரத்தைப் பொறுத்தவரை, அபிப்பிராய பேதம் இருக்க முடியாது. கலாச்சாரம், மதம், இனம் முதலிய சகல விதங்களிலும் பிரிட்டனுடன் சம்பந்தமுள்ள இதர குடியேற்ற நாடுகளைப்போல இந்தியா ஒரு குடியேற்ற நாடாக இருக்க முடியாது.

—சர். எஸ். ராதாகிருஷ்ணன்

எழுத்துலகம்

ஈச்வர - அறிவோன்

எழுதுகோல்எ டுத்துப்போரில் இறங்குகின்ற விரர்காண் !
பழுதுசூழ்துப் பாக்கிவாளைப் பற்றிடாத விரர்காண் !
அமிழ்துகொண்டே எழுதுவார், அளவில்மொண்டே எழுதுவார் ;
அமைவுபூண, அணைவுபேச, அடித்துபேச வல்லர்காண் !

பசப்புமாக்கள் மெய்சிடுக்கக் கசப்பில்முக்கு கோல்கொடு,
அசைப்பிலாத விடுதலைக்க ரண்செய்தாக்கம் தேடுவார்.
பொசிப்பிலாத மக்கள்பேச்சை வகுத்துரைத்துக் காட்டியே,
சகத்தைஆள்வார் கண்டுஅஞ்சச் செய்யும்வல்ல நாவலர்.

மசிநனைந்து நோயினும்இ யம்முடங்கித் தேயினும்,
பசுமைபொங்கும் அவரின்குருதி நிணமும்கொண்ட பான்மையால்,
குடிமையுரிமை கொண்டமக்கள் மணியரங்கின் மீதிருந்(து)
இடிமுழங்கும் வலியசொற்கள் எரிநெருப்பின் வண்ணமாம்.

அரசர்முன்னும், அமைச்சர்முன்னும் அடித்துரைப்பர் ; ஆயினும்,
அரசழித்துத் துயர்பெருக்கும் அந்தஎண்ணம் அற்றவர்,
சுடுநெருப்பாய் உருவிப்பாயும் குண்டுபோலும் கோவினல்
கொடுமையாளர், தனிச்சையாளர் கொற்றம்சுட்டெ ரிப்பர்காண் !

பகலவன்றன் கதிர்கள்போலப் பாய்ந்துசெல்லும் சிந்தையர் ;
இகல்விசும்பி யங்கும்அஞ்சற் புள்ளின்வேகச் சிந்தையர் ;
அறிவுச்சூன்ய மாசுபோக்க, அண்டத்திக்கு எட்டிலும்,
அங்குமிங்கு மெங்கிருந்தும் அறிவுபாய்ச்சும் தீரர்காண் !

இருள்துடைத்த செய்கையால்இ டம்விடுத்த விரிவெலாம்
விதம்விதத்தில் செய்திகொண்டு திமுதிமுக்கப் பண்ணுவார்.
பரபரக்கும் செய்திதம்மின் திறம்துலக்கும் பான்மையால்,
இவர்கருத்தும் விள்ளுவர் ;எ வர்மறுக்க வல்லரே ?

இவரின்ஆற்றல் என்னசெய்யும் என்றுகண்டு கொண்டபின்,
உரிமைகொண்ட பேர்களும்,உ டைமைகொண்ட பேர்களும்
உரிமைவேட்கை தன்னைலஞ்சம் ஈந்துமாய்க்க எண்ணற்க !
அடிமைகொள்ளும் எண்ணம்உண்டேல், அதுவும்செய்ய எண்ணற்க!

எழுதுகோலை ஓச்சி, ஆட்சி புரியும்விரர் குரலினைப்
பழுதுசூழும் வறுமைவந்து சிறுமைசெய்து வாட்டலாம் ;
எழுமைக்கண்தி ரண்டசெல்வம் எழுத்தைக்கொல்ல வல்லதோ ?
வழுமைஆயும் தணிக்கைஅதனை வறளச்செய்ய வல்லதோ ?

The Fourth Avatar (நாலாவது அவதாரம்) : ஆசிரியர் : மஞ்சேரி எஸ். ஈச்வரன். சக்தி காரியாலய வெளியீடு. விலை ரூ. 1-0-0.

இந்தக் கவித் தொகுப்பின் ஒரு பாடலை ஸ்ரீ க. சு. அறிவோன் தமிழ்ப் படுத்தித் தந்திருக்கிறார்.

மனைவி அவசியமா?

●

கு.ப. நாராயணன்

"ஆம்!" என்று உடனே பதில் சொல்லக் கூடியவர்கள் இதைப் படிக்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் விஷயம் தெரிந்த, சராசரி மனிதர்கள்— பருவம் அடைந்துவிட்ட இளைஞர்கள், பருவம் கடந்துவிடாத பெரியவர்கள். "இல்லை!" என்று உடனே பதில் சொல்லக் கூடியவர்களும் இதைப் படிக்க வேண்டிய அவசிய மில்லை: அவர்கள் விஷயம் தெரியாதவர்கள்; அல்லது, விஷயத்தைத் தப்பாகத் தெரிந்துகொண்டு, அவஸ்தைப் படுகிறவர்கள் — பிஞ்சிலே பழுத்த துறவிகள், அடிபட்டு நைந்துபோன குடும்பஸ்தர்கள்.

இப்படிப்பட்ட நண்பர்கள், இதைப் படிப்பதை இத்துடன் நிறுத்திக்கொண்டு, அடுத்த பக்கங்களில் உள்ள சுவையான வேறு விஷயம் எதையாவது படிக்கத் தொடங்குவது நல்லது.

"அவசிய மில்லை யென்று சொல்ல வரவில்லை......ஆனல்... பாருங்கள்!—" என்று இழுத்து நிறுத்திவிட்டு, மர்மப் புன்னகையை இதழ்க்கடையில் நெளிய விட்டு, அது நிலை பெறுமுன்னே, விஸ்வாமித்திரச் சொடுக்கைப் பொடுக்கென இதழ்கள் பூராவும் அப்பி அடித்து, விரக்தி கலந்த வெறுப்பு வடுவை, நெரித்த புருவ வளைவில், முகத்தில் நட்டங் குத்தலாகத் தொங்கவிடுகிறார்களே, விஷயம் தெரிந்த சமுசய வாதிகள்!—அவர்களை நம்முடைய கட்சிக்குத் திருப்புவதற்காகவே இந்தப் பகிரங்கப் பேச்சு:

எனக்கு இரண்டு நண்பர்கள். எல்லா வகையிலும் ஆப்தமானவர்கள். இரண்டு பேரும் கவிஞர்கள், கதாசிரியர்கள், கலைஞர்கள், பெண்மை உபாசகர்கள். பெண்மையின் அழகை ரசிக்கும் பக்தர்கள், பெண்களைப் பற்றிப் பெண்களைவிட அதிக நுணுக்கமாகத் தெரிந்துவைத் திருப்பவர்கள். இரண்டுபேருடைய எழுத்துக்களிலும் பெண்மை கனிந்து சொட்டும். படிக்கப் படிக்க நமக்கு நாக்கில் நீர் ஊறும். ஆனல்,—இதுதான் வேடிக்கை! —பெண்களை வெறுப்பதில் இரண்டு பேருமே சாட்சாத் பட்டினத்துப் பிள்ளையாரின் நேர் வாரிசுகள்தான்! பழகுவதற்கு இனியவர்களான இவர்கள் இரண்டுபேரும் இப்படித் தடிப் பிரம்மச்சாரிகளாய் இருந்துவருகிற ஒவ்வொரு நிமிஷமும், வேறு இரண்டு அணங்கு நல்லாரின் வாழ்வை வீணுகப் பாழடித்து வருகிறது. இதைக் காணக் காண எனக்கு வருத்தம் வருத்தமாய் வரும். எத்தனையோ முறை நல்ல வார்த்தையாய்ச் சொல்லி யாச்சு. சமீபச் சில காலமாக, நல்ல வேளை, இவர்களது தடித்தனமான வெறுப்பு மாறத் தொடங்கி யிருக்கிறது. பெண்களை, எதிர்பாராத வகையில் எல்லாம் இவர்கள் அச்செழுத்திலும், வாய் மொழியிலும் விளாசு விளாசென்று

"பெண்டாட்டி கால் விலங்கு, பிள்ளை ஒரு சுள் ஆணி"—என்று பாட்டுப் பாடுகிறவர்களை நாம் பார்த்திருக்கிறோம். ஆனலும் இந்த விலங்கும், ஆணியும் ஊழி ஊழி காலமாகச் செலவாணி யாகிவரவே செய்கின்றன. ஏன் இப்படி?

விளாசி வந்ததன் அந்தரங்கக் காரணமும் சமீபத்தில்தான் எனக்குத் தெரியவந்தது. ஆண்களில் இவர்கள் மாதிரித் தடிப் பிரம்மச்சாரிகள் இருப்பதுபோல், பெண்களிலும் தடிப் பிரம்மச்சாரிணிகள் இருக்கிறார்கள். இந்த இரண்டு தினுசுத் தடி வர்க்கமும் மூளை வளர்ச்சி ஒன்றையே பெரிதாக மதித்து, வெள்ளக் காடாய்ப் புத்தகங்களைப் படித்துத் தேர்ந்தவர்கள். காரியத்தில் நடவாத, அப்பழுக்கில்லாத உம்பர் வாழ்க்கை வாழ விரும்புகிறவர்கள். தமது சக மனிதர்கள் குடும்பச் சாகரத்தில் படும் தொல்லையைக் கண்டு, பயந்து போன கோழைகள். லட்சியப் பெண்ணையும், லட்சிய ஆணையும் தேடித் திரிந்து, குறைபட்ட பெண்ணையும், குறைபட்ட ஆணையுமே கண்டு கண்டு, ஏமாந்து, மனம் சலித்துப் போனவர்கள். கவிதையில், "கம்மியன் கையால் அடித்துக் காய்ச்சி வெட்டித் தீராமல், செம்மலரோன் கைம்மலரால் செய்துவிட்ட பொற் பாவை"களான பெண்ணரசிகளைக் கண்ட இவர்கள், நிதரிசன வாழ்க்கையில் "சண்டாளி சூர்ப்பனகை, தாடகையைப் போல் வடிவு கொண்டாளைப் பெண்டென்று" கொள்ளச் சம்மதிக்காமல் இருப்பதில் ஆச்சரிய மில்லை.

நம்முடைய லட்சியம் மிக உயர்ந்ததாகத்தான் இருக்க வேண்டும். லட்சியத்தைக் கூடிய வரை பூர்த்தி செய்யவும் முயல வேண்டியதுதான். ஆனால், அதற்காக நிதரிசனமான உண்மைகளை மறந்துவிட்டு, மனித இயல்பின் சாத்தியா சாத்தியங்களை மறந்துவிட்டு, வெறும் பகற் கனவு கண்டுகொண்டேயிருந்தால் காரியம் ஆகுமா என்ன?

மனித மனம், மனித உடம்பை விட அதிக ஆற்றல் உடையது. புறக் கண்ணால் பார்ப்பதற்கும் அகக் கண்ணால் பார்ப்பதற்கும் நிரம்ப வித்தியாசம் உண்டு. மனித உடம்பில் தோன்றும் வழுக்களும் குறைபாடுகளும் நிறக் கோளாறுகளும், வடிவ அமைப்பு இசைகேடுகளும் கவிஞனின் சொற் படத்திலோ, கலைஞனின் வண்ணத் திரையிலோ, சிற்பியின் செயிர் தீர்ந்த சலவைக் கல்லிலோ இருக்க மாட்டா. ஆனால், சில சில அபூர்வமான சந்தர்ப்பங்களில், கேவலம் மனிதச் சிருஷ்டிகளான கவிதை, கலை, சிற்ப உருவங்களைவிட இயற்கைச் சிருஷ்டிகளான நடமாடுங் கோவில்கள் (மனிதர்கள்) ஒப்புயர்வற்றுச் சிறந்து விளங்கி விடுவது உண்டு. அத் தகைய அபூர்வச் சிருஷ்டியே தனக்கு மனைவியாக அமைய வேண்டுமென்று எந்த ஆணும் விரும்பத்தான் செய்வான். ஆனால், எல்லா ஆண்களுமே அப்படி விரும்பத் தொடங்கி, அந்த விருப்பத்தை நிறைவேற்றினால் நிறைவேற்றிக் கொள்வேன், இல்லாவிட்டால், தடிப் பிரமச்சாரியாகவே இருந்து சாவேன் என்று பிடிவாதம் பிடித்தால், உலகத்தில் குழந்தை குட்டிகள் எப்படி உண்டாகும்? ஆண்டவன் படைத்த இதர சாதாரணச் சிருஷ்டிகளின் கதி என்ன? நல்ல வேளை, தடிப் பிரமச்சாரிகளும், தடிப் பிரமச்சாரிணிகளும் எந்தக் காலத்திலும் பலமற்ற, செல்வாக்கற்ற சிறுபான்மைக் கோஷ்டியினராகவே இருந்து வருகிறார்கள். காலப் போக்கில், இவர்களில் பெரும்பாலார், "உலகத்

தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும் கல்லார் அறிவிலாதார்'' என்ற உண்மையை உணர்ந்து, காலா காலத்தில் குடியும் குடித்தனமு மாக ஆய்விடுகிறார்கள்.

மனிதன் சமூகப் பிராணி. பிரமச்சாரிகளும் சமூகப் பிராணிகள்தான். சமூகத்தில் சேர்ந்து வாழ்வதற்கு, அது விதிக்கும் வரியை அதனிடம் செலுத்தி ஆக வேண்டும். குழந்தைப் பருவம் முதல் முதுமைப் பருவம் வரைக்கும், ஒவ்வொரு கட்டத்திலும், ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே நெருங்கிய, தவிர்க்க முடியாத, தொடர்பு இருந்து வருகிறது.

நான் என் வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கும் போது, அதற்கு வேண்டிய வசதிகளைச் சமூகத்தினிட மிருந்து கடனாகப் பெற்றுக் கொள்கிறேன்: தாயின் முலை யுண்டு வளர்கிறேன். தங்கை, தமக்கையின் கை கோத்துச் சமூகக் கோட்டைக்குள் நடமாடுகிறேன். எல்லாரும் எங்களைக் கவனிக்கிறார்கள். என் எதிர் காலத்தைப் பற்றிப் பலரும் பல மாதிரி பேசுகிறார்கள். உரிய காலத்தில், கன்னி ஒருத்தியின் மேல் என் கண் விழுகிறது. கண்ணொடு கண் இணை நோக்கு ஒக்கின்றன. காதல் இருவர் கருத்து ஒருமித்து, ஆதரவு பட்டதே இன்பம் என்று கவிதை பேசித் துள்ளுகிறேன். கடன் வசூலாவதற்கு வழி பிறந்து விட்டதென்று சமூகம் சந்தோஷப்படுகிறது. காதலியை மனைவியாக அடைகிறேன். சமூகம் திருப்தி கொள்கிறது. சம்பாதிக்கிறேன். குழந்தை குட்டிகளைப் பெறுகிறேன். சமூகப் பணி புரிகிறேன். சமூகத்தின் கடனை வட்டியும் முதலுமாக அடைக்கிறேன். சமூகம் என்னைப் பாராட்டுகிறது.

ஊட்டி வளர்த்த தாய், தகப்பனை ஊட்டி வளர்க்கிறேன். என் கூட ஓடி ஆடித் திரிந்த சகோதரிக்கு வாய் உபகாரம், கை உபகாரம் செய்து, உடற்பிறப்பால் அவளுக்குத் தோள் வலிமை கொடுத்து உதவுகிறேன். என் இளமைக் காலத்தில் காதலியாயிருந்த என் மனைவி எனது கடைசிக் காலம் வரைக்கும் ''அன்னை தயையும், அடியாள் பணியும், மலர்ப் பொன்னி அழகும், புவிப் பொறையும், மின்னல் இடை வேசி துயிலும், விறல் மந்திரி மதியும்'' பூண்டு என்னுடன் கை கோத்து வழி நடக்கிறாள்.

நடு நடுவில், எங்களுக்குள் சண்டை, சச்சரவு இருக்கத்தான் இருக்கும். நாங்கள் இருவரும் குறைபட்ட மனித ஜன்மங்கள்தான்; தேவர்க ளல்ல. கோப தாபங்கள் வரத்தான் வரும்: நாங்கள் முற்றும் தெரிந்த ஞானிகளல்ல; கொஞ்சங் கொஞ்சமாய், அடிபட்டு அடிபட்டுத் தெரிந்து, தேறி வரும் வாழ்க்கைப் போர் வீரர்கள்.

கணவனும், மனைவியும் ஒருவர் சுக துக்கங்களை மற்றவர் பகிர்ந்துகொண்டு, அனுதாபத்துடனும், தயவு தாட்சணியத்துடனும், பரந்த மனோ பாவத்துடனும் பழகி வந்து, பரஸ்பரம் மனமார ஒத்துழைத்து, காரியங்களைச் சரிக்கட்டிக்கொள்ள முயன்றால், சம்சார சாகரம் முழங்கால் ஆழமுள்ள குளிர்ந்த நீர் ஓடையாக மாறிவிடும்.

பெண்மையை விரும்புகிறவன் பெண்மையின் சாற்றை மட்டும் பிரித்துக் குடித்துவிட்டு, அதன்

சக்கையை உமிழ்ந்து தள்ளிவிட முயலக் கூடாது. பெண்மையை உள்ளது உள்ளபடி பூராவாக ஏற்று, அனுபவிக்கத் தைரியமில் லாதவன் சமூகக் கோழைதான்.

ஆண், அறிவைக் கொண்டு வாழ்பவன். பெண், உணர்வைக் கொண்டு வாழ்பவள். உணர்வி லிருந்துதான் உணர்ச்சியும் அறி வும் உண்டாகிப் பண்படுகின் றன. அறிவுக்கும் உணர்ச்சிக் கும் அடிப்படையா யிருப்பது உணர்வுதான். இவை மூன்றும் கலவாத ஆணோ, பெண்ணோ இல்லை. ஆண்தன்மை திண் ணிய வலுப் பெற்றது மலை போன்ற அழகும், உபயோகமும் உடையது. ஆணின் அழகு பளிச்சென்று, எடுத்த எடுப்பில் கண்ணைக் கவராது. நெடுங் காலம், நிரந்தரமாய் இருந்து வந்து, அரிய பெரிய காரியங் களைச் சாதித்துக் கொள்ளும் சக்தி வாய்ந்தது. பெண் தன்மை மென்மை வலுப் பெற் றது. மலர் போன்ற அழகும், உபயோகமும் உடையது. கண் களில் பட்ட மாத்திரத்தில் புல னுக்கு இன்பந் தந்து, அதைச் சடக்கென்று இழுத்துவிடும். உடனுக்குடன் உபயோக மாகும். காலையில் மலர்ந்து, மாலை யில் வாடிப் போகும் பான்மை யது. மலைப் பரப்பு எங்கணும் பூத் துக் குலுங்கி, பற்பல விசித்திர வண்ணங்களை அள்ளிப் பரப்பக் கூடியது. கணத்துக்குக் கணம் வெவ்வேறு நிற பேதங்களைத் தீட்டி அழித்துத் தீட்டி அழித் துப் புதுப் புது வர்ண ஜாலங்களை அள்ளிச் சொரிந்த வண்ணம் இருப்பது.

உலகம் தாய்ச் சுதி. கணவன் அதனோடு இணைந்து இழைகிற ராக ஆலாபனம். இந்த ராகத் தைச் சுதியோடு லயப்படுத்தி அதைத் தனித் தன்மை வாய்ந்த ஒரு பாட்டாக உருவப்படுத்துகிற தாளந்தான் மனைவி. மனைவி யோடு ஒத்துப் போகாத பாட் டுத் தப்புத் தாளத்தால் தறி கெட்டுச் சுதிகெட்டுப் போய், அபசுரம் பேசும்.

மணமாகாதவர் உலகச் சுதி யோடு இசைவு பெற்று, வாழ்க்கை ராகத்தை அற்புதமாய் இசைக்க முடியவே முடியுந் தான். ஆனால், வெறும் ராக ஆலாபனையை நெடு நேரம் சகிக்க முடியாது. அலுத்துப் போகும். கச்சேரி பூராவும் ராகமே பாடிக்கொண் டிருந் தால், கேட்கச் சகிக்காது. ஜில் லென்று தாளம் சேர, பக்க வாத்தியங்கள் ஒத்து முழங்கப் பாடும்போது, பாடகனுக்கும் குஷி பிறக்கும், நமக்கும் ரசிக் கும். தாளம் தப்பிப்போகிறது என்பதற்காகத் தாளமே வேண்டாமென்று சொல்லும் பாடகனை நாம் குறைவாகத் தானே மதிக்கிறோம்? பாட்டுக் குத் தாளம் தேவை யில்லை யென்று யாராவது சொல்ல முடியுமா? அப்படிச் சொல்லத் தான் சொல்லுவார்களா? பழ கிப் பழகித்தான் ராகம், தாளம், சுதி எல்லாம் பிடிபட வேண் டும்.

இந்தச் சங்கீத உதாரணம் வெறும் குட்டிக் கதை உதா ரண மல்ல. வாழ்க்கையே ஒரு முடிவற்ற சங்கீதம்தான். சங்கீ தத்தின் அடிப்படை காமம். காமம்தான் ஜீவச் சக்தி.

வெறும் ராக ஆலாபனை செய் யும் பிரமச்சாரிகள், நடு நடுவில், தம்மையும் அறியாமல், தாளத் தின் ஒத்தாசையை நாடுவ துண்டு; இரவல் தாளம் பெறுவ

துண்டு; சொற்ப நேரத்துக்கு வாடகைக்குத் தாளம் அமர்த்திக்கொள்வ துண்டு. இரவல் தாளம், பிறன் மனைவி யுள்ள தாளம், வாடகைத் தாளம், எல்லாம் பூரணமான, நிரந்தரத் திருப்தி தரா. சொந்தத்தில் தாளம் வைத்துக்கொண்டு, பாடப் பயின்றால்தான் முறையாய்ப் பாட வரும். தாளத்தை ஒழுங்காய்ப் பேணி வளர்த்து வர வேண்டும். சுதியோடு ஒத்து ஒலி தரும்படி அதைச் சரியாய் முடுக்கி வைத்திருக்க வேண்டும். இந்த முயற்சிகளை யெல்லாம் செய்யச் சங்கடப்பட்டுத் தாளமே வேண்டாம் என்று சொல்லுவது பொறுப்பற்ற, திறமையற்ற, கையாலாகாத் தனம் அல்லாமல் வேறென்ன?

எல்லாரும் சுவாமி விவேகானந்தர்களாய்த் திகழ முடியாது. எல்லாரும் கலியாணம் பண்ணாமல் நல் வாழ்வு வாழ முடியாது. விவேகானந்தருக்குக் குருவாயிருந்த சாட்சாத் ராமகிருஷ்ண பரமஹம்சரே மனையறம் பூண்ட, ஒப்பற்ற வாழ்க்கை இசைவாணர் என்பதை இந்தப் பிரமச்சாரிப் பித்துக்கொள்ளிகள் மறந்துவிடக் கூடாது.

வாலிபனின் முடுக்கை, பிரமச்சாரியின் தறிகெட்ட வேகப் போக்கை நிதானப்படுத்துகிறவள் மனைவிதான். இக வாழ்வுக்கு அஸ்திவாரம் போட்டு, மனை எழுப்பி, அந்த மனைக்குத் தலைவியாய், நம் மக்களுக்குத் தாயாய், நமக்குக் காதலியாய், வாழ்க்கைப் போரில் நமக்கு உற்ற துணைவியாய் அமைகிறவள் மனைவிதான். லௌகிக வாழ்வில் நமக்குப் பொறுப்பு உணர்ச்சியை உண்டாக்குகிறவள் மனைவிதான். மனைவியைப் பெற்றவன் சமூகத்தில் சங்கோஜமில்லாமல் எங்கும் சர்வ சுதந்தரத்துடன் போக வரக் கூடிய தகுதியையும், சுதந்தரத்தையும் பெறுகிறான். "இல்லாள் அகத் திருக்க இல்லாதது ஒன்றில்லை". சம்சாரியைத்தான் சமூகம் நம்பும். சம்சாரி வெறும் பகற் கனவு காணும் பித்தனல்ல. வாழ்க்கைப் போரில் நேரடியாக ஈடுபட்டுச் சமூகப் பரீட்சையில் தேறி வருகிற பிரத்தியட்ச ஞானி அவன்.

இத்தனையும், இன்னும் பலவும் எத்தனையோ முறை என் பிரமச்சாரி நண்பர்களுக்குச் சொல்லியாச்சு. உங்கள் நண்பர்களிலும் இப்படிப்பட்டவர்கள் இருக்கலாம். நீங்களும் சொல்லிப் பாருங்கள்.

பருவம் அடைந்த பெண்கள் கலியாணம் ஆகாமல் வீட்டில் இருந்து வந்தால், அது வீட்டுக்கு நல்ல தில்லை என்பது நமக்குத் தெரியும். அதேபோல், பருவமடைந்த ஆண்களும் கலியாணம் ஆகாமல் இருந்து வருவது வீட்டுக்கும், சமூகத்துக்கும் நல்ல தில்லை.

என்னையும் உங்களையும் பொறுத்த மட்டில், "மனைவி அவசியமா?" என்று சும்மா பேச்சுக்காகக் கேட்கத் துணிகிற காரியமே அபத்தமானது. மனைவியின் அவசியத்தை நாம் ஏற்கெனவே உணர்ந்து, செயலில் இறங்கிவிட்டவர்கள், அல்லது செயலில் இறங்கப் போகிறவர்கள். இந்தப் பித்துக்கொள்ளிப் பிரமச்சாரிகளுக்குங்கூட மனைவி அவசியம்தான் என்று எனக்கும் உங்களுக்கும் இப்போது இன்னும் திட்ட வட்டமாகத் தெரிந்துவிட்டது. "கலியாணம் எப்போது?" என்பதுதான் இப்போது எழுகிற பிரச்னை, இல்லையா?

"லக்ஸ்
டாய்லட் சோப்பை
உபயோகிப்பதுதான்
என் எளிதான
அழகுபடுத்திக்
கொள்ளும் முறை"
என்றுகூறுகிறார்
மாயா பானர்ஜி

லக்ஸ
டாய்லட் சோப்பின்
நுரையை
தாராளமாக
சருமத்தின் மேல்
தடவுகிறேன்-

சுத்தமான,
குளிர்ந்த
ஜலத்தில்
கழுவுகிறேன்-

ஒரு சினிமா நட்சத்திரத்திற்கு அப்பழுக்கற்ற சருமம் சௌந்தரியத்தை கொடுப்பதுமல்லாமல் அவர் வாழ்க்கைக்கே ஒரு விலை மதிக்கமுடியாத ஆஸ்தியுமாகிறது. அதனலேயே, இந்தியாவிலுள்ள கியாதிபெற்ற சினிமா நட்சத்திரங்கள் எல்லோரும் தங்கள் அருமையான வனப்பை லக்ஸ் டாய்லட் சோப்பினுல் பாதுகாத்துக் கொள்ளுகிருர்கள். நீங்களே இச் சுலபமான அழகுபடுத்திக் கொள்ளும் முறையை உங்கள் விட்டில் வைத்துச் செய்யலாம்—30 நாட்கள் முயற்சித்துப் பாருங்கள்—இச் சோப்பின் சுறுசுறுப்பளித்து சுத்தம் செய்யும் சக்தியைக் கண்டு மகிழ்விர்கள்.

பின்பு,
உலர்ந்த
மிருதுவான
துண்டினுல்
முகத்தை
துடைக்கிறேன்

☆ சினிமா நட்சத்திரங்கள்
விரும்பும்
அழகையளிக்கும் சோப் ☆

 LEVER BROTHERS (INDIA) LIMITED

நேர்த்திக்கும்
உறுதிக்கும்

சாரதி
கைத்தறி நெசவுகள்

ஏ. ஆர். பி. சாரதி
தபால் பெட்டி. நெ. 45
மதுரை

பட்டு
என்றால் மிருதுவாயுள்ளது

அது மைசூர் பட்டானால் ச்பர்சத்திற்கு மிருதுவாயுள்ளதுடன் உயர்ந்த நெசவு, அதிகநாள் உழைப்பு, மேலான ரகம் எல்லாம்சேர்ந்து மிக அழகானதாகும்.

மைசூர் கவர்ன்மென்ட் தயாரிப்பு   கவர்ன்மென்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.
MSK-II-TM

கிராமக் கைத்தொழில்

மகாத்மா காந்தி

விஷயங்களை ஆழ்ந்து யோசிக்கும் ஒரு நண்பர் கிராமக் கைத்தொழில்கள் சம்பந்தமாகக் கீழ்க் கண்டவாறு எழுதியிருக்கிறார் :

தாங்கள் கூறும் யோசனைகளெல்லாம் நல்லவைகளாகவே இருக்கின்றன. ஆனால், அந்த யோசனைகளை ஏற்று நடத்த வேண்டுமானல், ஜனங்களிடம் சன்மார்க்க உணர்ச்சி அதிகமாக இருக்க வேண்டும். சாதாரணமாக மனிதர்களுடைய நடத்தைகளெல்லாம் அவசியத்தைப் பொறுத்தும், சுயநலத்தைப் பொறுத்துமே நடைபெற்று வருகின்றன. ஆதலால், சன்மார்க்க உணர்ச்சியை மட்டும் ஆதாரமாகக் கொண்டு வகுக்கப்படும் எந்தப் பொருளாதாரத் திட்டமும், வெகு நாளைக்கு நிலைத்து நிற்க மாட்டாது. இத்தனை வருஷங்களாக எவ்வளவோ முயற்சிகள் செய்து வந்தும், இன்னும் கதர்த் திட்டமானது அதிகமான பயனைக் காட்டிவிடவில்லை. அதற்குக் காரணம், உங்களுடைய ஊழியர்களும், பிரிட்டிஷ் வியாபாரிகளும், மில் முதலாளிகளும், ஜவுளி வியாபாரிகளும் மனிதனுடைய முக்கியாம்சமாக இருக்கும் சுயநலத்தைப் பொறுத்தே தங்கள் காரியங்களைச் செய்து வருவதுதான்.

மனிதர்கள் உண்மையையும் நாணயத்தையும் கடைப்பிடித்தே நடக்கக் கூடிய சமூகத்தை ஏற்படுத்த வேண்டுமென்றே நானும் விரும்புகிறேன். ஆனால், வியாபார உணர்ச்சியையும், லாப லட்சியத்தையும் அறவே ஒழித்து விடும்வரை, அத்தகைய சமூகத்தை அமைப்பது சாத்தியமில்லை. இப்பொழுது உணவு, போக்குவரத்து போன்ற பல விஷயங்களில் சர்க்கார் கட்டுப்பாடு ஏற்படுத்தி யிருக்கிறார்கள். பெரிய முன்னேற்றமான காரியங்களைச் செய்வதற்கு இது தக்க சமயமாகும்.

பம்பாய்ச் சர்க்கார் கிராமக் கைத்தொழில்கள் சம்பந்தமாக ஒரு கமிட்டி ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அதில் திரு. மனு சுபேதாரும், திரு. லட்சுமிதாஸ் அஸாரும், திரு. தோத்ரேயும் அங்கத்தினர்களா யிருக்கிறார்கள்.

என்னுடைய திட்டம்: ஒரு கிராமத்தையோ, இரண்டு மூன்று கிராமங்களைச் சேர்த்தோ ஒரு வட்டமாக வைத்துக் கொண்டு, அதன் ஜனத் தொகையைக் குழந்தைகள், பெண்கள், வயதானவர்கள், உடல் பலம் உள்ளவர்கள், ஆரோக்கியமுள்ள இளைஞர்கள் என்று வரிசை பிரிக்க வேண்டும். அதன் பிறகு, ஒழுங்காக வேலைக்கு வர முடியாதவர்கள், வருஷ முழுதும் வேலை செய்ய முடியாதவர்கள், வேலை செய்வதற்கு வேண்டிய சாதனங்களோ, சாமர்த்தியமோ இல்லாதவர்கள் என்று பிரிக்க வேண்டும்.

களைப்பு உண்டாக்காத வேலையா யிருந்தால், குழந்தைகள் தினந்தோறும் மூன்று,

"வியாபார உணர்ச்சியையும், லாப லட்சியத்தையும் அறவே ஒழித்து" கிராமக் கைத்தொழில்களை வளர்க்க ஒரு புதுத் திட்டத்தை ஒரு பிரமுகர் காந்திஜிக்கு எழுதியுள்ளார். அதற்குக் காந்திஜி அதைப் பற்றித் தம்முடைய அபிப்பிராயத்தையும் தெரிவித்திருக்கிறார்: தமிழ் ஹரிஜனிலிருந்து.

நான்கு மணி நேரம் சுலபமாக வேலை செய்ய முடியும். மீதியுள்ள நேரத்தில் அவர்கள் பள்ளிக் கூடம் சென்று படிக்கலாம்.

வேலை ஆரம்பமாகும் தினத்திலிருந்து குழந்தைகளுக்குத் தினந்தோறும் 1 அணு வீதமும் பெரியவர்களுக்கு 4 அணு வீதமும் கூலி கொடுக்க வேண்டும். அதிகத் திறமை வந்த பிறகு, குழந்தைகளுக்கு 5 அணு வரையிலும், பெரியவர்களுக்கு 8 அணு வரையிலும் கூலியை உயர்த்தலாம்.

ஒரு கிராமத்தில் ஒருவகையான பொருளைத்தான் உற்பத்தி செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், இரண்டு மாதக் காலத்தில் திறமை அடைந்துவிடுவார்கள். தவறுகள் செய்வது நின்று போகும். உற்பத்தி செய்யும் பொருள் உற்பத்தி செய்யும் இடத்திலேயே உபயோகப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். உற்பத்திக்கு வேண்டிய மூலப் பொருள்களைக் கொண்டு போய்க் கொடுக்கவும் வேலை செய்பவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு இரண்டு மூன்று நிபுணர்களை நியமிக்கவும் சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும். உற்பத்தியாகும் பொருள்களை ஜனங்கள் வாங்கி உபயோகிக்கும்படிச் சர்க்கார் பிரசாரம் செய்யவேண்டும். ஜனங்களுக்கு மலிவாகக் கிடைக்கும்படியான முறையில் விற்பனை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்த விதமாக, உற்பத்தி செய்தால் அனேகம் பொருள்களைப் பெரிய மில்களில் உற்பத்தி செய்வதைவிடக் குறைந்த விலைக்கு உற்பத்தி செய்ய முடியும். அதற்கான காரணங்களில் ஒன்று கூலியில் மிச்சப் படுவதாகும்.

தாய்மார்களின் ஊதியம்

ரஷ்ய நாட்டில் அதிகக் குழந்தைகளைப் பெறும் தாய்மார்களுக்கு அரசாங்கத்திடமிருந்து உபகாரச் சம்பளம் கிடைக்கிறது: இரண்டு குழந்தைகளையுடைய தாய், மூன்ருவது குழந்தையைப் பெற்றெடுத்தால் 550 ரூபாய் பெறுகிருள்.

மூன்று குழந்தைகளையுடைய தாய் நான்காவது குழந்தையை ஈன்றெடுத்தால் மொத்தமாக 1750 ரூபாயும் மாதா மாதம் 100 ரூபாயும் பெறுகிருள்.

நாலு குழந்தைகளையுடைய தாய் ஐந்தாவது குழந்தையைப் பெற்றெடுத்தால், மொத்தமாக 2250 ரூபாயும் மாதா மாதம் 150 ரூபாயும் பெறுகிருள்.

இம் மாதிரியே 10-வது குழந்தையைப் பெற்றெடுக்கிற தாய் மொத்தமாக 4750 ரூபாயும், மாதா மாதம் 350 ரூபாயும் பெறுகிருள்.

ஒவ்வொரு குழந்தைக்கும் அதனுடைய ஐந்தாவது வயதுவரை மாதா மாதம் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. இந்தப் பணத்தில் குழந்தைக்கும் தாய்க்குமே உரிமையுண்டு. தகப்பன்மார்களுக்கு இதில் ஒருவித பாத்தியமும் கிடையாது.

அப்படி மிச்சப்படுவதை வேலை செய்வோருடைய நன்மைக்காகச் செலவு செய்ய வேண்டும். உடல் பலமுள்ளவர்கள், நாளுக்கு நாள், அதிகமாக விவசாயம், ரயில்வே போன்ற வேலைக்கு போய்விடுகிருர்கள். அதனுல், குறைந்த தொகையினரே கிராமக் கைத்தொழில்களைச் செய்கிருர்கள். உற்பத்தியும் குறைந்துவிடுகிறது.

ஆனுல், இந்தத் திட்டத்தை அனுசரித்தால், கோடிக்கணக்கான மக்களுடைய வருமானம் அதிகப்படும். அதன் காரணமாக, சுய மரியாதைக்குப் பங்கமின்றி அவர்கள் காலம் தள்ள முடியும்.

இது, சமூக இன்ஷூரன்ஸ் திட்ட மாகும். இந்தத் திட்டம் நம்முடைய இந்தியப் பண்பாட்டிற்கு ஒத்ததாகும். 35 வருஷ அனுபவத்தைக் கொண்டே இதை வகுத்திருக்கிறேன். இந்தத் திட்டத்தை நடத்தினுல், எவ்விதப் பயிற்சியும், விசேஷத் திறமையும் இல்லாதவரும்கூட ஒரு விதமாக ஜீவனம் செய்ய முடியும். அதிகமாகச் சம்பாதிக்க விரும்புகிறவர்கள், அதிக ஊதியம் தரக்கூடிய வேலைகள் கிடைத்தால், அவற்றில் ஈடுபடலாம். ஆனுல், யாரும் வேலை இல்லையே என்று திண்டாட வேண்டிய அவசிய மில்லை.

குழந்தைகள் இந்தத் திட்டத்தின் மூலமாகத் தொழிலும் கற்றுக்கொள்வார்கள்; படிப்பும் கற்றுக்கொள்வார்கள்.

என் திட்டத்தின் முக்கியமான சில அம்சங்கள்: நமது நாட்டில் வேலைத் திறமை இல்லாதவர்கள் அதிகம். அவர்களுக்கு என் திட்டத்தின் மூலம் போதிய திறமையுண்டாகும்.

போக்கு வரத்து, கணக்கு வைத்தல், சாமான்களைச் சேர்த்து வைத்தல் முதலிய காரியங்களை, என் திட்டப்படி, அரசாங்கமே நடத்தும். அதனுல், சாதாரணமாக நம் வாழ்வில் காணப்படும் வியாபார நோக்கம் முற்றிலும் ஒழிந்துபோகும்.

இந்தத் திட்டத்தின்படி, ஒரு கோடிப் பேர் வேலை செய்தால், அவர்களுக்குத் தினந்தோறும் 25 லட்சம் ரூபாய் கிடைக்கும். அதனுல், வாழ்வில் அவர்கள் புதிதாக உற்சாகம் பெறுவார்கள். என் திட்டப்படி வேலை செய்தால், வருஷந்தோறும் இரண்டு கோடி ரூபாய் பெறுமான பொருள் உற்பத்தி செய்துவிடுவார்கள்.

சர்க்காரே மூலப்பொருள்களை உற்பத்தி செய்கிறவர்களிடமிருந்து வாங்குவதால், மலிவான விலைக்கு வாங்க முடியும். சர்க்கார், உற்பத்திச் செலவு மட்டுமே கொடுத்து வாங்கமுடியும்.

ஏதேனும் நிபுணருடைய உதவி தேவைப்படும் பிரச்னை எழுந்தால், குறிப்பிட்ட காலத்துக்கு அவரை நியமித்து, அவருக்கு ஊதியம் கொடுக்கலாம்.

கணக்கு எழுதுகிறவர்கள், சாமான்கள் வைத்திருக்கும் ஸ்டோர்களை பார்த்துக் கொள்கிறவர்கள் முதலியவர்களைக் கொண்டே குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்யலாம்.

இரண்டு மூன்று வருஷங்கள் கழிந்தால், உபாத்தியாயர் பெரிய பையன்களுக்கும், பெரிய பையன்கள் சிறிய பையன்களுக்குமாகக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்யலாம்.

இந்த உபாத்தியாயர், சாதாரணமாக உபயோகிக்கப்பெறும் ஐம்பது மருந்துகளை வைத்துக் கொண்டு, கிராமத்தி லுள்ள ஜனங்களுக்கு மிகவும் மலிவான விலைக்கு விற்கலாம். உதாரணமாக, டிங்ச்சர் அயோடின் போன்ற இங்கிலீஷ் மருந்துகளையும், கடுக்காய் போன்ற ஆயுர்வேத மருந்துகளையும் இப்படி வைத்துக்கொண்டு கொடுக்கலாம். இந்த மருந்துகளைச் சர்க்காரே ஒவ்வொரு கிராமத்துக்கும் அனுப்பிவைக்க வேண்டும்.

சாதாரணமாகத் தினசரி உபயோகத்துக்கு வேண்டிய கீழ்க்கண்ட பொருள்களை என் திட்

டப்படி கிராமங்களில் உற்பத்தி செய்யலாம் :

துணி	செருப்பு
காகிதம்	பாத்திரம்
பென்சில் வகை	கயிறு
ஊசி வகை	பொம்மை
சோப்பு	கட்டில்
தீக்குச்சி	சீப்பு
தகர டப்பா	கத்தி
மசாலைப் பொடி	தோல் சாமான்
அப்பளம்	மை
மண் பாண்டம்	இசைக் கருவி
பித்தான்	பௌண்டன் பேனு
கண்ணுடி வளையல்	சைக்கிள்
புத்தகம் கட்டுவது	கடியாரம்
ஆணி	பனியன்
வெல்லம்	மெழுகுத் திரி
தைலம்	கண்ணுடி
ஃபினுயில்	அரக்கு
தொப்பி	கோந்து
மரச் சாமான்	

என் கருத்து :

மேற்கண்ட கடிதம் மிக்க கவர்ச்சியுடையதா யிருக்கிறது. கவனமாக ஆராயத் தகுந்தது. ஆனால், இந்தத் திட்டம் சம்பந்தமாக எனக்கு இரண்டு கஷ்டங்கள் தோன்றுகின்றன. ஒன்று, கையினுல் செய்யும் பொருள்களை மெஷினில் செய்யும் சாமான்களைப்போல் மலிவாக விற்க முடியுமா என்பது. கிராமத்திலுள்ள ஜனங்கள் போதிய திறமை பெற்றுவிட்டால், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்கள் நகரங்களில் சுலபமாக விற்றுவிடும்.

மற்றொரு கஷ்டம் யாதெனில், இந்தத் திட்டத்தில், கைத்தொழிலும், கல்வியும் தனித் தனியாகப் பிரித்தே பேசப்பெற்றிருக்கின்றன. அப்படிப் பிரிக்காமல், கைத்தொழில் மூலமாகக் கல்வி போதிப்பதே சரியான முறையாகும்.

பழைய வேலை !

இரண்டு நண்பர்கள் ஓர் ஓட்டலில் காப்பி சாப்பிட்டுவிட்டுப் புறப்பட்டார்கள். 'ஸர்வர்' பில்லைக் கொடுத்ததும், ஒரு நண்பன், அதைச் சடக்கென்று வாங்கிக்கொண்டு, முதலாளியின் மேஜைமேல் வைத்துச் சில்லறையையும் கொடுத்தான். அந்தச் சில்லறையை வாங்கிப் பெட்டியில் போடும் சமயத்தில், அந்த மற்றொரு நண்பன் மேஜைக் கருகே ஓடி வந்தான்; வந்தவன் தன் கையிலிருந்த பணத்தைக் கொடுத்துவிட்டு, "அந்தப் பணத்தை அவனிடம் திருப்பிக் கொடுத்து விடுங்கள்; பில் பணத்தை நானே கொடுத்துவிடுகிறேன்!" என்றான்.

முதலில் பணம் கொடுத்த நண்பன் அதற்குள் குறுக்கிட்டான்: "இதோ பாருங்கள்! அவன் பணத்தை வாங்கிக்கொண்டீர்களோ, அப்புறம் நான் காப்பி சாப்பிட இங்கே வரவே மாட்டேன், ஆமாம்!" என்றான்.

இரண்டாவது நண்பன் அவனை இடைமறித்து, "என் பணத்தைத் தான் நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்; இல்லாவிட்டால், என்னையும் இந்தப் பக்கமே பார்க்க முடியாது, ஆமாம்!" என்றான்.

முதலாளி விழித்தார்; இரண்டு பேருடைய ஆதரவையும் இழக்க அவர் தயாரா யில்லை. கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு, "நீங்கள் இரண்டு பேருமே பணம் கொடுக்க வேண்டாம். இதை நான் என் செலவாக வைத்துக்கொண்டுவிடுகிறேன்! சரிதானே?" என்றார்.

இரண்டு நண்பர்களும் வெளியே வந்தனர். ஒரு நண்பன், மற்றவனிடம் சொன்னான்: "தேவலை, அப்பா! நம்முடைய வேலை எப்போதும் போல், ரொம்ப ஜோராகவே நடந்துகொண்டு வருகிறதே!"

—ரீடர்ஸ் டைஜெஸ்ட்

தமிழ் மாகாணம் தேவையா?

●

கே. ராமராவ்

சென்னையில் சமீபத்தில் கூடிய தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் நடந்த விஷயங்கள் அனைத்தும் பாராட்டத் தக்கன. ஆனால், எல்லாவற்றையும்விட எனக்குப் பெருமகிழ்ச்சியைத் தந்து, என்னைப் பெரிதும் கவர்ந்தது, தமிழரசைப் பற்றி நிறைவேற்றின தீர்மானம்தான். அந்தத் தீர்மானத்தில், இந்தியாவை மொழி வாரியாகப் பிரிக்க வேண்டுமென்றும், அரசியல் நிர்ணய சபையின் அங்கத்தினராகச் சென்றிருக்கும் தமிழர்கள் தனித் தமிழ் நாடு ஒன்றை நிறுவ நிரம்பப் பாடுபட வேண்டுமென்றும், அப்படிப் பிரிக்கப்படும் தமிழ் நாடு வடவேங்கடம் முதல் தென் குமரிவரை பரவியிருக்க வேண்டும் என்றும் கண்டிருந்தது.

அரசியல் வாதிகள் கூடி நிறைவேற்றாத அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தீர்மானத்தை, எழுத்தாளர்கள் கூடி நிறைவேற்றியது விந்தையாகத்தானிருக்கிறது. தமிழ்நாட்டின் அரசியல் வாதிகள் இதைப்பற்றி ஒருவிதமான சந்தேகத்துடன் தான் இருந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் தீர்க்கமாக ஆலோசிக்காமலிருந்ததனால்தான், தமிழ்நாடு தனியாகப் பிரிந்து தமிழர்களால் ஆட்சி செய்யப்பட்டால் தமிழர்களுக்குக் கேடு விளையும் என்று எண்ணினார்கள்.

தமிழர்களின் நுண்ணறிவும், அரசியல் ஆற்றலும் தென்னிந்தியா முழுவதையுமே,—ஏன், இந்தியா முழுவதையுமே — ஆளுந் தகுதியுடையன. கர்நாடக நாட்டினரும் மலையாளிகளும் ஆதரித்தது போலத் தமிழர்கள், 'ஆந்திர நாடு ஆந்திரருக்கே' என்ற கொள்கையை ஆதரிக்காமல் இருந்ததோடு நிற்கவில்லை; தமிழ் நாட்டு அரசியல் வாதிகள் அதைக் கண்டித்தும் பேசினர்.

சமீப காலத்தில்தான் காங்கிரஸ் மகாசபையே மொழிவாரியாக மாகாணத்தைப் பிரிக்க ஒத்துக்கொள்ளத் தலைப்பட்டது. காங்கிரஸ் மகாசபையே ஒத்துக்கொள்ளும் பொழுது, தமிழ் நாட்டுக் காங்கிரஸ்காரர்கள் என்ன செய்வார்கள்? ஒத்துக்கொள்ள வேண்டுமே என்று, தவிர்க்க முடியாமல் ஒத்துக் கொள்ள வேண்டிய தாயிற்று. குடும்பத்தில் பங்குப் பிரிவினைக்குப் பிறகு எஞ்சிய பொருளை அடையும் வாரிசுகளைப் போல, எவ்வித ஆர்வமும் மன எழுச்சியு மில்லாமல் அதை ஒத்துக்கொண்டார்கள். இந்தியாவிலுள்ள பல்வேறு மொழிகள் பேசும் மக்களுக்கும் அரசியல் சுய நிர்ணய உரிமை அளிக்கப்பட்டு, மொழிவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்பட்டால், தமிழர்கள் கேட்காமலேயே அவர்களுக்கென்று தமிழ்நாடு பிரிக்கப் பெறும். எழுத்தாளர் மாநாட்

இந்தியாவின் பல்வேறு இனங்கள் இன்று தங்களுக்குத் தனி அரசு வேண்டும் என்று கேட்கும்போது, தமிழ் நாட்டில் மட்டும் ஏன் இந்தக் கிளர்ச்சி பலம் வாய்ந்ததா யில்லை? அந்தக் கோரிக்கையின் அர்த்தத்தைச் சரிவரப் புரிந்துகொள்ளாததுதான் என்கிறார் கட்டுரை ஆசிரியர். ஃப்ரீ இந்தியா விலிருந்து எடுத்தது.

டில், தமிழர்களைத் தவிர ஏனைய மொழியினர் தங்களுக்குத் தனித் தனி நாடு வேண்டும் என்று கிளர்ச்சி செய்வதில் ஊக்கங் கொண்டவராக இருக்கிறார்கள் என்று, ஒருவர் காரசாரமாகப் பேசியதில் உண்மை இல்லாம லில்லை. நாட்டை இவ்வாறு பிரித் தல் என்னும் கொள்கை, அரசி யல் அறிவினடியாகப் பிறந்தது என்று கூற முடியாது. (பண் பாடு, இனம் என்பவற்றினடி யாகவே பிரிவினை கேட்கப்படு கிறது.) ஆகவே, இந்தக் கிளர்ச்சி தமிழ்நாட்டு அறிஞர்களிட மிருந் தும், எழுத்தாளர்களிடமிருந்தும் எழுவது இயற்கை யென்றே போற்றவேண்டும். இப்பொழுது மாகாணங்களில் நடைபெறுவது சுய ஆட்சி யென்றும் மக்களின் ஆட்சியென்றும், பாமர மக்க ளின் முன்னேற்றம்தான் ஆட்சி யின்நோக்க மென்றும் சொல்லிக் கொண் டிருக்கும் பொழுது அர சாங்க மொழி மக்களுடைய மொழியாகவே இருப்பது அவ சியம். இம்மாதிரியான முன் னேற்ற எண்ணம் சுதந்தர இந் தியா வேண்டும் என்னும் தேசிய உணர்ச்சியிலிருந்து பிறப்பது தான். நாட்டில் பஞ்சாயத்து ஆட்சி வேண்டுமென்னும் பொழுது பாராளு மன்றங் களுக்கு இடமுமில்லை, அவசியமு மில்லை. ஆந்திரர்களுக்குத் தனி நாடு வேண்டுமென்றால் தமிழர் களுக்கும் அம்மாதிரிதான். இந் தப் பிரிவினையில் மனத்தாங் கலுக்கு இடமில்லை. பிரிவதற்கு முன்பும் சர்ச்சைகளாவது விவா தங்களாவது அவசிய மில்லை.

தண்ணீ ரில்லாமல் மீன் எப்படி வாழ முடியாதோ, அம்மாதிரியே மாகாணங்கள் இல்லாமல் நம் இந்திய நாடு பல துறைகளிலும் முன்னேறுதல் இயலாது. மாகாண முன்னேற்றத்தைத் தடைப்படுத்தக் கூடாது. பிற தேசத்தவர்களையும் அந்நாட்டு ஆட்சிப் பொறுப்பி லிருந்து விலக்கிவிட வேண்டும். நாம் நமது சொந்த வீட்டில் இருக்கும் பொழுது சுதந்தர எண்ணம் நம் மைப் பரவசப்படுத்துகிறது. அதில் ஒரு தனி இன்பம்தான். நமது மன விரிவுக்கும், அறிவு வளர்ச் சிக்கும், ஒழுக்க விழுப்பத்துக் கும் இடமுண்டு. நாமிருக்கும் நாடு நமதே என்றிருந்தால் வெளியிலிருந்து வரும் சக்தியை யும் நாம் பெறக் கூடியவர்க ளாகிறோம். ஏன்? பயமும் மனக் கலக்கமும் இல்லாததுதான் கார ணம். மாகாண சுய ஆட்சியில் நாம் அரசியல் சீர்திருத்தங்கள் மட்டுமேயன்றிச் சமூகச் சீர் திருத்தமும் செய்ய முடியும்.

எழுத்தாளர் மாநாட்டுத் தீர் மானம் பொருத்தமான சமயத் தில் வந்ததுதான் முக்கியம். டெல்லியில் கூடிய அரசியல் நிர் ணய சபையில் மொழி வாரியாக மாகாணங்களைப் பிரித்தல் வேண் டும் என்று டாக்டர் பட்டாபி சீத்தாராமையா சொன்னதை இந்தத் தீர்மானம் பெரிதும் பலப் படுத்துகிறது. தாங்கள் இந்தப் பிரிவினையை ஆதரித்தால், எங்கே பாக்கிஸ்தானத்தையும் ஒத்துக் கொள்ள வேண்டுமோ என்ற பயத்தில் நமது காங்கிரஸ் அன் பர்கள் இத்தப் பிரச்னையை இப் பொழுது எழுப்ப விரும்ப மாட் டார்கள். இவர்கள் அரசியல் பயந்தாங்கொள்ளிகள் என்பது வெள்ளிடை மலை. ஜின்னாவின் மனம் புண் படாமல் நடக்க வேண்டுமென்றால், நாமும் நமது நாட்டுப் பிரிவினைக் கோரிக்கை யைப் பற்றி ஒன்றும் பேசக்

கூடாதுதான். நமது பிரிவினைக் கோரிக்கை, இந்துக்கள் அதிக மாக உள்ள 'வ' தொகுதியைப் பற்றியதுதான். ஆகவே, இதைப் பற்றி ஜின்னா சண்டை போட வழியே இல்லை. ஆந்திர இந்துக் களைப்போலவே ஆந்திர முஸ்லிம் களும் ஆந்திர நாட்டின் பிரி வினைக்குக் கிளர்ச்சி செய்கிறார் கள் என்பதற்குச் சான்றுகள் தேவையில்லை.

சென்னையில் கூடிய தமிழ் எழுத்தாளர்களின் தீர்மானத் துக்கு ஆந்திரர்களிட மிருந்து இரட்டிப்பு வரவேற்புக் கிடைக் கும். ஆந்திரர்கள் தனியே பிரிந்துபோவது தமிழர்களுக்குப் பிடிக்காது என்ற சந்தேகத்தை இந்தத் தீர்மானம் நிவர்த்தி செய் கிறது. ஆகவே, ஆந்திரரும் தமிழ ரும் சுய நிர்ணயம் என்ற பொது முயற்சியில் ஈடுபடலாம். இரண் டாவதாக, இந்தத் தீர்மானம் ராயலசீமாவி லிருந்து எழுந்த முட்டாள்தனமான எதிர்ப்புக் கும் முற்றுப்புள்ளி வைத்துவிட் டது. கடற்கரை ஜில்லாக்களும், தமிழர்களும், மலையாளிகளும், கர்னாடக நாட்டினரும் தங்களுக் கென்று தனிஅரசு வேண்டும் என்று சொல்லும் பொழுது, ராயலசீமாவிலுள்ள எதிர்ப்பு என்ன செய்யமுடியும்?

நான் திராவிடஸ்தான் கோரிக் கையை ஆதரிப்பவனல்ல. 'தமி ழர்கள்தான் திராவிடர்கள். திரா விடர்கள் இயற்கையாகவே ஆரி யர்களை வெறுக்கிறார்கள்' என்ற தப்பபிப்பிராயத்தில் ஒரு பிரா மண எழுத்தாளர் இந்தத் தமிழ் நாட்டுப் பிரிவினையைத் 'தமிழ் பாக்கிஸ்தானை' என்று ஐயுற் றுக் கண்டித்துப் பேசினார். இருந் தாலும், இந்தியாவின் தேசிய, பொருளாதார நிலைமைகள் ஸ்திர மாக இருப்பதற்கு இந்தியா முழு வதும் ஒரு நாடாக இருக்கவேண் டும் என்று எண்ணுகிறவர்களில் நானும் ஒருவன். ஆனால், இந்தப் புரட்சி யுகத்தில் என்ன நடக் கும் என்று முடிவாக ஒன்றும் சொல்ல முடியாது.

தனிப் பிரதேசங்கள் தமக்குத் தேவையான பொருளைத் தாமே உற்பத்தி செய்துகொண்டு, பிற நாட்டுப் பயமின்றி இன்ப வாழ்வு நடத்துவதுதான் நல்லது. தனிப் பிரதேசங்கள் மத்திய சமஷ்டி அர சாங்கத்தின் கீழ் இருப்பதுதான் விரும்பத் தக்கது. நமது இந்திய நாடு ஐக்கிய அமெரிக்காவைப் போல மிகப் பெரிய நாடு. இந்த ஒப்புமை கேவலம் பரப்பில் மட்டுமல்ல; தேசிய, பொருளா தாரத் துறைகளிலும்கூடத்தான். நமது சரித்திரத்தில்தான் எவ் வளவு மாறுதல்! அன்னியப் படைகளின் கால்களில் நசுக் குண்டு வட இந்தியா கிடக்கை யில், தென்னிந்தியா சுய ஆட்சி செலுத்திவந்தது. சிவாஜி காலத் தில் தென்னிந்தியாதான் மொக லாயர்களின் ஆட்சியிலிருந்து விடு பட்டது என்று சரித்திரம் நமக் குக் கூறுகிறது. மொகலாயச் சேனைகளைத் தெற்கே படை யெடுக்காமல் தடுத்தது விஜய நகர சாம்ராஜ்யம்தான் என்பது தெரிந்த விஷயம்.

நாம் வீடு கட்டினால், வானளா வும் மாளிகைகள் கட்டாமல், அகன்ற பலமான கோட்டை களையே கட்டிப் பெருவாழ்வு வாழ வேண்டும்.

❋

மேன் மக்கள்

எந்தத் தொழிலையும் நேரே செய்வோர் மேன் மக்கள் —பாரதியார்

ஒரே ஒரு கப் காப்பி

●

"ராக்கி"

காப்பி குடிக்கும்போது மனிதனுக்கு ஏற்படுகிற இன்பம் மகத்தானது; என்னவோ, அமர நிலை என்று விஷயம் தெரிந்தவர்கள் (தெரியாதவர்களும்கூட) சொல்லுகிறார்களே, அது ஒரு கப் காப்பி குடிக்கும்போது ஏற்படுகிற உற்சாகத்துக்கு ஈடாகுமா என்பது சந்தேகம்தான். காப்பி குடிக்கப் பழகிக்கொண்டதற்குப் பிறகுதான் இந்தியர்கள் ஆத்மீகத் துறையில் கவனம் செலுத்துவதை நிறுத்திக்கொண்டுவிட்டார்கள் என்று எனக்குப் படுகிறது.

"அய்யர்! ஒரு கப் காப்பி கொண்டுவா!" என்று உள்ளத்தின் அடிவாரத்திலிருந்து கிளம்புகிற குரல், 'பக்தா! உனக்கு என்ன வரம்வேண்டும்?' என்று (சினிமாவில்) கேட்கும் பகவானுக்குப் பதில் அளிக்கும் (சினிமா) பக்தனுடைய குரலுக்குச் சமமானது என்று நான் சொல்லுவேன்.

காப்பிக் கதை பழங் கதை. அதனுடைய சரித்திரம் மகத்தானதாக ஆரம்பித்து, முடிவில்லாமல் வளர்கிறது. யாரோ ஓர் இடையன், தன்னுடைய ஆடுகளைக் காணுமல் தேடிக்கொண்டு சென்றபோது, அவைகள் வெகு சுவாரஸ்யமாக ஏதோ ஒரு செடியைத்தின்றுகொண்டிருப்பதைக் கண்டானும். அதுவே, பிற்காலத்தில் காப்பியாகப் பரிணமித்தது என்று ஓர் ஆசிரியர் கதை சொல்லுகிருர். காப்பி, ஆடுகள் தின்று ருசித்தது என்று சொல்லி, நம்மை—காப்பிக் குடியர்களை — மட்டமானவர்களாக ஆக்க அவர் செய்த முயற்சி இன்று வரை பலிக்க வில்லை. ஆரும் ஜார்ஜ் சக்கரவர்த்தி முதற்கொண்டு நான் வரையில் காப்பி குடித்துக்கொண்டுதான் இருக்கிறோம்; குடித்துக்கொண்டே இருக்கவும் இருப்போம்.

காப்பி—என்னைக் கேட்டால்— ஓர் அற்புதம். எழுத்தாளனின் ஜீவரசம் என்று யாரோ எழுதியதை வாசித்திருக்கிறேன். அதை நூற்றுக்கு நூறு உண்மையென்று ஒப்புக்கொள்கிறேன். கதை எழுதப் பேனாவையும் காகிதத்தையும் முன்னால் வைத்துக் கொண்டு, ஒன்றும் ஓடாத நிலையில் நான் காப்பியைச் சரண் அடைகிறேன். பென்சிலில் முக்காலையும், விரலில்—நகத்தில் ஆரம்பித்து — அரையையும் தின்ற பிறகும் ஒன்றும் ஓடாவிட்டால், நான் காப்பியிடம் அடைக்கலம் புகுகிறேன். "என் அங்கம் சோர்கிறது; உடல் நடுங்குகிறது; மூளை மங்குகிறது; இப்போது நான் செய்யவேண்டியது யாது?" என்று நான் காப்பியைக் கேட்கிறேன். "ஸர்வத்தையும் பரித்தியாகம் செய்துவிட்டு என்னையே சரணாக அடை; நான் உன்னை எல்லாக் கஷ்டங்களினின்றும் காக்கிறேன்" என்று என்னுடைய எழுத்துயுத்தத்தின் ஆரம்பத்தில் காப்பி

'"ஸர்வத்தையும் பரித்தியாகம் செய்துவிட்டு என்னையே சரணாக அடை; நான் உன்னை எல்லாக் கஷ்டங்களினின்றும் காக்கிறேன்" என்று என்னுடைய எழுத்துயுத்தத்தின் ஆரம்பத்தில் காப்பி எனக்குத் தர்மோபதேசம் செய்கிறது.'

ருசியுள்ள கொழம்புகள் உங்களுக்கு ஊக்கத்தையளிக்கவேண்டுமானல் மசாலா மட்டும் சேர்ந்தால் போதாது —டால்டா சேரவேண்டும்!

உங்கள் உணவை விடமின் அடங்கிய டால்டாவில் சமைப்பது மிகவும் அறிவு வாய்ந்த செய்கையாகும். இந்த, எளிதில், ஜீரணமாகின்ற சமையலுக்குதவும் வஸ்து விசேஷ சுவையளித்து சாதாரண தின் பண்டங்களை செழிப்புடையதாகச் செய் வதுமல்லாமல் அவைகளின் ரசத்தை எடுத் துக் காட்ட ஒவ்வொரு ஸ்திரீக்கும் உதவு புரிகின்றது! சுத்தமான டால்டா உங்கள் தினந்தோறுமுள்ள சாப்பாட்டை அதன் சத்தையளிக்கும் திறமையைக்கொண்டு சீர்படுத்துகிறது . . . உங்கள் குடும்பத்தின ருக்கு அதிகப்படியான ஊக்கத்தையும் கொடுக்கின்றது.

★ ஆங்கிலத்தில் மட்டும் எழுதப்பட்டுள்ள டால்டா சமையல் புத்தகத்தின் உதவியுடன் உங்கள் சாப்பாட்டுத் திட்டத்தை அமையுங்கள். சத்தைத் தரும் திறமைக்கென ஆராய்ந்தெடுத்த சுவையுள்ள 150-க்கு மேற்பட்ட இந்தியத் தின்பண்டங்களைப் பக்குவம் செய்யும் முறைகள் இதில் அடங்கி யிருக்கின்றன. உங்கள் புத்தகத் திற்கு Dept. C462 P.O. Box No. 353, Bombay, என்ற விலாசத்திற்கு நான்கு அணு ஸ்டாம்பு அனுப்புங்கள்.

HVM 50-50 TM THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD.

அற்புத மருந்துகள்

மூலிகைகளிலிருந்து தயாரிக்கப் படுபவை. பயனில்லையேல் பணம் வாபஸ்.

செமினியா :—(வைடமின் டானிக்) வீரியத்திற்கும், மன சுறுசுறுப்புக்கும் கை கண்ட மருந்து. கெட்ட ரத்தம், சருமக் கோளாறு, தூக்கமின்மை, மன, தேகச் சோர்வு முதலியவற்றுக் குத் தலை சிறந்த மருந்து. நரைமயிரை யும் நிரந்தரக் கறுப்பாக்குகிறது. ஒரு முழு முறைக்கு ரூ. 7-0-0

குஷ்டம், வெண்குஷ்டம் :—இதை உபயோகித்து ஹக்கீம்ஸ் டாக்டர்கள் நாட்டு வைதியர்களால் குணப்படுத்த முடியாத நோயிலிருந்து சுகம் பெறலாம். விலை ரூ. 3-0-0

நரைமயிர் நிவாரணி :—ஆயுர் வேத முறையால் தயார் செய்யப் பட்ட எங்கள் பிரைனியா வாசனைத் தைலம் உங்கள் நரைமயிருக்கு இயற்கையான கரு வர்ணத்தை அளிக்கிறது. மூளைச் சோர்வை ஓட்டி ஞாபக சக்தியை விருத்தி செய்கிறது. நரைமயிர் சொஞ்சமாக இருந்தால் ரூ. 2-8-0 அதற்கு மேற்பட்டிருந்தால் ரூ. 3-8-0 எல்லாம் நரையாயிருந்தால் ரூ. 5-0-0

N. B. பார்சலில் எங்கள் பார்மஸி யின் பெயர் இல்லா விட்டால் அதை வாங்காதீர்கள்.

பீகார் மாகாண மாஜி மந்திரி குரு ஷலாய்லால் எழுதுகிறார் :

பிரைனியா தலைமயிர்த் தைலத்தை உபயோகித்து, பயனடைந்தேன். குணப்படுத்தும் தன்மை நிறைய இருக்கும் இம் மருந்து மூளையைக் குளிர்ச்சியாக இருக்கச் செய்வதுடன் தலைவலியையும் உடனே போக்கு கிறது. குளித்தப் பிறகும் கூடத் தைலத்தின் மணம் போவதில்லை. இதைப் போன்ற தைலத்தை நான் பார்த்ததே இல்லை. நரைமயிருக்கு இது மிகவும் உபயோகமானது.

SHRI AYURVEDIC PHARMACY,
P. O. No. 36, Katrisari
(Gaya), India

ஈரல் குலை கட்டி வியாதிகள் குணப்படுத்த முடியும்.

ஈரல் குலைகட்டி வியாதிகளைக் கண்டு பயப்படக் கூடிய காலம் போய்விட்டது. வியாதி மிகவும் முற்றிவிட்டாலொழிய ஓர் அரிய உயிரைக் காப்பாற்ற முடியும்.

கீழ்கண்ட அறிகுறிகள் சந்தேகிக்க கூடியவை

அடிக்கடி ஜுரம் ஏற்படுதல், மலச்சிக்கல், அதிக மலப்போக்கு, வாந்தி, பசியின்மை, வயறு பொருமல், சோர்ந்து இருத்தல், அடிக்கடி சிணு சிணுத்தல்.

ஆரம்பத்திலேயே ஜாக்கிரதை வேண்டும்

அசட்டை செய்தோ, சரியான சிகிச்சைத் தவரினாலோ ஆபத்தாய் முடியும்.

ஜம்மியின்
லிவர்க்யூர்
உபயோகியுங்கள்

குழந்தையின், ஈரல் குலைக்கட்டிக்கு ஜம்மியின் லிவர்க்யூர் உபயோகியுங்கள். எல்லா விடங்களிலும் விற்கப்படுகின்றன

ஜம்மி வெங்கிட்டரமணய்யா & சன்ஸ்

மைலாபூர் — மதராஸ்.

பிராஞ்சுகள் :— பம்பாய், கல்கத்தா, டில்லி, திருச்சிராப்பள்ளி, பெங்களூர், [illegible]

எனக்குத் தர்மோபதேசம் செய்கிறது. காப்பி என் கண்ணன்.

லண்டனில் முதல் முதல் காப்பி வியாபாரம் செய்யத் தொடங்கிய ஓர் ஆசாமியின் மேல், சுற்றுவட்டாரத்தி லிருந்தவர்களெல்லாம் வழக்குத் தொடுத்தார்களாம்: "காப்பி என்று சொல்லிக்கொண்டு ஏதோ ஒரு பானத்தைக் கொடுத்து ஜனங்களை மயங்க வைக்கிறான்" என்று அவர்கள் வாதித்தார்களாம். சுப்பய்யர் ஓட்டல் காப்பியிலும் இதே மகத்துவம் இருக்கிறது. அந்தக் காப்பியைக் குடிக்காதவர்கள் புகார் சொல்லுகிறார்கள்—இதே மாதிரி. காப்பியைக் குடிக்காதவர்களுடைய சாட்சியத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை. குடித்தவர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாமென்றால் அவர்கள் திரும்பி வருவதில்லை. அப்படியே வந்தாலும், உருப்படியாக, மூளைத் தெளிவுடன் பேசும் சக்தி அவர்களுக்கு இருப்பதில்லை. ஆக, சுப்பய்யர் ஓட்டல் காப்பியைப் பற்றி அவசரப்பட்டு எந்த முடிவும் செய்வது தப்பு என்றே எனக்குப் படுகிறது.

"வியாச ராவ் வைத்திருக்கும் ரயிலடி ஓட்டல் பிரசித்தம். அவருடைய காப்பியும் பிரசித்தம். காப்பி டம்ளரை வாய்க்கு நேரே சாய்த்துக்கொண்டால், காப்பி வாயில் விழாது; அதற்காக, ஒரு ஸ்பூனும் கொண்டு வந்து கொடுப்பார்கள். அதை வைத்துக்கொண்டு காப்பியை வாய்க்குள் குத்திக் குத்தித் தள்ளிக்கொள்ள வேண்டும்" என்று சொல்லும் என் நண்பனின் வார்த்தையை நான் நம்பத் தயாரில்லை. நீங்களும் நம்ப வேண்டாம்.

இந்தியர் பெருமை

யாழ்ப்பாணத்தில் ஆயுர்வேதக் கமிஷனின் கூட்டம் ஒன்று நடந்தது. சித்த வைத்தியக் கல்லூரி ஒன்று யாழ்ப்பாணத்தில் அமைக்க வேண்டுமென்று சில அங்கத்தினர்கள் வற்புறுத்தினார்கள். "உடற்கூறு ஆராய்ச்சி செய்ய, யாழ்ப்பாணத்தில் பிரேதங்கள் கிடைக்குமா?" என்று கேட்டார் ராஜாங்க சபை மெம்பர் ஸ்ரீ குலரத்ன. "யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் சற்று வைதிகமானவர்கள். பிரேதங்கள் கிடைப்பது சாத்தியமல்ல" என்று பதில் வந்தது. "அப்படியானால் சிங்களப் பிரேதங்களைத்தான் வரவழைக்கவேண்டியிருக்குமோ?" என்று விசாரித்தார் குலரத்ன. "கொழும்பிலேயே சிங்களப் பிரேதங்கள் கிடைப்பதில்லையே! இந்தியப் பிரேதங்கள்தான் கிடைக்கின்றன" என்று பதில் கிடைத்தது. "அப்படியா! இந்தியர்கள்கூட உபயோகமாய்த்தான் இருக்கிறார்கள்" என்று விஷமமாகச் சொன்னார் குலரத்ன. சுடச்சுடப் பதில் சொன்னார் ஸ்ரீ நடேசன்: "ஆமாம் செத்த பிறகும்கூட இந்தியர்கள் உபயோகமாயிருக்கிறார்கள்.

—ஹிந்துஸ்தான்

எனக்குத் தெரிந்து நான் ஒரு கிளப்புக்குச் சென்று ஒரு தினுசான அனுபவத்தை அடைந்தேன். காப்பியை வாய்க்குள் விட்டுக்கொண்டு விழுங்கவும் முடியாமல், உமிழவும் முடியாமல் (வாய்க்குள் ஏதோ பசை மாதிரி ஒட்டிக்கொண்டிருக்கும்போது எப்படி ஐயா உமிழ முடியும்?) தவித்துக்கொண்டிருக்கும்போதே, 'சர்வர்' என் மடியி லிருந்த சில்லரையைத் தானாக எடுத்துக் கொண்டதை இப்போது நினைத்தாலும், அந்தக் காப்பியைக் குடிக்கிற வேதனை ஏற்படுகிறது. ஆதலின், அதைச் சற்றே மறப்போம்.

என் நண்பன் இன்னொருவன். பாவம், விஷயம் தெரியாதவன். அவன் ஓட்டலுக்கு முன்னே பின்னே போனதில்லை. காப்பி என்று எதையும் குடித்தது மில்லை. ஒரு நாள் அவனுக்கு என்ன தோன்றிற்றோ என்னவோ, அவனைப் பிடித்த கிரக சாரம், பக்கத்திலிருந்த ஓர் ஓட்டலுக்குள் நுழைந்துவிட்டான். "காப்பி கொண்டா!" என்று மகா கம்பீரமாகச் சொல்லியும் விட்டான். கறுப்பும், வெளுப்புமாக (பாலும், டிகாக்ஷனும் ஒன்றேடொன்று கலக்க மறுத்து விட்ட நிலை அது என்று பின்னால் யாரையோ கேட்டுத் தெரிந்து கொண்டான்) ஒரு திரவம் அவன் எதிரில் கொண்டுவந்து வைக்கப் பட்டது. பாவம், அவன்தான் அப்பாவி என்று முந்தியே சொல்லியிருக்கிறேனே; 'காப்பி'யைக் குடித்துவிட்டான். ஒரு வாய் குடித்ததுமே அவனுக்கு உலகத்தைத் துறந்த முனிவர்களின் நிலை வந்துவிட்டது. அவன் சொன்னான்:

"அப்பனே! நீ என்ன பைத்தியக்காரனாக இருக்கிறாய்? வெந்நீரைச் சுத்தமாக அப்படியே கொடுத்திருக்கக் கூடாதா? பரம சந்தோஷத்துடன் குடித்துவிட்டு, உன்னையும் ஆசீர்வதித் திருப்பேனே! அந்த வெந்நீரில் பால் மாதிரி எதையோ கலந்து, கறுப்பாக எதையோ விட்டு, சர்க்கரை மாதிரி இருந்த எதையோ தூவி இப்படிக் கன்னாபின்னா வென்று செய்துவிட்டாயே? போய், சுத்த வெந்நீராக ஒரு டம்ளர் கொண்டுவா, போ!"

காப்பி—மறுபடியும் சொல்லுகிறேன்—ஓர் அற்புதம். அது தெய்வம். எல்லாமாகி, எங்கும் நிறைந்து விளங்கும். பற்பல இடங்களில், பற்பல உருவங்கள் பெற்றுத் திகழும். கடவுளின் மூலத்தைக் காணுவதில் இருக்கும் சிரமம், காப்பியின் மூலத்தைக் காணுவதிலும் இருக்கிறது.

"திரவங்களுள் நான் காப்பி."

—பகவத் கீதை (புதிய பதிப்பு)

தேவநாயகி

[ஆசிரியர்: பி. எம். கண்ணன். பிரசுரகர்த்தர்கள்: பார்த்தன் அண்ட் கோ., மயிலாப்பூர், சென்னை. விலை ரூ. 2—8—0.]

இதில் பன்னிரண்டு அழகிய கதைகள் உள்ளன.

கோவிலைத் திறவுங்கள்!

[ஆசிரியர்: "நந்தபாலன்." தியாகக் கொடிப் பதிப்பகம், துறையூர், திருச்சி ஜில்லா. விலை 8 அணா.]

தீண்டாமையின் தீமை, ஆலயங்கள் அமைந்த கதை, பாட்டாளிகளின் துயரம், போலிச் சமயவாதிகளின் சண்டிப் போக்கு, நொண்டிக் காரணம், ஆலயங்களின் சீரழிவு, காந்திஜியின் தொண்டு, கோவில்களைத் திறக்க வேண்டியதன் அவசியம் ஆகியவைகளைப் பற்றி ஆசிரியர் மிக்க உணர்ச்சியோடு, தெளிவாக, ஆதாரங் காட்டி எழுதியிருக்கிறார்.

பூமாவின் புன்னகை (கதைக் கொத்து)

[ஆசிரியை: ஜெயலக்ஷ்மி R. ஸ்ரீநிவாசன். அருள் நிலைய வெளியீடு. ராமச்சந்திரபுரம். (திருச்சி ஜில்லா.) விலை ரூ. 1—14—0]

குடும்ப நிகழ்ச்சிகளைப் பற்றிய பதினைந்து கதைகள் இதில் அடங்கியுள்ளன. யோகி சுத்தானந்த பாரதியார் இதற்கு அழகான முன்னுரை தந்துள்ளார்.

என்ன பொம்மை வாங்கலாம்?

●

சி. ந. வைத்தீஸ்வரன்

யுத்தமும் வந்தது. பஞ்சமும் பிறந்தது. அரிசிப் பஞ்சம், துணிப்பஞ்சம், வீட்டுப் பஞ்சம் எனப் பல வகைப் பஞ்சம் வந்தது. பொம்மைப் பஞ்சமும்கூட வந்தது. என்ன பொம்மை வாங்கலாம் என்று கடைக்குப் போகிறோம். கடைக்காரனைக் கேட்டால், ''அதோ அந்த பொம்மைகள்தான் இருக்கிறது. வேண்டுமானால் வாங்கிக் கொங்கோ'' என்று காட்டுகிறான். கால் போன பொம்மை, கை போன பொம்மை, சாயம் போன பொம்மை என, சின்னா பின்னப் பட்ட பழைய பொம்மைகளையே காட்டுகிறான். யுத்தத்துக்கு முன் இந்தப் பொம்மைகளை மூர் மார்க்கெட்டிலும்கூட விற்க மாட்டார்கள். யுத்தம் வரவே இவைகளுக்குக் கிராக்கி வந்துவிட்டது. ஏன்? ''சீமைச் சரக்கு வரவில்லை; ஜப்பான் சரக்கும் வரவில்லை'' என்கிறான். ஒரு விதத்தில் இந்த நிலைமையும் நல்லதுதான். என்ன பொம்மை வாங்கலாம் என்ற சிந்தனைக்கு நேரம் அளிக்கிறது. ஏதோ நாம் கேட்கிறோம், கடைக்காரன் காட்டுகிறான். நமது பையில் இருக்கும் பணம் கனமாயிருந்தால் விலையுள்ள பொம்மையை வாங்குகிறோம். இல்லாவிடில் சரசமானதை வாங்குகிறோம். தீபாவளிக்கோ, பொங்கலுக்கோ புதுச் சொக்காய், பாவாடை வாங்க ஜவுளிக்கடைக்குப் போகிறோம். குழந்தைக்கு ஒரு பாவாடை தைக்கவேணும் என்கிறோம். கடைக்காரன் உடனே, ''எத்தனை வயசுங்கோ?'' என்கிறான். ''மூணு வயசு'' என்கிறோம் நாம். ''குழந்தை செவப்பா,கறுப்பா?'' என்கிறான் ''கருப்பு'' என்கிறோம். உடனே மூன்று நான்கு ரகங்களை முன்னே எடுத்து விரித்துக் காட்டுகிறான். ''இது ரொம்ப நல்லா இருக்குமுங்க. சுமார் ஒரு கஜம் போதுமுங்க'' என்று இவ்வளவு தூரம் எடுத்துச் சொல்கிறான். ஆனால், பொம்மைக் கடைக்குப் போனால் நல்ல விலையுயர்ந்த பொம்மையை நம் தலையில் சாதாரணமாகக் கட்டத் தயாராய் இருக்கிறான் கடைக்காரன். நாமும் நமது டாம்பீகத்தைக் காட்டப் பெருந்தொகை கொடுத்துப் பொம்மைகளை வாங்கிப் போகிறோம். ஆனால், அந்தப் பொம்மை ஆறு மாதக் குழந்தைக்குத் தகுந்ததா, ஈராண்டுக்குத் தகுந்ததா அல்லது ஐந்தாண்டுக்குத் தகுந்ததா என்று கடைக்காரனும் எடுத்துக் கூறுவதில்லை. நமக்கும் அதைப் பற்றி சிந்திக்க நேரமில்லை. ஏதோ காசை எறிந்தோம், ஒரு மோட்டாரையோ ரயிலையோ வாங்கிக் கொண்டு வந்து குழந்தை கையில் கொடுத்தோம். குழந்தைக்கு அந்த பொம்மைக்குச் சாவி கொடுக்க முடியாது. நாம்தான் கொடுக்க வேண்டும். இரண்டு நாளில் அஞ்சு ரூபா ரயில் வண்டி அடுப்பங்கரையிலே தூள் தூளாகி

குழந்தையின் மனப்போக்கை அறிந்துகொண்டு, பொம்மை வாங்கிக் கொடுத்தால், அதன் உள்ள வளர்ச்சிக்கு அடிகோலியவர்களாவோம் என்று கட்டுரையாளர் கூறுகிறார். குழந்தை மனோ தத்துவத்தில் நல்ல ஈடுபாடுடைய கட்டுரையாளரின் கூற்று, நிரம்பச் சரியானதுதானே?

விழுந்து கிடக்கிறது. இதைக் கண்ட நமக்குக் கோபம் பொங்கிவிடுகிறது. இனிமேல் பாப்பாவுக்குப் பொம்மையே வாங்கித் தருவதில்லை என்று வெறுப்புக் கொள்கிறோம். இது பாப்பா தப்பா? இல்லை. பாப்பா இயலை நன்கு அறிந்தோமோனல் எந்தப் பொம்மை வாங்கலாம் என்று தோன்றும்.

குழந்தை விளையாட்டைக்கூர்ந்து கவனித்தால், பெற்றோரைப் போலவும் மற்றப் பெரியவர்களைப் போலவும் தாங்களும் சீக்கிரம் ஆக வேண்டும் என்று அவர்கள் விரும்புவது தோன்றும். அம்மாளைப்போல் சமையல் பண்ண வேண்டும்; வேலைக்காரியைப் போல் வீடு பெருக்கி மெழுகிக் கோலமிட வேண்டும்; அப்பாவைப் போல் ஆபீசுக்குப் போக வேண்டும்; பேனவை உபயோகிக்க வேண்டும்; பெட்டியைத் திறக்க வேண்டும், மூட வேண்டும்; கதவைத் திறக்க வேண்டும், சாத்த வேண்டும்; பாவாடை சட்டை அணிந்து கொள்ள வேண்டும்; புடவை கட்டிக் கொள்ள வேண்டும்; தலைப்பாகை அணிய வேண்டும். இப்படி எண்ணிறந்த செயல்களைத் தாங்களாகவே செய்ய வேண்டும் என்று விரும்புகின்றனர். இதல்லாமல் தங்களுடைய உள்ளத்தில் தோன்றுகின்ற சில உணர்ச்சிகளை விடுதலை செய்வதற்கு விளையாட்டு மிகவும் பயன்படுகிறது. சிறு குழந்தை தம் பொம்மைகளை வைத்துச் சீராட்டுவதையும் கண்டிப்பதையும் பார்த்திருக்கிறோம். ஓர் இருபது மாதக் குழந்தை சிறு பொம்மையை அட்டைப் பெட்டியாகிய தொட்டிலில் இருந்து வெளியே எடுக்கவும், மறுபடியும் தொட்டிலில் உறங்க வைக்கவுமாக அனேக முறை—அரை மணி நேரத்துக்கு அதிகமாக—பாவனை செய்துவந்தாள். இவ்வாறு குழந்தைகள் செய்துவரும் பொழுது அவர்களுடைய மனத்தில் தோன்றும் பல புயல்கள் அமைதி பெறுகின்றன என்று உள இயலார் கருதுகின்றனர். எனவே குழந்தைகளுக்குப் பொம்மை வாங்க எண்ணும் பொழுது இந்த நோக்கத்துடன் ஆரம்பிக்க வேண்டும். குழந்தைமையில் ஆணும் பெண்ணும் பொம்மைகளை விரும்புகின்றனர். நாம் வாங்கும் பொம்மைகள் குழந்தைகள் தாமாகவே உபயோகிக்கக் கூடியவையாய் இருக்க வேண்டும். அப்பொழுது தான் அவர்களுடைய ஐம்புலன்களும் இயங்கும்; இன்புறும்; வளரும்.

ஐந்தாறு மாதக் குழந்தைக்கு வாங்கும் பொம்மை எல்லாம் குழந்தை சப்பக் கூடியதாய் இருக்க வேண்டும். அதற்கு வாயைத் தவிர வேறு உறுப்பை அதிகமாக உபயோகிக்காது. ஆதலால், மரத்தால் செய்த பொம்மைகளே விசேஷமானவை. இந்தப் பொம்மைகளில் கூர்மையான பாகங்கள் இல்லாமல் இருக்க வேண்டும். உருண்ட மரக் கட்டைகள் மிகவும் பொருத்தமானவை. வாய்க்குள் போட்டுக் கொள்ளக் கூடிய அவ்வளவு சிறு பொம்மைகளோ பண்டங்களோ சிறு குழந்தையின் கைக்கு எட்டும் தூரத்தில் வைக்கக்கூடாது. சிறு குழந்தைகள் மணிகளையும் கொட்டைகளையும் தெரியாமல் வாய்க்குள் போட்டுக் கொள்வதை நாம் வேண்டிய அளவு கண்டும் கேட்டும் இருக்கிறோம்.

பெரிய பெரிய மணிகளைக் கோத்த சரங்கள் குழந்தை விளையாட்டுக் குகந்தது. தையற்காரர்களிடம் வேண்டிய அளவு பயனற்ற நூல் உருளைகள் கிடைக்கும். இவைகளைக் குழந்தைகளுக்குக் கொடுத்தால் பல வகைகளில் ஆடிக் களிப்பார்கள். இவைகளின் மேல் சிவப்பு, நீலம், மஞ்சள் வர்ணங்கள் பூசினுல் வேடிக்கை இன்னும் அதிகரிக்கும்.

கிலுகிலுப்பை என்றுல் குழந்தைகளுக்குப் பேரானந்தம். அரிசிப் பஞ்சம் வந்தபிறகு குருவிக்காரி கிலுகிலுப்பை செய்து விற்பதைக் காண்பது அரிதாகி விட்டது. சிறு தகர டப்பாவில் கற்களைப் போட்டு நாமே கிலுகிலுப்பை செய்யலாம். இதை ஆட்டும் போதும் உருட்டும் போதும் சிறு குழந்தைக்கு ஓர் தனி இன்பம் உண்டாகிறது.

தண்ணீரையும் மண்ணையும் கண்டால் விரும்பாத குழந்தை குழந்தையல்ல. வாழ்க்கைக்கு மண்ணும் நீரும் அவசியம். ஆதலால்தான் குழந்தைக்கும் இதைக் கண்டால் பேரானந்தம். "ஐயோ! குழந்தை கையை அழுக்காக்கிக் கொள்ளுமே? சொக்காய்த் துணி பாழாய்ப் போகுமே" என்று நாம் ஆத்திரப்படுகிறோம்; குறுக்கிட்டுத் தடுக்கிறோம். ஆனல், நாம் குழந்தைகளின் உள வாழ்வை தடுக்கும் பேய்கள்போல் ஆகிவிடுகிறோம். இந்த ப்ரௌடிப் பேயிடமிருந்து தப்பித்துக் கொள்ளவே குழந்தைகள் கற்பனை ஊராகிய விளையாட்டை விரும்புகின்றனர் போலும்.

நன்னகரதனிடை
வாழ்ந்திடுவோம்—நம்மை
நலிந்திடும் பேயங்கு வாராதே

என்று பாரதியார் ஒரு போடு போட்டிருக்கிறார். மேலும் அவர்

பிள்ளைப் பிராயத்தை
இழந்தீரே!—நீர்
பின்னு மந்நிலை பெற
வேண்டீரோ?

என்றும் வேண்டுகிறார். அம்மாதிரி பிள்ளைப் பிராயத்தை நாமும் வேண்டினுல் குழந்தைகளை மண்ணுடனும், தண்ணீருடனும் களி மண்ணுடனும் மணலுடனும் விளையாட விட அஞ்சமாட்டோம். ஆனல் அதற்காக ஆற்றிலே குளத்திலே இறக்கியா விடுவோம்? இல்லை. குழந்தைக்கு வேண்டிய களி மண்ணையும், மணலையும், தண்ணீரையும் திண்ணையிலோ தோட்டத்திலோ தருவோம்; இதைக் கொண்டு எத்தனை கற்பனைகளைக் குழந்தைகள் ஆக்கிக்கொள்வார்கள்! களி மண்ணுல் ஆக்குவார், ஆதரிப்பார்கள், அழிப்பார்கள். முத்தொழிலும் செய்து இன்புறுவார்கள். மேல் கூறிய பண்டங்களுக்கு நம் நாட்டில் எத்தனை யுத்தங்கள் வந்தாலும் பஞ்சம் வராது. இதற்கு என்ன விலை கொடுக்க வேண்டும்! இதில் பெறும் இன்பம், இருபது ரூபாய் விலையுள்ள தகர ரயில் பொம்மையில் பெற முடியாது.

சுமார் ஒன்றரை ஆண்டில் கற்பனை விளையாட்டுத் தோன்ற ஆரம்பிக்கிறது. அப்பொழுது சுலபமாக உடையாத பொம்மைகளை வாங்க வேண்டும். இவை மிகவும் பெரிதாகவும் இருக்கக் கூடாது. சிறிதாகவும் இருக்கக் கூடாது. இந்தப் பொம்மைகளுக்குச் சொக்காய்த் துணி அவசிய மில்லை. ஏனென்றுல், இப் பருவத்தில் குழந்தைகள் இதைப் பெரிதாகக் கருதுவதில்லை. பொம்மையைச் சுற்றிலும்

போர்த்துவதற்கு ஒரு துணியிருந்தால் போதும். இந்த ஆட்டத்தில் இந்தப் பருவத்தில் ஆண் குழந்தையும் பொம்மைகளை வைத்து விளையாடும். இப் பருவத்தில் சடை சடையாக இருக்கின்ற சில நாய், கரடி, புலி போன்ற பொம்மைகளில் அவ்வளவு விருப்பங் கொள்வதில்லை. சின்னக் குழந்தைகளுக்குத் தரக் கூடிய பொம்மைகள குளிப்பாட்டக் கூடியவைகளாய் இருத்தல் நலம். அப்பொழுது மேற்படிந்த அழுக்கை அகற்றி விடலாம். இல்லையேல் சிறு குழந்தை அழுக்கையும் ருசி பார்த்துவிடும்.

இரண்டாம் வயது ஆரம்பிக்கும்பொழுது ஓடி ஆடச் சக்தி பெற்றுவிடுகிறது. அப்பொழுது குழந்தைக்கு மெத்தைப் படி ஏற விரும்பும்; சறுக்கிக் கொண்டு கீழே வர விரும்பும்; குதிக்கும்; ஊஞ்சல் ஆடும்; நடை வண்டியைத் தள்ளும்; வேறு குழந்தையை வண்டியில் ஏற்றிக் கொள்ளும்; தள்ளும்; இழுக்கும்; இவைகளை அனுசரித்து வேண்டிய ஏற்பாடு செய்வதே இப் பருவத்துக்கு வாங்கும் பொம்மையாகும். தோட்டத்தில் வேலை செய்வதென்றால் இரண்டு மூன்று வயதுக் குழந்தைக்குப் பேரானந்தம். இந்த வயதுக் குழந்தை உபயோகிக்கக் கூடிய சிறு செம்பு,பக்கட்,மண்வெட்டி, கைக்கொத்து எல்லாம் வாங்கித் தருவோமானால் குழந்தை உலகம் ஆனந்த உலகமாகும். பொம்மைகளையும் பல பண்டங்களையும் கொடுப்பதோடு நாமே எல்லா விளையாட்டும் அவர்களுக்காக விளையாடிப் பயனில்லை. அவர்களை விளையாட விட்டுவிட வேண்டும். அவர்கள் விளையாடும் விளையாட்டில் நம் பிரியத்தைக் காட்ட வேண்டும். ஏதோ பொம்மைகளை வாங்கித் தள்ளி விட்டோம் அவர்களை ஒருவரும் காணாத இடத்தில் விளையாடட்டும், நம்மைத் தொந்தரவு பண்ணாமல் இருந்தாற் போதும் என்று அவர்களைத் தீண்டாதவர்கள் போல் திரஸ்கரித்தும் பயனில்லை. தொட்டும் தொடாமலும் அவர்களுடைய விளையாட்டைக் கவனித்து வந்தோமானால் குழந்தை உள்ளம் நல்ல முறையில் மலரும்,

எனவே மேற் கூறியவற்றிலிருந்து ஒன்று தெளிவாகிறது. குழர்தை உள்ளத்தை நன்குணர்ந்த பிறகு அதனதன் தேவைக்கு வுந்த பொம்மைகளையே வாங்க வேண்டும். அவற்றில் பெரும் பான்மையை நாமே நம் கையால் சிரமமில்லாமல் செய்து கொள்ளலாம். இதற்கு வேண்டியதெல்லாம் நாம் வீணாக எறிகின்ற ஒட்டை உடைசல்கள்தான். அதுவும் நாம் செய்யும் போது குழந்தையும் அதைப் பார்க்கும்படி செய்ய வேண்டும். அப்பொழுது அவனுடைய சிறு கையும் உதவ வரும். அவ்வாறு செய்யப்பட்டவை விலைக்கு வாங்கினவற்றை விட மேலாகக் குழந்தை உள்ளத்தை வெளிக்காட்டி நேர்மையாக்கும். நேர்மையாக்காத பொம்மைகளை செய்தும் பயனில்லை வாங்கியும் பயனில்லை, என் உண்டா?

*

மனிதப் பிரர்யம்: மிருகங்களுக்குள்ளே சற்றுக் கண்ணியமான பிராணி மனிதன் என்று நான் கருதுகிறேன். —ஹெரால்ட் நிக்கல்ஸன்.

சக்திப் பிரதாபம்

ரா. திருவேங்கடம்

ஞாயிற்றுக் கிழமையன்று நடுப் பகல், எனக்கு நல்ல தூக்கம். என்ன இருந்தாலும் ரென் பென்னட் கம்பெனியாரின் சுக ஆசனங்களில் படுத்துக்கொள்ளும் போது ஏற்படும் ஆனந்தமே ஓர் அலாதிவகைதான். விழித்துக் கொண்டதன் காரணம், சமையல் அறையிலிருந்து வந்த பட்சண வகைகளின் வாசனைதான். அப்பா! என்ன மணம்! ராஜம் பலகாரங்களை, டால்டா வனஸ்பதியில்தான் செய்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் இத்தனை மணம் ஏது?

மணி நான்கு ஆகிவிட்டது. குளித்துவிட்டு வெளியேபுறப்பட வேண்டியதுதான். வினோலியா ஒயிட் ரோஸ், லக்ஸ் இரண்டையுமே நான் உபயோகிப்பவன். எதற்கு எது எதில் குறைவு? இரண்டும் சேர்ந்துவிட்டால் அமர்க்களம்தான்! குளித்த பிறகு,ஜாப்கோ தைலத்தைத் தடவிக்கொண்டு, தலையை ஜோராகச் சீவிக்கொண்டேன். மனோகரன் ஸ்டோரில் வாங்கிய வேஷ்டியைக் கட்டிக்கொண்டு, கேவல்ராம்ஸில் சமீபத்தில் துணி எடுத்துத் தைத்துக்கொண்ட சட்டையையும் மாட்டிக்கொண்டேன். டி. எஸ். ஆர். தைலம் கொஞ்சமும், காதர் சாகேப் அத்தர் கொஞ்சமும் சட்டையிலும் வேட்டியிலும் தெளித்துக் கொண்டேன்.

அத்தர் வாசனை மூக்கில் பட்டதோ என்னவோ, என் மனைவி ஓடோடியும் வந்தாள். "எங்கே, வெளியில் புறப்படுகிறீர்கள் போல் இருக்கிறதே! இருங்கள், பலகாரம் சாப்பிட்டுவிட்டுப் போகலாம்; நானும் கடைக்கு வருகிறேன்" என்றாள்.

அவ்வளவுதான்; என் வயிற்றில் புளியைக் கரைத்ததுபோல் ஆயிற்று. ராஜம் கடைக்குப் புறப்பட்டா ளென்றால் என் ஆஸ்தியில் பாதி 'அவுட்' என்று அர்த்தம். ஏதோ சம்பளத்தில், காலணா, அரையணாவாக மிச்சம் பிடித்ததை, சர்க்காரின் சிறு சேமிப்புத் திட்டத்தில் கொஞ்சமும், யுனைட்டெட் கம்மர்ஷியல் பாங்கில் கொஞ்சமும் போட்டு வைத்திருக்கிறேன். என் நண்பன் வேணு, மிகவும் வற்புறுத்தியதன் பேரில் பாண்டியன் இன்ஷ்யூரன்ஸில் 2000 ரூபாய்க்கு ஒரு பாலிஸி எடுத்து, அதற்கும் பிரிமியம் கட்டிக் கொண்டுவருகிறேன். அது கிடக்கட்டும், ராஜம் விடுவாளா?

பலகாரத்தைச் சாப்பிட்டுவிட்டு லிப்டன்ஸ் தேநீர் அருந்தி, அசோகாவுடன் வெற்றிலை பாக்குப் போட்டுக்கொண்டேன். எலா சிகரெட்டையும் பற்ற வைத்துக்கொண்டேன். அப்பா! என்ன ஆனந்தம்! சரி, கிளம்ப வேண்டியதுதான். ராஜம் மைசூர் சில்க் புடவையைக் கட்டிக்கொண்டு புறப்பட்டாள். வழியில் அவள் உறவினர்களைப் பற்றியே பேச்சு. "உங்களுக்குத் தெரியுமா? நம்ம ராமுவின் குழந்தை ஈரல்

சக்தியில் வரும் விளம்பரங்களைக்கொண்டு கட்டுரையாளர் ஒரு கதை விட்டிருக்கிறார், நோக்கம் எதுவாயிருந்தாலும், படிக்க ரசமாயிருந்தால், சரிதானே?

கட்டியால் பிழைக்காது என்று கிடந்ததே, கடைசியில் ஜம்மி லிவர்க்யூரில் குணமடைந்து விட்டது. இப்போது நிரம்பச் சௌக்கியமாக இருக்கிருன். ராமு நிறையச் சம்பாதிக்கிருன். ஒரு வீடு வேறு கோடம்பாக்கத்தில், யுனைடெட் இந்தியா குடியிருப்பில், கட்டிக்கொண்டிருக்கிருன். சிமெண்ட் மார்கட்டிங் கம்பெனியில் சிமெண்ட் எல்லாம் வாங்கிஞைம். கட்டடம் கோட்டைமாதிரி இருக்கிறது. அவன் அகமுடையாளுக்கு, பாவம், ஆஸ்த்மா. நிரம்பக் கஷ்டப்பட்டாள். பிரோகித் ஸ்வாஸஹரி சாப்பிட்டாளாம்; இப்போது நன்ருய்விட்டது. அவனுடைய ஆறு வயதுப் பையன் எவ்வளவு சோனியாய், ரத்தம் சுண்டிப்போய் இருந்தான்? இப்போது அந்தப் பையன் ச்யவனப்ராஷம், அம்ருதாவும் சாப்பிட்டு, எப்படியிருக்கிருன், தெரியுமா?'' என்ருள். நல்லவேளை, கடைத்தெரு வந்துவிட்டது. இல்லாவிட்டால், என் பிராணனை வாங்கியிருப்பாள், பேசிப் பேசி.

கடையில் நுழைந்து, சோப்பு வகைகளில் இரண்டுமூன்று—ரெக்ஸோனு, ஸன்லைட், லைஃப்பாய், கேரளா ரோஸ் வாங்கிக்கொண்டேன். வீட்டில் குழந்தைகளுக்கு, ஒரு வாரமாகச் சொறி சிரங்கு உபத்திரவம் அதிகம். அதற்காக, சோனல், க்யூரோசால், சைபால் ஆகியவைகளை வாங்கிக் கொண்டேன். மனைவிக்காக, அருணுவையும்—கர்பாசய ரோக நிவாரணி; தேகத்துக்கு நல்லது என்று டாக்டர் சொல்லியிருந்தார்—அதையும் அயோடிசாலையும் புருக் பாண்ட் தேயிலைப் பொட்டணம் ஒன்றையும், வாங்கிக்கொண்டேன். பிறகு, ஹரி தயாளில் நுழைந்தோம். நல்ல ஜவுளி அங்கே கிடைக்கிறதாம். மதுரை ஹார்வி மில்ஸாரின் நூலில் நெசவு செய்த ஜவுளி வகைகள் வந்திருக்கின்றன. நல்ல வகைகள் வாங்கிக்கொண்டேன்.

“அப்பாடா!'' என்று வீட்டுக்குத் திரும்பினேன். வந்ததும், வராததுமாய்க் கையில் பவானி பிரசுரம் ஒன்றை எடுத்துக்கொண்டு காத்ரெஜ் சோபாவில் சாய்ந்துகொண்டேன். ராஜம் எச். எம். வி. கிராமபோனில், உயர்தரமான எச். எம். வி. இசைத் தட்டுகளை வைத்தாள். அற்புதமான கீதம் பொங்கிப் பொழிந்தது; நான் உலகத்தையே மறந்தேன்.

✲

தலைமுறைப் பேச்சு

அமெரிக்க காங்கிரஸின் ஒரு கூட்டத்தில் ஓர் அங்கத்தினர் ஹென்ரி க்ளே என்பவரிடம் பின்வருமாறு கூறினராம்:

“ஐயா! நீங்கள் இப்போது இருக்கும் சமூகத்துக்காகப் பேசுகிறீர்கள். நான் வரப்போகும் தலைமுறைகளுக்காகப் பேசுகிறேன்!''

“அது சரிதான், ஐயா! ஆனல், நீங்கள் யாருக்காகப் பேசுகிறீர்களோ, அவர்களே வரும்வரையில் உங்கள் பேச்சை நிறுத்த மாட்டீர்கள்போ லிருக்கிறதே!'' என்ருராம் ஹென்ரி க்ளே.

—போஸ்ட் மாஸ்டர்

அகிலாவின் அஞ்ஞாத வாசம்

சினிமாவோ, ட்ராமாவோ, டீ பார்ட்டியோ, கடற்கரையிலோ எங்கும் உல்லாசமாக உலவிவந்த அழகி அகிலா திடீரென்று வெளியிலேயே வராமல் அஞ்ஞாத வாசம் செய்ய ஆரம்பித்தாள். அவள் சிநேகிதிகளுக்கு இது ஒரு பெரிய மர்மமாக இருந்தது. வாஸ்தவத்தில் ஒரு ரகசியமும் இல்லை. விஷயம் இதுதான். ஏதோ காரணத்தினால் அகிலாவின் கூந்தல் பிடிப்பிடியாக உதிர்ந்து தலையில் சொட்டைகள் வேறு விழ ஆரம்பித்துவிட்டன. அதனால் அவள் அழகே மிகவும் கெட்டுவிட்டது. பாவம், அகிலா வெளியே தலையைக் காட்டவே வெட்கப்பட்டுக் கொண்டு உள்ளேயே பதுங்கிக் கிடந்தாள். இந்த உண்மையை அறிந்த அவள் சிநேகிதி ஒருவள் அகிலாவை ஜாப்கோ ஹேர் குரோயர் தைலத்தை உபயோகிக்கும்படி வற்புறுத்தினாள். அகிலா அப்படியே செய்தாள். கொஞ்ச நாட்களில் கூந்தல் உதிர்வது முற்றும் நின்று தலையில் கருகருவென்று கேசம் அடர்த்தியாக வளர ஆரம்பித்தது. அகிலா இப்பொழுது முன்னிலும் பன் மடங்கு அழகுடன் விளங்குகிறாள்; எங்கும் உத்ஸாகத்துடன் உலவி வருகிறாள்.

ஜாப்கோ ஹேர்குரோயர் அபூர்வமான மூலிகைகளைக் கொண்டு, மிக அனுபவம் வாய்ந்த ரஸாயன நிபுணர்களின் மேற்பார்வையில் தயாரிக்கப்படுகிறது. கூந்தல் உதிர்வதை நிறுத்தி அடர்த்தியாக வளரச் செய்கிறது.

நெ. 1 முதல் நெ. 4 வரை ஒரே விலை. ஒவ்வொன்றும் 3 வருஷம் உத்தரவாதம் பெற்றவை. ஸ்டாக் மிகக் குறைவாகவே இருக்கிறது.



இதோ படத்திலிருப்பவை இப்பொழுது வந்த புதிய மாடல்கள். அழுத்தமான லீவரும், ஜ்வெல்லும் பொருந்திய ஸ்விஸ் தயாரிப்புகள். க்ரோமியம் கேஸ், 10 வருடம் உத்தரவாதமுள்ள ரோல்ட் கோல்ட் கேஸ் ஆகிய இரண்டு வகைகளிலும் கிடைக்கின்றன. விலை ரு 42/- உயர்தரம் ரூ. 46/- ரோல்ட் கோல்ட் ரூ. 62/- 15 ஜ்வல்கள் பொருந்திய ரகத்திற்கு ரூ. 68/- உயர்தரம், தண்ணிர் பட்டால் கெடாத ப்ளாஸ்டிக் வாருடன் ரூ. 75/- ரோல்ட் கோல்ட் ரூ. 85/- உயர்தரம் ரூ. 96/- நெ 5 பெண்கள் அணியும் கடிகாரம் ரூ. 55/- ரோல்ட் கோல்ட் ரூ. 70/- 15 ஜ்வல்கள் பொருந்தியது ரூ. 85/- ரோல்ட் கோல்ட் ரூ. 110/-. தபால் செலவு கிடையாது. கடிதம் எழுதுவோர் ஆங்கிலத்தில் எழுதுங்கள்.

எங் இந்தியா வாச் கம்பேனி., (S./7)., போஸ்ட் பாக்ஸ் 6744, கல்கத்தா.

புதுச் சட்டை

●

கிருஷ்ண சந்தர்

பனிப் படலம் மலை நாட்டைக் கவிந்திருந்தது; அடி வானம் வெளுத்துக்கொண்டு வந்தது; சூரியன் இளங் கதிர்களைப் பரப்பிக்கொண் டிருந்தான்.

அப்போதுதான் பேகமா, குன்றின் மீதுள்ள தன் குடிசையிலிருந்து வெளிப் போந்து, சோம்பல் முறித்தாள். கண்களைக் கசக்கி, முகத்தைத் துடைத்துக் கொண்டாள். ஜிஜாரையும், மேல் சட்டையையும், முக்காட்டையும் சீர்ப்படுத்திக்கொண்டு, மலையடிவாரத்தை நோக்கினள். பனிப் புகை சரியாகக் கலையவில்லை. ஆயினும், வயல் வரப்புகளும், தோப்புத் துறவுகளும் நன்ருய்த் தென்பட்டன. இளங் கதிரொளியில் அந்த இயற்கைக் காட்சி மனச் சாந்தியை அளித்தது. மலை அடிவாரத்தின் ஒரு பகுதியில், ஓர் ஊரும் அமைந்திருந்தது. ஊரென்ருல், பத்தெட்டுக் குடிசைகள் தான். இரவும் பகலும் வயல் வரப்பைக் காத்துக்கொண்டு ஜீவிக்கும் விவசாயப் பாட்டாளி மக்களின் சேரி அது. அந்தப் பட்டியை அடுத்து ஒரு நதியும் ஓடிக்கொண் டிருந்தது. அந்த ஆற்று நீர்தான் வயல்களுக்கும் தோட்டங்களுக்கும் பாய்ந்து, இல மடந்தையின் இயற்கை எழில்களை வனப்புறச் செய்து கொண் டிருந்தது.

அங்கே ஒரு நெல் வயல். நெல் வயலை யடுத்த சிறுகளத்து மேட்டில், தன் கணவன் குல் ஹமீது பாடுபட்டு உழைத்துக்கொண் டிருந்ததை, மலை மேட்டி லிருந்த வண்ணம், பேகமா பார்த்துப் பரவசமடைந்துகொண் டிருந்தாள்.

அவ்வளவு உயரத்தி லிருந்து அடிவாரத்தி லுள்ள தன் கணவனைப் பார்த்தபோது, சின்னஞ் சிறு மனிதப் பொம்மை அங்கு மிங்கும் நடமாடி விளையாடுவது போல் தெரிந்தது அவளுக்கு. ஆம்! தான் சிறு பெண்ணுயிருந்த போது, தானே செய்துவைத்து விளையாடும் பொம்மையே அவளுக்கு ஞாபகம் வந்தது பாலிகைப் பருவத்தில் அவள் பொம்மை செய்வது எப்படித் தெரியுமா? சோளத் தட்டையை அளவளவாக நறுக்கி எடுத்துச் சீவிச் சுத்தப்படுத்தி ஒன்று சேர்ப்பாள்; குச்சியை அதனுள் செருகிச் சமப்படுத்துவள்; அதன் உச்சியில், அக்ரோட் கொட்டையின் மேல் பக்கத்தில் ஒட்டை செய்து கவிழ்த்துவிடுவாள். சோளத் தட்டைதான் உடல்; இடையில் கோத்த குச்சிதான் கைகள்; அக்ரோட் ஓடுதான் தலை. பொம்மை செய்தாய்விட்டது. பழைய துணிகளையும் பாசி மணிகளையும் அளவாக எடுத்து அந்தப் பொம்மைக்கு அலங்காரம் செய்து, ஆனந்தம் கொண்டு விளையாடுவாள் அவள்.

ஒரே ஒரு பொம்மையை வைத்துக்கொண்டு எப்படி விளையாட முடியும்? சர்தார் பொம்மை ஒன்று; சர்தாருடைய சிப்பாய்ப் பொம்மைகள் பத்துப் பதினைந்து;

உருது எழுத்தாளர்களில் ஸ்ரீ கிருஷ்ண சந்தர் மிகப் பிரபலமான கதாசிரியர். சின்ன அஸ்திவாரத்தைக் கொண்டு பெரிய மாளிகைகளை எழுப்பும் திறன் அவரிடம் அசாதாரணமாக அமைந்துள்ளது. அதற்கு ஒரு 'மாதிரி'யாக விளங்குகிறது, உருதுவிலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட இந்தக் கதை.

சர்தாருடைய மனைவிப் பொம்மையும் ஒன்று. சர்தாருக்கு மட்டும் மனைவியிருந்தால் போதுமா? சிப்பாய்களுக்கும் மனைவி மக்கள் இருப்பார்களே? ஆண் பொம்மைகளுக்குத் தலைப்பாகையாகத் துணி சுற்றப்படும்; பெண் பொம்மைகளுக்குச் சோளக் கதிருடன் உள்ள மிருதுவான ரோமங்கள் போன்ற சிவப்பு நிற விழுதுதான் தலை மயிர்; சிப்பாய்களுக்கும் சர்தாருக்கும் மீசை வைப்பதும் அந்த விழுதைக்கொண்டுதான்.

இவ்வாறு அவள் பால்யத்தில் பொம்மைகள் செய்து விளையாடும்போது, தன் தோழனுகிய அப்போதிருந்த குல் ஹமீதுடன் ஒரு 'சண்டை' ஏற்பட்டுவிட்டது; காரணம், குல், ஆண் பொம்மைகளுடைய தலையில் சோளக் கதிர் ரோமங்களைக் கொஞ்சம் வைத்துவிட்டான்; இதனுல் ஆண் பொம்மைகளுக்கும் பெண் பொம்மைகளுக்கும் வித்தியாசம் தெரியாமல் போய்விட்டது; ஆதலின், பேகமா, அந்த மயிர்களைக் களைந்துவிட்டாள். 'ஆண்களுக்குத் தலையில் மயிர் இல்லையா?' என்று கேட்டான் குல். 'ஆண்கள் மொட்டையடித்துக்கொள்ள வேண்டுமே?' என்று சொல்லி அவனது முகத்தில் நகத்தால் பிராண்டிவிட்டாள் பேகமா. அபிப்பிராய பேதம் வலுத்து, சண்டையில் முடிந்தது; சண்டை யென்ருல் அடிபிடிச் சண்டை யில்லை; பொம்மைகளைத் தூக்கி எறிந்து விட்டான் குல். பேகமாவும் அவற்றைக் காலால் இடறிவிட்டுப் போனுள். அன்று விளையாட்டு கெட்டுப்போய்விட்டது.

குன்றின்மேல் உள்ள வீட்டு வெளியிலிருந்து, அடிவாரத்து வயல் வரப்பில் நடமாடி வேலை செய்யும் ஆட்களையும் தன் கணவன் குல் ஹமீதையும் பார்க்கும்போது, பொம்மை விளையாட்டு மேலே சொன்ன ஞாபகத்துக்கு வந்தது. பேகமாவின் அதே பால்யத் தோழனுகிய தன் கணவன் குல் ஹமீதுடன் இப்போது அந்த மாதிரியான பொம்மை ஆட்டம் விளையாடலாமா என்று ஒரு நைப்பாசையும் ஏற்பட்டது பேகமாவுக்கு. பெரிய பெண்ணுய், கல்யாணமாகி, குடித்தனக்காரியாய், இன்னும் சில மாதங்களில் தாயாகப் போகும் ஒரு ஸ்திரீ, பொம்மை விளையாட்டு விளையாடுவது உசிதமாகாதல்லவா? ஆயினுமென்ன? இன்னும் கொஞ்சக் காலம் பொறுத்தால் உயிருள்ள பொம்மையாகிய தம் குழந்தையுடனேயே, சதி பதிகளாகிய அதே இருவரும் விளையாடலாமே என்று மனத்தைத் தேற்றிக் கொண்டாள்.

இப்படி யெல்லாம் மனோரதத்தை ஓடவிட்டு ஒரு கணம் மெய்ம் மறந்திருந்த பேகம் சட்டென ரதத்தின் ஓட்டத்தை நிறுத்திக்கொண்டு, கண்ணோட்டத்தைச் செலுத்தினுள்.

இளஞ் சூரிய ஒளி அவள் முகத்தைப் பிரகாசப்படுத்திக் காட்டிற்று. வெண்ணிறமான அவள் சரீரம் பொன் மயமாய் விளங்கியது. இதை யெல்லாம், அவளது புருஷன் பக்கத்தி லில்லாத சமயத்தில், தூரத்தில்—அடிவானத்தில் தலை தூக்கிப் பார்த்துக்கொண்டே ஆகாயத்தில் நகர்ந்துகொண் டிருந்தான் சூரியன்.

பேகமா, சூரியோதயக் காட்சியை ஒரு கணம் பார்த்து ரசித்துவிட்டு, உயிருள்ள பொம்மைபோல், மலை யடிவாரத்தில் வேலை செய்துகொண் டிருக்கும்

தன் கணவனைக் கூர்ந்து நோக்கினாள். கீழே இறங்கிப் போய், அவனுடன் கொஞ்ச நேரம் வார்த்தையாடி, மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி எழுந்துவிட்டு வர வேண்டுமென்று அவள் உள்ளம் விழைந்தது; உள்ளம் விழையவே கால்கள் அசைவு கொண்டன. அந்த இளம்பாவையான மலைநாட்டு மங்கை பேகமா அதி சுறுசுறுப்புடன் சரசர வென்று இறங்கிச் செல்லலானாள்—மலையடிவாரத்தை நோக்கி.

சரசர வென விரைவாக அவள் இறங்கி வருகையில் குறுக்கிட்ட சிறு குண்டுக் கல்களும், தாழ்வான சரிவுகளும், அடர்ந்த புல் பூண்டுகளும், அவளது வேகத்தை யொன்றும் தடுத்துவிட வில்லை; இளந்தேகமும், இரத்தத் துடிப்பும் உடையவளல்லவா பேகமா!

வரும் வழியில் ஒரு குகையில் மான் குட்டி யொன்று பதுங்கித் தூங்கிக்கொண் டிருந்தது; அதைக் கண்டதும் அவள் வேகம் குறைந்தது; அந்த அழகிய ஜந்துவைச் சற்று நோக்கினாள். ஒரு சிறு கல்லை விட்டெறிந்து, அதை யெழுப்பி ஓட்டலாமா வென்று அவளது இளம் மனம் விழைந்தது. "சீ, இந்த விளையாட்டு வேண்டாம்; தாய் மடியில் குழந்தை தூங்குவது போல், குகையில் அந்தப் பிராணி தூங்குகிறதே, அதன் அமைதியைக் குலைக்கலாமா?" என்று அவளது அந்தராத்மா சொன்னது. "ஆம், எனது சரீரத்துள்ளும், கர்ப்பாசயம் என்னும் குகையில் ஒரு சின்னஞ் சிறு உயிர் தூங்கிக் கொண் டிருக்கிற தல்லவா?" என்ற ஞானமும் ஏற்பட்டது அவளுக்கு. ஆதலால், தளர்ந்த தன் நடையைத் துரிதப்படுத்தி, மீண்டும் சரசர வென்று இறங்கிச் சென்றாள்.

இன்னும் சிறிது இறங்கிச் சென்றாள்; மலைமீது உறைந்திருந்த பனியெல்லாம், சூரிய வெப்பம் பட்டதும், நீராக மாறிப் பிரவாக மெடுத்து வழிந்து வருவதால், மலையின் அடிவாரத்துக்கு ஓடும் சிறு நதி யருகில் வந்து சேர்ந்தாள்; நதியின் நீர் ஸ்படிகம் போல் தெளிந்து ஓடிக்கொண் டிருந்தது; இளஞ் சூரியனின் விரிகதிர் அதன்மீது பட்டு, வெள்ளித் தகடுபோல் இலங்கிக்கொண் டிருந்தது; அந்தக் காட்சி பேகமாவின் தூய மனத்தை ஒரு விநாடி கவர்ந்தது; கண்ணாடி போல் தெளிந்திருந்த தண்ணீரைக் குனிந்து பார்த்தாள்; அதில் தன் முகம் தெரிந்தது; முகத்தில் தவழும் புன்முறுவலையும் பார்த்து மனம் பூரித்தாள். ஏனோ அவளுக்கு என்றுமில்லாத சந்தோஷம் அன்று தோன்றியது. இது ஏன்?

விடிந்ததும் புருஷனைக் கண்டு பேசப் போகும் உற்சாகத்தினாலா? தன் கணவன் வாங்கி வந்து கொடுத்த பச்சைப் பட்டுத் துணியால் தைக்கப்பட்ட புதுச் சட்டையை யணிந்துகொள்ளப் போகும் மகிழ்ச்சியினாலா? தன் தேகத்துள் உயிர் பெற்று அசையும் சிசுவைப் பற்றித் தன் கணவனிடம் கூறப்போகும் ஆர்வத்தினாலா? என்ன காரணத்தால் இத்துணை சந்தோஷம் தனக்கு ஏற்படுகிற தென்று அவளுக்கே புரியவில்லை.

நதிக் கரையிலே அடர்ந்து வளர்ந்த ஒரு வகை மரத்தின் விழுதுகளை ஒரு கிழவன் வெட்டி யெடுத்துக்கொண் டிருந்தான். பேகமா பெருமூச்சு விட்டுக் கொண்டு ஓடுவதை அவன் கண்

டான். "பானு! எங்கே இப்படிப் பரக்கப் பரக்க, பெருமூச்சு விட்டுக்கொண்டு ஓடுகிறாய்" என்று திடீரென்று ஒரு குரல் கேட்கவே, பேகமாவின் ஓட்டம் நின்றுவிட்டது. எங்கிருந்து அந்தச் சப்தம் வந்ததென்று கவனித்தாள். ஒரு பெரும் குன்றுக் கப்பால், ஒரு மரத்தின் மேற்கிளையிலிருந்து அந்தத் தொனி வந்ததென்பதை, அங்கே தனக்கு மிகப் பரிச்சயமான நேசத் 'தாத்தா'வான ரோஷன் தீன், குரங்கு போல் தொத்திக்கொண்டிருப்பதைக் கண்டபின்தான் அறிந்தாள்.

"என்ன தாத்தா, மரத்தின் மேல் இருந்துகொண்டு என்ன செய்கிறாய்?" என்று கேட்டாள்.

"வயிற்றுப் பிழைப்புக்காக உழைக்கிறேன். அல்லா தன் அடியார்களுக்கு எந்த வகையிலாவது ஜீவனோபாயம் கொடுத்து விடுகிறார். இந்த மரத்து விழுதுகள், கொளுத்தினால் தீப்பந்தம் போல் சுடர் விட்டெரியும். என்ன அற்புதம் பார்! இது அல்லாவுடைய கருணைதானே?"

"கொளுத்துவதற்கு நாலைந்து 'பத்தி'களைக் கொண்டுபோனால் போதாதா? இவ்வளவு ஏராளமாய் எதற்காக வெட்டி எடுத்துக்கொண்டு போக வேண்டும், தாத்தா?"

"குழந்தாய் பேகமா! இப்போது சில நாளாய்ப் புது வியாபாரமொன்று செய்கிறேனே!"

"அதென்ன தாத்தா?"

"இயற்கை எழில் நிறைந்த இந்தக் காஷ்மீரத்தைப் பார்க்க வேண்டுமென்று, யாத்திரீகர்கள் வந்து இம் மலைப் பிரதேசங்களில் தங்கிப் போகிறார்களே, அவர்களுக்கு எண்ணெய்ச் செலவில்லாமல் விளக்கேற்றும் தந்திரத்தை இந்தப் பத்தி விழுதுகளைக் கொண்டு கற்றுக்கொடுத்து விட்டேன். ஆகையால், இந்த வியாபாரம் இப்போது எனக்கு நன்கு கைகொடுத்து உதவுகிறது.

"ஓஹோ! நீ வியாபாரியாய்ப் போய்விட்டாய்; இனி என் வீட்டில் ரொட்டி, கறி ஏதாவது மிச்சம் மீதியிருந்தால், முன்போல் கேட்டு வாங்கித் தின்று எங்களை வாழ்த்த மாட்டாய்."

"பானு! அந்த நேச விசுவாசத்தை நான் விட்டுவிட முடியுமா?"

"சரி, ரோஷன் தாத்தா! விழுதுப் பத்திகளில் கொஞ்சம எனக்கும் கொடேன். வீட்டில் கிடந்ததை யெல்லாம் எரித்தாகி விட்டது. இரவுக்குக் கொஞ்சம் வேண்டும்."

"வா அம்மா, வா! வந்து எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு போ! என் கண்மணிக் குழந்தையான உனக்கா நான் இல்லையென்று சொல்வேன்?"

"ரோஷன் தாத்தா! நான் 'அவ'ரைப் பார்க்க வயலுக்கு இறங்கிப் போகிறேன்; போய்த் திரும்பி ஏறிவரும்போது வாங்கிக்கொள்கிறேன்."

"ஓ, நீ 'அவ'ரைப் பார்க்கப் போகிறாயா? 'அவர்' பேச்சுக் கொடுத்துவிட்டால், உன்னால் சீக்கிரம் திரும்பிவர முடியாதே!"

"அப்படியானால், ஒரு பத்துப் பத்திகளை இந்த வழியில் கட்டிப் போட்டுவிட்டுப் போ! நான் எடுத்துக்கொள்கிறேன்."

"சரி; அப்படியே ஆகட்டும், பானு!"

அருமையான பற்கள் !

உங்கள் பற்கள் வருஷக்கணக்காக வசீகரத்தன்மையுடன் இருக்குமா?

பற்கள் விலை மதிக்கமுடியாத நகைகளைப் போன்றவை. அவை உங்கள் புன்முறுவலை அழகுபடுத்தவோ, கெடுக்கவோ செய்யலாம். ஈறு உபாதிகள் பற்களுக்கு தீங்கு விளைவிக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள். தவறாமல் எஸ். ஆர். டூத் பேஸ்டி★னால் சுத்தம் செய்தால் பற்கள் வெண்மையாகவும், ஆரோக்கியமான ஈறுகளில் உறுதியாகவும் விளங்கும்.

★ பல் வைத்தியர்களால் ஈறு வியாதிகளுக்கு கையாளப்படும் ஸோடியம் ரிஸினோலியேட் என்னும் விசேஷ மருந்து சேர்ந்தது.

GSR. 25-50 TM

D. & W. GIBBS LIMITED, LONDON, ENGLAND

ஆஸ்தமா வியாதியுள்ளவர்களுக்கு நான் இதைத்தான் சொல்லுவேன்

தற்சமயத்திற்கு குணமளிக்கும் மருந்துகளை வாங்குவது முற்றிலும் வீண்.

"புரோஹித் சுவாஸஹரி" தற்சமயத்திற்கு மட்டும் அல்ல, "ஆஸ்த்மா"வின் மூல காரணங்களையும் கண்டித்து நீடித்த குணத்தை அளிக்கும். சாப்பிட ஆரம்பித்ததுமே திணறலை நிறுத்தி ஜீரணத்தையும் அதிகரிக்கிறது. நாளடைவில் பலத்தையும் கொடுத்து ஆஸ்த்மாவை வேரோடு ஒழிக்கும்.

"ஆஸ்த்மா," திணறல் (கஷ்ட சுவாசம் மூதுகுவலி, தொண்டைக் கரகரப்பு, இருமல்) இன்னும் இதைப்போன்ற ஈரல் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு "சுவாஸஹரி" ப்ளெயின், (நீலப்பெட்டி) சாப்பிடவேண்டும். அஜீரணம் வயிறு உப்பிசம் உள்ள ஆஸ்த்மா வியாதி உள்ளவர்கள் "சுவாஸஹரி" காம்பௌண்ட் (சிவப்புப் பெட்டி) உபயோகிக்கவேண்டும்.

ஒவ்வொரு மருந்துக் கடையிலும் கிடைக்கும் 3, 6, 12, அவுன்ஸ் அளவுகளில் முறையே ரூபாய் 3-6-0, 5-12-0, 10-0-0 ஆக விலை.

தயாரிப்பவர்கள் :—

புரோஹித் பார்மஸி, கோலாப்பூர்
எம். எஸ். எம்.

ஸ்டாக்கிஸ்டுகள் ;— சென்னை :

1. அப்பா அண்டு கோ, சைனபஜார்.
2. அமிருத் ரத்னகர் பார்மஸி,
கோவிந்தப்ப நாயக்கன் தெரு.

திருவாங்கூர் :

K. C. மாத்யூ & கோ,
கெமிஸ்ட்ஸ் &,
ட்ரக்கிஸ்ட்ஸ்,
கோஷாஞ்சேரி.

புரோகித்ஸ் ஸ்வாஸஹரி

அடுத்த விளையாட்டுப் பந்தயத்தில்

அம்ருதா

ரத்த சுத்தி திராவகம்..

கலக்கம், ஆயாசமில்லாமல் நன்கு விளையாடி வெற்றி பெறச் செய்கின்றது.

நரம்புகளை முறுக்கேற்றுகிறது

353 A.E.

கேசரிகுடீரம் லிட. மதராஸ

ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாட்டுக்கு ஏஜண்டுகள் :

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

பெர்ஹாம்பூர், செகந்திராபாத்,
பெஜவாடா, மதுரை.

"போய்வரட்டுமா, தாத்தா?"

"கொஞ்சம் இரு, அம்மா! உன்னிடம் உன் புருஷனைப் பற்றி ஒரு விஷயம் கேட்கவேணும்."

"என்ன அது!"

"உன் புருஷன் மிகவும் நல்ல பையன்; நம் ஊரிலேயே அவனைப்போல் நல்ல பெயரெடுத்தவன் யாருமில்லை; அவனுக்கேற்ற நல்ல மனைவியாய், நீயும் அருமையாய்வாய்த்தாய்; உங்கள் இரண்டு பேருக்கும் அழகான ஓர் ஆண் குழந்தை பிறந்து, அதையெடுத்து நான் விளையாட வேண்டுமென்று எனக்கு ஆசையாயிருக்கிறது, பேகம்!"

"போ, தாத்தா! உனக்கு மட்டும்தான் ஆசையாயிருக்குமோ? அவரும்தான் அப்படிச் சொல்லிக்கொண்டிருந்தார். சரி, இதற்குத்தானா என்னை இருக்கச் சொன்னாய்?"

"இதற்கில்லை பானு! உன் புருஷனுக்குக் காஷ்மீர் நகரத்திலே ஓர் உத்தியோகம் கிடைத்திருக்கிறதாம்; இவ்வூர் விவசாயிகளுக்கு நிலம் கொடுத்து உதவுகிறாரே, அந்த நவாப்கான், அவர் உன் புருஷனைக் காரியஸ்தராய் வைத்துக்கொள்ளப் போகிறாராம்!"

"அதெல்லாம் வேண்டாம் எங்களுக்கு; அந்த உத்தியோகம் எங்களைப் பிரித்துவிடும். வீட்டில் அவர் துணையின்றி நான் எப்படி ஒண்டியாய் இருப்பேன். சரி, போய்வருகிறேன் தாத்தா."

"சரி, போய்வா, அம்மா"

பேகமா, மலையடிவாரத்துக்கு வந்து சேர்ந்துவிட்டாள்; அதற்குள் சூரியனும் சிறிது உயரத்துக்கு வந்து, உஷ்ணமான கிரணங்களை எங்கணும் வீசலானான்; பனிப் படலமும், மூடுபுகையும் மறைந்தன. வயலில் போர்வை போர்த்துக்கொண்டு வேலை செய்துகொண்டிருந்த இளைஞன் குல் ஹமீது நிமிர்ந்து நின்று, சூரியனின் கிரணங்களைத் தன் தேகத்தில் படும்படி போர்வையை எடுத்தெறிந்தான். அப்போதே அங்கு மான்போல் ஓடி வந்துநின்ற பேகமா மீது அந்தப் போர்வை விழுந்து முகத்தை மூடிக்கொண்டது.

"யாரது?" என்று அதி ஆவலோடு கேட்டான் குல் ஹமீது.

"பூச்சி! இவரைப் பிடுச்சுக்கோ!" என்று கூறி, குழந்தைக்குப் பூச்சாண்டி காட்டுவதுபோல், கணவனை மிரட்டினாள் மனைவி பேகமா.

குல் ஹமீதே அந்தப் போர்வையை யெடுத்து, மனைவியின் முகத்தைப் பார்த்தான். என்றுமில்லாத ஜோதியையும், சோபையையும் அவ்வனிதையின் வதனத்தில் கண்டான் அவன்.

அவன் சிரித்தான்.

அவளும் சிரித்தாள்.

பேகமாவின் தோள்பட்டை மீது குல் ஹமீதின் வலது கரம் சென்றது; பேகமாவின் இடது கரம், குல் ஹமீதின் இடுப்பளவில் சென்றது. இரு இளஞ் சரீரங்களும் ஸ்பரிசிக்கப்பட்டு, ஒரு கணம் ஆலிங்கனம் என்னும் இன்ப வாரிதியில் திளைத்தன.

பேகமா அவனது பிடியிலிருந்து சட்டென்று விலகிக்கொண்டாள்.

"அதிருக்கட்டும். நீங்கள் வேலையை முடித்துக்கொண்டு சீக்கிரமே வந்துவிடுகிறேன் என்று சொன்னீர்களே, இன்னும் என் தாமதம்?"

"உனக்காகத்தான் இங்கு தாமதித்துக்கொண்டிருக்கிறேன்."

"நான் மலை மேலிருந்து அடிவாரத்திற்குச் சிரமத்தோடு உங்களைத் தேடிக்கொண்டு வர வேண்டுமென்ரு?"

"இல்லை, இல்லை; என் அருமைப் பேகமாவை, அப்படியெல்லாம் நான் கஷ்டப்படுத்துவேஞ?"

"பிறகு, எதற்காக?"

"பச்சைப் பட்டில் உனக்குப் புதுச் சட்டை தைக்கக் கொடுத்திருந்தேனல்லவா, அந்தத் தையல்காரன், இன்று காலை விடிவதற்கு முன் கொண்டுவந்து, இங்கே தருவதாகச் சொல்லியிருக்கிருன். அதற்காக!"

"இன்றுதான் அவனுக்கு என் மீது இரக்கம் வந்தது போலும்!"

"உன்மீதல்ல; என்மீது! சரி, அதிருக்கட்டும் பேகமா, நீ என்னிடத்தில் ஒரு விஷயத்தைக் கொஞ்ச நாளாக மறைத்துவைத்துக்கொண்டு வருகிருயே, அது நியாயமா?"

"என்ன, அது?"

"அதுவா? இது." என்று சொல்லி, குல் ஹமீது அவளது அடிவயிற்றை மிருதுவாகத் தொட்டுக் காட்டினன்.

பேகமா லஜ்ஜையால் குன்றிப் போனள்; முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"போங்கள், இதெல்லாம் நீங்கள் என்னிடம் கேட்கலாமா? நான் சொல்லித்தான நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்? என்னைப் பார்த்தே தெரிந்து கொள்ள முடியவில்லையா, உங்களால்?"

"முடியாமலென்ன? எத்தனை மாதம் என்று தெரிந்துகொள்ள வேண்டாமா?"

"அதைப்பற்றி உங்களுக்கு என் கவலை? அதோ யாரோ வரும் சப்தம்!"

இருவரும் விலகி நின்றனர்.

"என் அப்பா, தையல்காரரே! கொண்டுவந்தாயா, இல்லையா?"

"வெறுங் கையாக நான் உங்களிடம் வருவேஞ? இதோ, புதுச் சட்டை."

"என்னிடம் கொடு; அளவு சரியாய் இருக்குமா? போட்டுக் கொண்டபின், மேலும் கீழுமாய் இழுத்துக் கொள்ளாதே?"

"அப்படியெல்லாம் இருக்காது; பேகமாதான் இங்கேயே இருக்கிருளே? உடுத்துப் பார்க்கச் சொல்லுங்களேன்!"

"அது தெரியும்; நீ போ! சரியாக இருக்கிறதா, இல்லையா வென்று நாளைக்கு வந்து சொல்கிறேன்."

தையற்காரன் போனன்.

"பேகமா! வெளுத்த தங்க நிறமான உன் சரீரத்தில் இந்தப் பச்சை நிறப் பட்டுச் சட்டை என்ன அழகாய் இருக்கும் தெரியுமா? கொஞ்சம் என் முன்னலேயே உடுத்துக் காட்டேன், பார்க்கிறேன்!"

"இந்த இடத்திலா, திறந்த வெளியிலா? வெட்கமாய் இராதா எனக்கு?"

"என்னிடமுமா உனக்கு வெட்கம்?"

"ஊஹூம்......"

"பேகமா! எவ்வளவு நேரமாகும், பழைய சட்டையைக் கழற்றிவிட்டுப் புதுச் சட்டையை மாட்டிக்கொள்ள?"

"நான் சட்டை மாற்றும் போது என் அங்கங்களைப் பார்த்துக்கொண்டே இருக்கலாமென்று ஆசையா உங்களுக்கு?"

"ஆம், எனக்கு அந்த ஆசையிராதா?"

"ஊஹூம்; வெட்கமாயிருக்கிறது; அதோ, அந்தப் புதருக்கப்பால் போய்த்தான், சட்டை மாற்றிக்கொண்டு வருவேன்."

"சரி, உன் இஷ்டம்; சீக்கிரம்!"

பேகமா செடி மறைவிற் சென்று பழைய சட்டையைக் கழற்றினாள். குல் ஹமீது மெல்ல நகர்ந்து செடியருகில் போனான்.

"ஹூம், ஹூம்! இது அந்தப்புரம்; இங்கே புருஷர் வரக்கூடாது!" என்று விரட்டினாள் பேகமா.

ஆயினும் ஒரு கணம் அவளது கோமளமான சொர்ண சரீரத்தையும், புடைத்தெழுந்து, நிமிர்ந்து நின்ற கனத்த தனங்களையும் கண்டு ஆனந்தித்துப் பூரித்துத் திரும்பினான் குல் ஹமீது.

அடுத்த கணம் பேகமா, பூத்துக் குலுங்கும் பச்சை மரம்போல் எதிரில் வந்து நின்றாள். குல் ஹமீது பிரமித்துப்போனான். இத்தனை நாட்களாய் இல்லா அத்தனை அழகு அவளுக்கு எப்படி வந்தது என வியந்தான். ஆவல் மிகுதியால் ஆகர்ஷிக்கப்பட்டு, அவளை கட்டியணைத்து முத்தமிடப் போனான்.

"ஊஹூம், விடுங்கள்! புதுச் சட்டை கசங்கிவிடும்" என்று, அவனது பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டாள்.

"நேரமாகிவிட்டது; வாருங்கள், மேலே போகலாம்" என்று அழைத்தாள் பேகமா.

"இதோ, வந்தேன்! பச்சை நிறப் பாவை யழைக்கும்போது நான் வாராதிருப்பேனா? வா, கை கோத்துக்கொண்டு போவோம்!"

"ஊஹூம்; அப்படி வேண்டாம்; நான் வேறு வழியாகவும் நீங்கள் வேறு வழியாகவும் போவோம்; யார் முதலில் நம் வீட்டைப் போய் அடைகிறார்களோ, அவர்தான் ஜயித்தவர்."

"தோற்றால்?"

"நீங்கள் தோற்றால் எனக்கு ஒரு சலாம் செய்ய வேண்டும்."

"நீ தோற்றால் எனக்கு ஒரு முத்தம் கொடுக்க வேண்டும்."

"இதோ நான் புறப்பட்டு விட்டேன்."

"நானும்தான்!"

இருவரும் வெவ்வேறு மார்க்கமாய், குன்றுகளையும், பள்ளங்களையும், செங்குத்தான மேடுகளையும், புதர்களையும், நடந்தும், தாண்டியும், ஏறியும் சரசரவென்று, மேல்நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள்.

இருவரும், தாங்கள் போய்க் கொண்டிருக்கும் தொலைவையும் இடத்தையும் பரஸ்பரம் பார்த்துக்கொள்ள முடியாமல், மரங்களும் குன்றுகளும் மறைத்துக் கொள்ளும். அவ்விடங்களில் குல் சீட்டி அடிப்பான்; அந்தச் சப்தத்துக்கு மறு ஒலியாய், பேகம் தன் இனிய குரலால் கீச்சிட்டுக் கத்துவாள்.

இப்படியாக இருவரும் ஏறிப் போய்க்கொண்டிருந்தனர். மலைமீதுள்ள வீட்டை அடைவதற்கு இன்னும் கொஞ்சத் தூரம்தான் இருந்தது; முக்கால் வாசி தூரம் ஏறியாய்விட்டது;

இனிமேல் கரடு முரடான பாதைகள். இருவரும் நல்ல ரத்தம் தேகத்தில் ஓடும் இளவல்களாயிருந்ததால், கொஞ்சமும் சளைக்காமல், பந்தயத்தில் ஜயிக்க வேண்டுமென்ற ஆவலுடன் மேலே தாவித் தாவிப் போய்க் கொண்டிருந்தனர்.

குல் ஹமீதை விட, பேகமா கொஞ்சம் முன்னடியே போய்க் கொண்டிருந்தாள்; ஆனல் மார்க்கங்கள் வேருதலால், இருவருக்கிடையிலும் ஒரு பர்லாங்கு தூரம் வித்தியாசம் ஏற்பட்டுவிட்டது.

பேகமா, அந்தப் பக்கம் குன்றுகளைத் தாண்டிச் செல்வதை குல் ஹமீது பார்த்துக் கொண்டே போனன். ஓரோர் இடத்தில் தன் இளம் மனைவி, செங்குத்தான மேட்டிலும், சிறு குன்றிலும் மான்போல் துள்ளி ஏறுவதைக் காணும்போது, குல் ஹமீதுக்குப் பகீரென்று தூக்கி வாரிப்போடும். எங்கு அவ்விள நங்கை கால் பிசகி விழுந்து விடுவாளோ என்று பயப்படுவான். குன்றின் மீதேறி, பள்ளத்தில் அவள் குதிக்கும்போது, 'ஆ' என்று ஆர்ப்பரிப்பான். அவளது மிருதுவான தேகத்துள் உள்ள மிக மிருதுவான கர்ப்பாசயத்தில் வளரும் குழந்தையைப் பற்றி அதிகம் நினைத்து அவன் அஞ்சிடுவான்.

அந்தோ! குல் ஹமீது பயந்தது, உண்மையில் விபரீதமாகவே முடிந்தது. செங்குத்தான பெரிய குன்றின்மீது அவள் ஏறி நிற்கப் போகும் சமயத்தில், எதையோ கண்டு அலறிய சப்தம் இவன் காதில் விழுந்தது; சட்டென்று அந்த பக்கம் நோக்கினன்; பச்சை நிறப் புதுச் சட்டையைக் குறிவைத்து நோக்கினன்.

என்ன விபரீதம்! பச்சைச் சட்டை யுடுத்திய அப் பாவை, இடறி விழுந்து, குன்றின் பாறையில் மோதி, கீழ்நோக்கி உருண்டாள்.

"ஹா! பேகம், பேகம்! ஜாக்கிரதை, எதையாவதுப் பிடித்துக் கொள்!" என்று குல் ஹமீது கத்திக்கொண்டு, அந்தப் பக்கம் ஓடினன்.

ஓடிப்போய், அவள் இடறி விழுந்த இடத்தைப் பரபரப்போடு, பார்த்தான். அங்கே பேகமாவைக் காணவில்லை. அங்குமிங்கும் துருவித் துருவி நோக்கினன்; கத்திக் கத்தித் தொண்டை கிழிய, பேகமாவை அழைத்தான். பிறகு, கண்ணுக்கெட்டிய தூரம் ஒவ்வொரு பகுதியையும் ஆராய்ந்தான், பேகமா மீது பைத்தியங் கொண்ட குல் ஹமீது.

இறுதியாக, அவன் கண் மேட்டம் மலையடிவாரத்துக்குச் சற்று மேலே, நதியோரம், ஒரு மரத்தின் பக்கம் சென்றது. அங்கு பச்சை நிறப் பட்டுச் சட்டை தோற்றமளித்தது. மின்னல் வேகமாய்ப் பாய்ந்தோடினன் அங்கே.

கோரக் காட்சி! பேகமாவின் உயிரற்ற உடல் மரத்தில் தொத்திக் கிடந்தது. குல் ஹமீது, புதுச் சட்டையால் மூடிய அப் பிணத்தை மரத்திலிருந்து கீழே கொண்டுவந்தான்.

கிழவன் ரோஷனும் அப்போது அங்கு வந்து சேர்ந்தான்.

*

படம் : என். ராமகிருஷ்ணு, மாயவரம்

“சோலை மலரொளியோ — உனது
சுந்தரப் புன்னகைதான் !”

—பாரதியார்

படம்: ஆர். கிருஷ்ணன், கும்பகோணம்

இரு மான் விழிப்பட்ட . . .



படம்: எஸ். கந்தசாமி, சேலம்

... காளையும், நிழலும்



மீரத் காங்கிரசில் இ. தே. ரா.
வீரர்களின் அணிவகுப்பு

மௌலானு ஆஜாத், ஸ்ரீமதி
சரோஜினி, பண்டித நேரு,
கான் அப்துல் கஃபார்கான்,
சர்தார் பட்டேல், ராஜேன் பாபு

★

மீரத் காங்கிரஸ் காட்சிகள்



ஜெனரல் ஷா நவாஸ், பண்டித
நேரு, ஸ்ரீமதி கிருபலானி,
ராஷ்டிரபதி கிருபலானி

★



படம்: ஆர். பூர்ணையா, கோயம்புத்தூர்

முதல் சிநேகம்



படம்: டி. சி. கண்ணன், சேலம்

முதல் பாடம்

உலகப் பிரசித்திபெற்ற சீன எழுத்தாளர் டாக்டர் லின் யூட்டாங் இந்தியா விடுதலையடைவதில் மிகவும் ஆர்வம் உள்ளவர். நேருஜியுடன் நெருங்கிய நட்புரிமை கொண்டவர். தமது தாய் நாடாகிய சீனாவைப் பற்றி ஆங்கிலத்தில் 'சீன மக்களும் சீனமும்' என்ற பெயரில் ஒரு நூல் எழுதியிருக்கிறார். ஸ்ரீ சுப. நாராயணன், ஸ்ரீ வெ. ராமசாமி இருவரையும் கொண்டு இந்த ஒப்பற்ற நூலைத் தமிழில் காரைக்குடி புதுமைப் பதிப்பகத்தார் வெளியிட்டிருக்கிறார்கள்.

எண்ணெய்ச் சுத்தம்

ப. வெ. வேங்கடசுப்ரமணியன்

ஆலைகளிலிருந்து வரும் எண்ணெயில் தூசு, பிண்ணாக்குச் சக்கை முதலிய அன்னியப் பொருள்கள் இருக்கத்தான் செய்யும். இந்த அன்னியப் பொருள்களைக் கீழ்க்கண்டவாறு ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம்.

1. மிதக்கும் பொருள்கள் :— விதையின் தோலி, தூசு முதலியவைகள்.

2. எண்ணெயுடன் தூளாகக் கலந்துள்ள பொருள்கள்.

3. எண்ணெயின் நிறத்திற்குக் காரணமான பொருள்கள்.

4. எண்ணெயின் மணத்திற்குக் காரணமான பொருள்கள்.

5. தனிக் கொழு - காடிகள்.

இந்த ஐந்து வகை அன்னியப் பொருள்களும் எண்ணெயைப் பல விதமாகப் பாதிக்கின்றன. எண்ணெயை எப்படி உபயோகிப்பினும் அதிலிருக்கும் மிதக்கும் பொருள்களை நீக்கி விடுதல் நலம். சோப்பு முதலியவை செய்வதற்கு நிறமற்ற எண்ணெயே சிறந்தது அதனால் இதற்கு உபயோகிக்கும் எண்ணெயின் நிறத்தை நீக்கிவிடுதல் நலம். மணத்தைக் கொடுக்கக் கூடிய பொருள்களும், தனிக் கொழு காடியும் உணவாகக் கொள்ளும் எண்ணெயில் இல்லாதிருத்தல் வேண்டும். சோப்பு செய்ய உபயோகிக்கும் எண்ணெயில் தனி கொழு காடி இருந்தால் பாதகமில்லை. ஏனென்றால், காரம் எண்ணெயைவிட, தனிக் கொழு காடியுடன் எளிதில் சேர்ந்து சோப்பாக மாறும்.

பிண்ணாக்குச் சக்கை, விதையின் தோலி, முதலியவைகள் எண்ணெயில் மிதக்கும் அன்னியப் பொருள்களாகும். இவை தவிர ஆலையிலிருந்து வரும் இரும்புத் தூள், மண் முதலியவைகளும் இருக்கலாம். இவைகளை வடிகட்டியோ அல்லது தெளிய வைத்தோ நீக்கிவிடலாம்.

எண்ணெயை வடிகட்டுவதற்கு ஏற்ற ஓர் இயந்திரம் இருக்கிறது. இது சுமார் ஆறடி நீளமும், ஒரு முழ அகலமும், ஒரு முழ உயரமும் இருக்கும். சிறு சிறு அறைகளாக நீட்டப் போக்கில் பிரிக்கப்பட்டிருக்கும். அறைகளின் நான்கு புறமும் மிகவும் கனமான துணியால் ஆனது. எண்ணெய், அறைகளுக்கு மேற்புறத்தில் வைத்திருக்கும் குழாய் வழியாக அதிக அமுக்கத்தில் (Pressure) வந்து ஒவ்வொரு அறையிலும் புகுகிறது; புகுந்து துணியின் நுண்ணிய துவாரங்களின் வழியாக வெளியே வருகிறது. இவ்வாறு வரும் எண்ணெய் ஆரம்பத்தில் சிறிது நேரம் கலங்கலாக வரும். சிறிது நேரம் கழிந்தபின் மிகவும் தெளிவாக வரும். முதலில் கலங்கலாக வந்த எண்ணெயைத் திரும்பவும் வடிகட்டிவிடுகிறார்கள். இந்த இயந்திரத்துக்கு அமுக்க—

எண்ணெயைப் பற்றிய வரிசைக் கட்டுரைகளில் இது இரண்டாவது. இதில் எண்ணெயை எந்த எந்த விதத்தில் சுத்தம் செய்யலாம் என்பது சொல்லப்படுகிறது. அடுத்த கட்டுரை "எண்ணெய் நெய் யாகுமா?"

வடிகட்டி, (ஆங்கிலத்தில் Filter press) என்று பெயர்.

அமுக்க வடிகட்டியின் துணையில்லாமலும் எண்ணெயிலுள்ள சக்கை முதலியவற்றை ஒருவாருக எடுக்க முடியும். எண்ணெயைச் சிறிது காய்ச்சி, பின்னர் அசையாமல் தெளிவுபெற வைத்துவிட்டால், எண்ணெய் மிகவும் தெளிவடையும். அல்லது காய்ச்சின எண்ணெயில் சிறிது உப்பு நீரைச் சேர்த்து நன்ருகக் கலக்கி, பின்னர் தெளிவடைய வைத்தால் நல்ல பலனைக் கொடுக்கும். உப்பு நீர் அழுக்குடன் கலந்து கீழே செல்ல எண்ணெய் மேலாக மிதக்கும். இவ்வாறு மிதக்கும் எண்ணெயை எளிதில் இறுத்துவிடலாம்.

எண்ணெயிலுள்ள தனிக் கொழு காடிகளைக் காரத்தின் உதவியைக் கொண்டு நீக்க வேண்டும். இவ்வாறு காரத்தின் உதவியால் தனிக்கொழு காடியை நீக்கும்பொழுது பெரும்பான்மையான மிதக்கும் பொருள்களும் கூடவே நீங்கிவிடுகின்றன.

பத்துடன் முதல் இருபதுடன் வரை பிடிக்கும் பெரிய அண்டாக்களில் எண்ணெயை எடுத்துக்கொள்ளுகிருர்கள். இந்த அண்டாக்கள் மின்சாரக் கலவை இயந்திரங்கள் பொருத்தப்பெற்றிருக்கின்றன. நினைத்த மாத்திரத்தில் விசையைத் தள்ள, கலவை இயந்திரம் அண்டாவிலிருக்கும் எண்ணெயை நன்ருகக் கலக்கிறது. அண்டா நம் வீடுகளில் காணப்படும் சாதாரண அண்டாவைப் போல், ஆனல், பன் மடங்கு பெரிதாக இருக்கும். மேல் முக்கால் பங்கு வட்ட வடிவமாகவும், கீழ்க் கால் பங்கு போகப் போகக் குறுகியும் இருக்கும். எண்ணெயை அண்டாவினின்றும் எடுக்க அண்டாவின் அடியில் ஒரு குழாய் பொருத்தப்பட்டிருக்கும். அண்டாவிலுள்ள எண்ணெயை வேண்டும்பொழுது காய்ச்ச அண்டாவிற்குள் நீராவிக் குழாய்ச் சுருள் இருக்கும். இக் குழாய்ச் சுருள் வழியாக நீராவியைச் செலுத்திஞல், குழாய்களின் வெளியிலுள்ள எண்ணெய் சூடாகும்.

எண்ணெய் அண்டாவிற்கு, கிடங்கிலிருந்து குழாய் மூலமாக வருகிறது. அண்டாவில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு எண்ணெய் நிரம்பினவுடன் எண்ணெய்க் குழாய் மூடப்படுகிறது. அதே சமயத்தில் குழாய்ச் சுருளில் நீராவியைப் பாய்ச்சி எண்ணெயைச்சுமார்பாரன்ஹீட் 140 டிகிரி வரை காய்ச்சுகிருர்கள். பின்னர் கலக்கும் கருவி மூலம் எண்ணெயை நன்ருகக் கலக்குகிருர்கள். சிறிது நேரம் கலக்கின பின், சிறு துவாரங்கள் வழியாக, நீரில் கரைந்த காரத்தை (கார நீர்) சிறிது சிறிதாக எண்ணெயின் மேல் தெளிக்கிருர்கள். எவ்வளவு காரம் சேர்க்க வேண்டுமென்பதை முன்னதாகவே ஆராய்ச்சிச் சாலையில் எண்ணெயைப் பரிசீலனை செய்து அறிகிருர்கள். நீரில் கரைந்த காரம் எண்ணெயிலுள்ள தனிக் கொழு காடியுடன் கலந்து சோப்பாக மாறுகிறது.

இதில் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்றிருக்கிறது. 'எண்ணெயில் நாம் காரத்தைச் சேர்க்கும்பொழுது அது தனிக் கொழு காடியுடன்தான் கலந்து சோப்பாகுமா? எண்ணெயுடன் கலந்து சோப்பாக மாருதா?' என்று கேட்கலாம். காரத்திற்குத் தனிக் கொழு காடியுடன் சேர்வது

மிகவும் எளிது. ஏனென்றால், எண்ணெயுடன் சேர வேண்டுமானால், முதலில் எண்ணெயைக் 'கிளிசரி' னாகவும் தனிக்கொழுகாடி யாகவும் பிரிக்க வேண்டிய வேலை இருக்கிறது. மேலும், உபயோகிக்கும் கார நீர் மிகவும் வலுக்குறைந்திருப்பதினால், தனிக்கொழுகாடியுடன்தான் சேரும். எண்ணெயில் கொஞ்சப் பாகம் தான் காரத்துடன் சேர்ந்து சோப்பாக மாறும். உபயோகிக்கும் காரத்தின் அளவு, எண்ணெயில் இருக்கும் தனிக்கொழுகாடியின் அளவுக்குத் தகுந்தாற் போல் இருப்பதால் தனிக்கொழுகாடி முழுமையும் சோப்பாக மாறிவிடும்.

இப்படிச் சோப்பாக மாறிய தனிக் கொழு காடியை எண்ணெயினின்றும் எப்படிப் பிரிப்பது? இப்பொழுது எண்ணெயுடன் சோப்புக் கலந்திருப்பதனால் சோப்பை மாத்திரம் தெளியவைத்துப் பிரிப்பது மிகவும் கடினம். அனேகமாக எண்ணெய் தெளியவே தெளியாது. சோப்பும் எண்ணெயும் கலந்து ஓர் குழம்பாகவே (எமல்ஷன்) இருக்கும்.

சோப்புக் கரைந் திருக்கும் நீரில், சிறிது உப்பு ஜலத்தைச் சேர்த்தால், கரைந்து கண்ணுக்குத் தெரியாமலிருக்கும் சோப்பு, தண்ணீரினின்றும் பிரிந்து மேலே மிதப்பதைக் காணலாம். இதற்குக் காரணம் சோப்பு உப்பு ஜலத்தில் கரையாது என்பதே. ஜலத்தில் சோப்புக் கரைந்தால் தான் நன்றாக நுரை வரும். சில கிணற்று ஜலத்தில் சோப்பு நன்றாக நுரை கொடுக்காது. இதற்குக் காரணம் கிணற்று ஜலத்தில் உப்புக் கரைந்திருப்பதனால் தான்.

ஆகவே, எண்ணெயும் சோப்பும் கலந்த குழம்பி லிருந்து எண்ணெயைப் பிரிக்க மேற்சொன்ன முறையைக் கையாளலாம். கலக்கும் கருவி, சூடு பண்ணின எண்ணெய்-சோப்புக் குழம்பை நன்றாகக் கலக்க ஆரம்பிக்கிறது. பின் சிறிது உப்பு நீரைச் சிறு துவாரங்களின் வழியாக நன்றாகத் தெளிக்கிறார்கள். ஐந்து அல்லது பத்து நிமிஷங்களில் கலப்பதை நிறுத்தவே எண்ணெய் சுமார் இரண்டு அல்லது மூன்று மணி நேரத்தில் தெளிவடைகிறது. சோப்பும் தண்ணீரும் கீழே செல்ல, எண்ணெய் மாத்திரம் மேலே மிதக்கிறது. அண்டாவின் அடியி லமைந்துள்ள குழாயின் வழியாகச் சோப்பும் ஜலமும் எண்ணெயினின்றும் வேறாகப் பிரிகின்றன. இவ்வாறு வரும் சோப்பில் சிறிதளவு தனி எண்ணெயும் கலந்துதான் இருக்கும். இந்தச் சோப்பை ஆங்கிலத்தில் 'புட்ஸ்' என்பர். இது சலவைச் சோப்பு செய்ய உபயோகப்படும். எண்ணெயை மேலும் இரண்டொரு முறை உப்பு நீராலும், ஒரு முறை சுத்த ஜலத்தாலும் அலம்புகிறார்கள்.

காரத்திற்குப் பதில் எண்ணெயி லுள்ள தனிக்கொழுகாடியை நீக்க, சோடா உப்பையும் உபயோகிக்கலாம். எண்ணெயி லுள்ள தனிக்கொழுகாடியுடன் கலக்க எவ்வளவு சோடா உப்பு வேண்டுமோ, அதற்கு ஒரு சதவிகிதம் கூடவே எடுத்து, மிகச் சிறிதளவு தண்ணீரில் கரைத்து, கரைசலை அண்டாவில் பாரன் ஹீட் 150 டிகிரி வரை காய்ச்சுகிறார்கள். இவ்வாறு சூடேற்றப்பட்ட சோடா உப்பு ஜலத்தில் எண்ணெய்க் குழாய் மூலமாக கொண்டு சேர்க்கப்படுகிறது.

கரியமில வாயு வெளிப்படுவதற்குத் தகுந்தாற்போல் எண்ணெய் சிறிது சிறிதாகக் கலக்கப்படும்.

நிறத்தை நீக்குவதற்கு உழமண்ணை (ப்ளீச்சிங் க்ளே) உபயோகிக்கிருர்கள். இதற்கென்று பிரத்தியேகமாகத் தயார் செய்த கரியையும் எண்ணெயின் நிறத்தை நீக்க உபயோகிக்கிருர்கள். எண்ணெயை நன்ருகத் தெளிய வைத்த பின் எண்ணெயின் எடையில் 2·3 சதவிகிதம் உழமண்ணைச் சேர்த்து பாரன் ஹீட் 110 டிகிரி உஷ்ணத்தில் சுமார் இரண்டு மணி நேரம் நன்ருய்க் கலக்கிருர்கள். பிறகு அமுக்க வடிகட்டியின் மூலம் எண்ணெயை வடிகட்டுகிருர்கள். வடிகட்டின எண்ணெய் எவ்வித நிறமுமின்றி, தண்ணீர் போலக் காணப்படும்.

எண்ணெயின் நிறத்தை நீக்குவதற்குப் பலவித இரசாயன முறைகளும் உண்டு. எண்ணெயில் பிராணவாயுவைச் செலுத்தினல் நிறம் ஒருவாறு நீங்கும். எண்ணெயில் வேண்டிய அளவு 'ஸோடியம் டைக்ரோமேட்' என்ற உப்பையும், கந்தகக் காடியையும் ஸல்ஃப்யூரிக் ஆஸிட் சேர்த்தால் அதினின்றும் உற்பத்தியாகும் பிராணவாயு எண்ணெயின் நிறத்தை நீக்கும்.

சில எண்ணெய்களின் நிறம் வெறும் கந்தகக் காடியினலேயே சிறிது நீங்கும். இதற்குச் சுமார் பா.ஹீ. 104 டிகிரி முதல் பா.ஹீ. 120 டிகிரி வரை எண்ணெயைச் சூடாக்கி, சிறிது கந்தகக் காடியைச் சேர்த்துக் கலக்க வேண்டும். மேலாகத் தெளிந்த எண்ணெயை இறுத்துவிட வேண்டும். பல முறை தண்ணீரால் எண்ணெயை நன்ருக அலம்ப வேண்டும். ஆனல், இம்முறை உணவாகக் கொள்ளும் எண்ணெயின் நிறத்தை நீக்க ஏற்றதல்ல.

சாதாரண எலும்பைச் சுட்டுத் தயார் செய்கிற கரிக்கு எண்ணெயை வெளுக்கும் சக்தி உண்டு. சீனி உற்பத்தி செய்யும் ஆலைகளில் கூடக் கருப்பஞ் சாற்றை வெளுக்க இந்தக் கரியை உபயோகிக்கிருர்கள். சில உகந்த கட்டைகளைச் சுட்டு தயார் செய்யும் கரிக்கு நிறம் நீக்கும் சக்தி உண்டு. தேங்காய் நாரைக் கொளுத்தி, அதினின்றும் கிடைக்கப்பெறும் கரிக்கு வெளுக்கும் சக்தி அதிகமாக உண்டு. சில முறைகளின் மூலம் இந்தக் கரியின் சக்தியைப் பன்மடங்கு அதிகரிக்கச் செய்கிருர்கள். இம் முறைகளை இன்னும் ரகசியமாகவே வைத்திருக்கிருர்கள். இப்படிச் சக்தி அதிகரிக்கப்பட்ட கரியை எண்ணெயின் எடையில் நூற்றிலொரு பங்கு உபயோகித்தால் நிறத்தை நீக்கப் போதுமானது. இம் மாதிரி சக்தி அதிகமாக்காத, எலும்புக் கரி அல்லது தாவரக் கரி, எண்ணெயில் சுமார் 3 சதவிகிதம் வரை உபயோகப்படுத்த வேண்டியிருக்கும்.

எண்ணெயி லுள்ள மணத்தை நீக்குவதற்கு அதிகம் சூடேற்றின கொதி நீராவியை எண்ணெயினுள் செலுத்துகிருர்கள். அண்டாவிலுள்ள காற்று முழுவதும் எடுபட்டிருப்பதனல், நீராவி, எண்ணெய்க்கு மணத்தைக் கொடுக்கக் கூடிய பொருள்களையும் கூடவே அடித்துக்கொண்டு போகிறது.

✻



THE MAN *in* INDUSTRY

ட்ராப்ட்ஸ் மேன்

இவர், தொழிற்சாலையில் திட்டம் தயாரிப்பவருக்கும், தொழிலாளருக்கும் இடையே தொடர்பாயுள்ளவர்.

கலையும், தொழில் ஞானமும் ஒருங்கே அமையப்பெற்ற இவர், திட்டங்களை யெல்லாம் விளங்கும்படி விரிவாகச் சித்தரித்து, குண்டூசி முதல் கப்பல்வரை செய்வதற்கு, இன்ஜினியர்களுக்கு உதவுகிறார்.

தொழிற்சாலையில் தயாரான பொருளை, நாடெங்கு விநியோகம் செய்வதற்கு நல்ல சாலைகள் தேவை. தற்பொழுது நம் நாட்டிலுள்ள ரோடுகள், சாமான்களை தேசம் முழுதும் விரைவில் சேர்க்க வசதியாய் அமைக்கப்படவில்லை. இந்தியக் கைத்தொழில் முன்னேற்றத்துக்கு, நன்கு அமைக்கப்பட்ட நல்ல ரோடுகள் தேவை.

இந்தியக் கைத்தொழில் அபிவிருத்திக்கு நல்ல ரோடுகள் தேவை என்னும் நம்பிக்கையுடன் பர்மாஷெல் கம்பெனியாரால் வெளியிடப்பட்டது.

BURMAH-SHELL OIL STORAGE AND DISTRIBUTING CO. OF INDIA LTD. (INCORPORATED IN ENGLAND) GA/BS/2

மங்கை

★

பெண்களின் புத்தகம்

★

பதிப்பாசிரியர்:

'குகப்ரியை'

●

குடும்ப வாழ்க்கை, குழந்தை வளர்ப்பு, வீட்டுவேலை, சமையல், தையல், எம்ராய்டரி, கதை, கட்டுரை, கவிதை முதலியன அடங்கியது

●

ரூபாய் ஒன்று.

தபால் செலவுடன் ரூ. 1-4

தொடர்ந்து வெளிவரும் 12 புத்தகங்களுக்கு தபால் செலவுடன் ரூ. 12

●

சக்தி காரியாலயம்

சென்னை 14

ஸ்திரீகளின் ஆரோக்யத்திற்கு

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

அருணா

கர்பாசயரோக நிவாரணி

அருணா ஸ்திரீகளின் தேக சுகத்திற்கு அவசியமான சிறந்த டானிக். முறைப்படி தவறாமல் உபயோகித்தால் ஆரோக்கியத்தை விருத்தி செய்து வாழ்க்கையை நன்கு ரசிக்கச் செய்யும்.

ஆயுர்வேதாஸ்ரமம் லிட்.

தி-நகர்.... மதராஸ்.

பிரசாரம்

டி. கே. துரைசாமி

எங்கேயோ ஓர் இடத்தில் பாரதி "நாலு துணை யிருந்தாலும் சுய புத்தி வேணும் பெண்ணே!" என்று பாடியிருப்பதாக ஞாபகம் வருகிறது. அதைப் போலத்தான் பிரசார விஷயத்திலும். சாதாரணமாக, மருந்துகள், வாசனைத் திரவியங்கள், தின்பண்டங்கள், சுக வாழ்வுக்குரிய ஜடப் பொருள்கள் இவைகளைப் பற்றித்தான் முக்காலும் பிரசாரம் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. ஆனால், இப்பொழுது, சற்றும் எதிர்பாராத விதமாக, ஒரு புதிய பிரசாரம் தலையெடுத்திருக்கிறது. இதைத்தான் இலக்கியப் பிரசாரம் என்று சொல்லவேண்டி யிருக்கிறது.

ஒரு குறிப்பிட்ட எழுத்தாளரைப் பற்றியோ, ஒரு குறிப்பிட்ட புத்தகத்தைப் பற்றியோ சில பிரசுரகர்த்தர்கள் வானளாவப் புகழ்ந்து பேசுவதைப் பார்த்தால், நமக்கு ஒரு விதமான மதிப்பு ஏற்படுகிறது. வர்ண விசித்திரங்களும், எழுத்து வன்மையும் உபயோகிக்கப்படுகின்றன. நமது மதிப்பைக் கவர்ந்த சிறந்த அறிவாளிகளின் புகழுரைகள் அணிந்துரைக்கப்படுகின்றன. சில சமயங்களில், இவ் வரிய நூல்களைப் பற்றிப் படிக்காத நம்மில் பலர், சிறந்த ஆசிரியர்கள் இந் நூல்களைப் பற்றி எழுதிய விமர்சனங்களைப் படிக்க நேர்கிறது. விமர்சனத்தின் சிறப்பை நோக்கி, நாம் வெகு ஆத்திரத்துடன் (ஆங்கில ஆசிரியர் ஒருவர் சொல்வது போல்) 'உடனே நமது சட்டையை மாட்டிக்கொண்டு' அவசர அவசரமாக, வெகு அருகிலுள்ள ஒரு புத்தகக் கடைக்குப் போய், அப் புத்தகத்தின் ஒரு பிரதியை வாங்கிக்கொண்டு வந்து விடுகிறோம். வாங்கி வந்தவுடன் படிக்க மணியில்லாமல், ஆர அமர அனுபவிக்க விரும்புகிறோம். ஆனால், மனத் துடிப்பைப் பொறுக்க முடியாமல், படிக்க ஆரம்பிக்கிறோம்! படிக்க ஆரம்பித்ததும் ஒரு சந்தேகம் தோன்றுகிறது! படித்துக் கொண்டே போகையில் சந்தேகம் ஊர்ஜிதமாகிறது! படித்து முடித்தவுடன் ஏமாற்றந்தான் தலையெடுத்து நிற்கிறது.

என்னவோ, யாரோ நமக்குப் பின் இருந்துகொண்டு நகைப்பது போல் தோன்றுகிறது. யாருமில்லை. நமது நண்பர் முதலாளிதான் மிகவும் எக்காளத்துடன் சிரிக்கிறார்:

"மூடனே! பணம் சம்பாதிக்க இலக்கியமும் உபயோகிக்கப்படும் என்பதை நீ இன்னும் அறிந்து கொள்ளாவிட்டால், இனியாவது அறிந்து கொள். சில சமயம், நாங்கள் உண்மையான சரக்கையும் வெளியிடுகிறோம். பல சமயங்களில், மோசமான சரக்கை மிகவும் நல்லதென்று தள்ளிவிடுவதும் உண்டு. இதைத்தான் வியாபார முறை என்கிறோம்."

ஆகவே, இலக்கியப் பிரியர்களும் கொஞ்சம் கண் விழிப்புடன்தான் இருக்க வேண்டியிருக்கிறது.

"பிரசாரம் என்பதற்கு அர்த்தம் கௌரவமான விளம்பரம்" என்கிறார் கட்டுரை ஆசிரியர். இது உண்மைதானா?

காந்தளூர்ச்சாலை

தி. நா. சுப்பிரமணியன்

தஞ்சையிலிருந்து ஆண்டு வந்த சோழ மன்னர்களில் சிலர், தாங்கள் 'காந்தளூர்ச்சாலை கல மறுத்தருளிய' செய்தியைப் பெருமையோடு மெய்க்கீர்த்திகளில் கூறிக்கொள்ளுகிறார்கள். இச் செய்தி முதல் முதலாக, கி. பி. 985-ஆம் ஆண்டில் சோழ சிங்காதனம் ஏறிய முதலாம் ராஜ ராஜ சோழன் ஆட்சியிலேதான் குறிக்கப் படுகிறது. அவன் மெய்க்கீர்த்தி பின் வருமாறு ஆரம்பிக்கின்றது.

ஸ்வஸ்தி ஸ்ரீ :
திருமகள் போலப்
பெருநிலச் செல்வியுந்
தனக்கே யுரிமை
பூண்டமை மனக் கொளக்
காந்தளூர்ச்சாலை
கலமறுத்தருளி
வேங்கை நாடுங்
கங்க பாடியும்......

எனினும் பெரும்பாலும் அவன் கல்வெட்டுக்கள், "காந்தளூர்ச்சாலை கலமறுத்த கோவிராஜ கேசரிவன்மர்" என்றே தொடங்குகின்றன.* இதனால் 'காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளியது' அவன் ஆட்சியின் நிகழ்ச்சிகளுள் மிகவும் முக்கியமானது என்று தெரிகிறது.

ஆனால், அது எதைத் தெரிவிக்கிறது என்பதைப்பற்றிச் சரித்திர ஆராய்ச்சியாளர்களுக் குள்ளே அபிப்பிராய ஒற்றுமை இல்லை; வெவ்வேறு விதமாக நினைக்கிறார்கள்.

ராஜராஜன் சாஸனங்களை வெளியிட்டபோது முதலில் டாக்டர் ஹுல்ஷ் என்பார், அவன் 'காந்தளூரில் மணி மண்டபம் ஒன்றை நிறுவினான்' என்று பொருள்கூறி, ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.† ஆனால் சிறிது காலத்திற்குள்ளாகவே அது தவறு என்பதை உணர்ந்து கொண்டார். மூலத்தில் உள்ள சொற்கள் இவ்விதமாகப்பொருள் கொள்வதற்குக் கொஞ்சமும் இடம் அளிக்க வில்லை. ஆகவே அவர் மறுபடியும், 'ராஜ ராஜன் காந்தளூரில் உள்ள சபையிலே கல (பாத்திர)த்தைத் துண்டித்தான்'‡ என்று பொருள் கொண்டார். அதுவும் தவறானது என்பதை அறிந்து கடைசியாக, 'ராஜராஜன் காந்தளூர்ச் சாலையிலே கப்பல்களை அழித்தான்' என்று பொருள் கொண்டு மொழி பெயர்த்தார்.¶ இதையே சரித்திர ஆசிரியர்களுள் பெரும்பாலோர் பின்பற்றி வருகிறார்கள்.

ஆனால், இத்தொடருக்கு வேறு விதமாகப் பொருள் கூறுவாரும் உண்டு. டாக்டர் ஹுல்ஷின் கடைசி மொழி பெயர்ப்பை ஒப்புக்கொள்ளாமல் வேறு பொருள் காண முயன்றவர்களுள் முதன்மையானவர் காலஞ்சென்ற து. அ. கோபிநாத ராயர் ஆவர். அவர் 'கலம்'

காந்தளூர்=ஊர்ப் பெயர். சாலை=குறிப்பிட்ட காரியத்துக்காக ஒதுக்கி வைத்துள்ள இடப் பரப்பு. கலம்=கருவி (இங்கே கப்பல்) அறுத்தல்=செப்பஞ் செய்தல் (இங்கே தயாராகி எதிரியை அடக்குதல்.) உலகத்தில், முதலில் (5,000 வருஷத்துக்கு முன்பே) கப்பல் செய்தவர் தமிழர்.—இவை நமது கருத்துக்கள். —ஆசிரியர், சக்தி.

*திருவாங்கூர் ஆர்கியலாஜிகல் ஸீரீஸ் முதல் வால்யூம், பக்கம் 238 †தென் இந்திய சாஸனங்கள், முதல் வால்யூம், பக்கம்-65 ‡ ஷை இரண்டாம் வால்யூம் பக்-35, 47, ¶ ஷை பக்-241 சாலை என்பதற்கு அவர் கடலிலே கப்பல் நிற்கும் இடம் (Roadstead) என்று பொருள் கொண்டார்.

என்ற சொல் (மரக்கலம்) கப்பலைக் குறிக்காது என்றும், உண்கலத்தையே குறிக்கும் என்றும் கொண்டார். அதேபோல, சாலை என்னும் சொல்லை அறச் சாலை, ஊட்டுச் சாலை, அறவூண் சாலை ஆகியவற்றையே குறிக்கும் என்றும் கொண்டார்.* இதனால் 'காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளிய' என்ற தொடருக்கு அவர், 'ராஜராஜன் (மலை நாட்டிலே பிரசித்திபெற்று விளங்கிய) ஊட்டுச் சாலைகளை (ஊட்டுப் புரைகளை) நிறுத்திவிட்டான்' என்று பொருள் கண்டார்.† பல தருமங்களைச்செய்து பெரும் புகழ் படைத்த மன்னன் ராஜராஜன் இவ்விதம் அறச்சாலையை நிறுத்தி இருப்பான் என்றோ அதைத் தன் புகழாகக் கொண்டிருப்பானென்றோ கருத முடியாது என்று கூறி அதை ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை.‡ அவர்கள் கவிஞரே யன்றிச் சிறந்த சரித்திர ஆராய்ச்சியாளருமாவர். காந்தளூரிலே ஒரு வித்யாஸ்தானம் இருந்ததென்றும், அதிலேஉண்பவர்களின் கலத்தை வரையறுத்து அதற்குவேண்டிய நிவந்தங்களை யளித்த செய்தியையே சாஸனத் தொடர் கூறுகிறது என்றும் கருதுகிறார் கவிமணி.

இந்தக் கூற்றிலும் சில குறைபாடுகள் உள்ளன.

காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளிய பெருமையை முதலாம் ராஜராஜன் மட்டும் கொள்ளவில்லை. அவன் மகனான முதலாம் ராஜேந்திரனும், அவன் மகன் ராஜாதிராஜனும், மற்றும் முதற் குலோத்துங்கன் முதலிய சோழ அரசர்களும் கொண்டுள்ளார்கள். பாண்டியர்களிலும் பராந்தக பாண்டியன்,

"கன்னிப் போர் செய்தருளிக்
காந்தளூர்ச்சாலை கலமறுத்து"

என்று தன் மெய்க் கீர்த்தியில் கூறிக்கொள்ளுகிறான்.¶

ராஜாதிராஜன் மெய்க் கீர்த்தியில் இது,

"சேரலன் வேலை கெழு
காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி"

என்று குறிக்கப்பட்டுள்ளது.

குலோத்துங்கன் இரு முறை சாலை கலமறுத்தான் என்பது

"மேவலர்தம்
"சேலைத் துரந்து
சிலையைத் தடிந்திருகால்
சாலைக் களமறுத்த
தண்டினன்"$

என்று வரும் விக்கிரம சோழனுலாக் கண்ணியால் விளங்கும், அன்றி,

"வேலைகொண்ட
விழிஞமழித்ததும்
சாலைகொண்டதும்
தண்டு கொண்டல்லவோ"§

என்ற கலிங்கத்துப் பரணிப் பகுதியும் இதனை வலியுறுத்தும்.

கவிமணியவர்கள் கூறுவது போல, வித்யாஸ்தானத்தில் உண்பவர்கள் கலத்தை நிர்ணயிப்பதாக இருந்தால், அதைப் பல் வேறு அரசர்கள் அவ்வப்போது நிர்ணயிக்க வேண்டிய அவசியமும், அதைச் செய்வதற்கு அந்த அரசர்கள் தங்கள் படை வலி

---

* திருவாங்கூர் ஆர்க்கியலாஜிகல் ஸிரீஸ் இரண்டாம் வால்யூம் பக்-2, 4,
† ஷை பக்கம் 5, ‡ 'காந்தளூர்ச்சாலை' என்று ஆங்கிலத்தில் வெளியிட்ட சிறு நூல்; கேரளா ஸொஸைட்டி பேபர்ஸ், இரண்டாம் ஸிரீஸ் பக்கம் 100–6
¶ திருவாங்கூர் ஆர்க்கியலாஜிகல் ஸிரீஸ் முதல் வால்யூம், நெ. 3 பக்கம் 4,
$ விக்கிரமசோழனுலா—கண்ணி 24. § கலிங்கத்துப்பரணி—தாழிசை 370.

மையை உபயோகிக்க வேண்டிய அவசியமும் விளங்க வில்லை.

வித்யாஸ்தானத்தவர்கள் தங்கள் தங்கள் ஆதிக்கத்தை ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே அந்த அரசர்கள் சாலை கொண்டார்கள் என்று அவர்கள் கூறுகிருர்கள். 'காந்தளூர்ச்சாலை' என்னும் அவர்களது சிறு நூலைப் பதிப்பித்த ஸ்ரீ டி. கே. ஜோஸப் தம் முன்னுரையில் 'சாலை கொண்டு' என்பதற்கும் 'சாலை கலமறுத்து' என்பதற்கும் உள்ள வேறுபாட்டைக் கவனிக்க வேண்டும் என்றும், சமீப காலத்திலே 1936-ம் ஆண்டிலே ஸ்பெயினில் மாட்ரிட் சர்வகலாசாலையை ஜெனரல் பிரான்ஸிஸ்கோ பிராங்கோ கைக்கொண்டதை நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்றும் எழுதுகிருர்.*

தற்காலத்து மேனட்டுச் சர்வகலாசாலைகளைப் பண்டைக்காலத்தில் நம் நாட்டில் இருந்த வித்யாஸ்தானங்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பதில் பயன் ஒன்றும் இல்லை. நம் நாட்டு வித்யாஸ்தானங்களிலே வேதாந்தம் முதலிய தத்துவ ஆராய்ச்சிகளே நிரம்பி நிற்கும். தர்ப்பைப் புல்தான் அங்கே இருப்பவர்களின் ஆயுதம். அப்படியிருக்க, படை வலிமை கொண்டு அவர்களை அடக்க முயன்றுர்கள், பண்டை அரசர்கள் என்று கூறுவதை நாம் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? தவிர, நம் நாட்டு வித்யா ஸ்தானத்தைச் சேர்ந்தவர்களைப் பணிய வைப்பதற்குப் படை எந்த விதத்திலும் உபயோகமாகாது. அரசன் ஆணைக்கு அவர்கள் அடங்கி நடப்பவர்கள். இல்லாவிட்டால், வேறு வித்துவான் யாராவது அவர்களைச் சொற்போரில் வெற்றி கொள்ள வேண்டும்.

இவற்றை யெல்லாம் கவனிக்கும்போது கவிமணியவர்களின் கூற்றும் ஏற்க முடியாததாகவே இருக்கிறது.

மேலே விஷயங்களை ஆராய்வதற்கு முன், காந்தளூர்ச்சாலை என்பது எங்கே இருக்கிறது என்பதை யறிய வேண்டும். அது இப்போது திருவனந்தபுரத்தில் வலிய சாலை என்று வழங்கும் பகுதியேயாகும் என்பதைக் காலஞ்சென்ற து. அ. கோபிநாதராயர் சந்தேகமற விளக்கிக் காட்டியுள்ளார்.† கவிமணி அவர்கள் காந்தளூர் என்பதே ஊர்ப்பெயர் என்றும், சாலை என்பது அவ்வூரிலே நிறுவப்பட்டுள்ள சாலையைக் குறிக்கும் என்றும் கூறுகிருர். எவ்வாருயினும், காந்தளூர்ச்சாலையும் சாலையும் வேறுபாடு இல்லாமல் ஒன்ருகவே சாஸனங்களிலும், இலக்கியத்திலும் குறிக்கப்படுகின்றன. அதனுல் காந்தளூர்ச்சாலை என்பது காந்தளூர்ப் பக்கத்தே உள்ள கடற்கரையை யடுத்துக் கப்பல் நிற்குமிடத்தைக் குறிக்கும் போலும்.

ராஜ ராஜன் காந்தளூர்ச்சாலையில் கப்பல்களை அழித்தான் என்பதை ஒப்புக்கொள்வதற்கு இயலாத காரணங்களுள், சேரர்களுக்குக் கடற் படை இருந்ததாகக் கூற முடியாது என்பதையும் காட்டுகிருர்கள்.

இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே தமிழ் நாடு மேலைத் தேசங்

* 'காந்தளூர்ச்சாலை', பக்கம், vi.

† திருவாங்கூர் ஆர்க்கியலாஜிகல் ஸிரீஸ். இரண்டாம் வால்யூம், பக்கம் 4.

ELA CIGARETTES
எலா
சிகரெட்டுகள்
ELA
10 Cigarettes
10 CIGARET
இந்தியாவிற்கு
சொந்தமானது
உங்களுக்கும் சொந்தமே
GREENS' ADVTG.
GOLDEN TOBACCO CO.
(GT 102.)

PANDYAN INSURANCE COMPANY LIMITED

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ்: **மதுரை**

சிறந்த சேவை செய்து வருகிறது

நெருப்பு, மோட்டார் விபத்து

முதலிய

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்

மொத்த ஆஸ்திகள் ரூ. 62,00,000

கிளைகள் : பம்பாய், அகமதாபாத், கல்கத்தா, ராவல்பிண்டி.

பிரதம ஏஜெண்டுகள் :

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

மதுரை Etc.

களுடன் வாணிகம் செய்து வந்திருக்கிறது. நம் நாட்டு மேலைக் கடற்கரையிலே பல துறைமுகங்கள் இருந்தனவென்றும் 'பெரிபிளூஸ்' முதலிய யவன நூற்கள் குறித்துச் சொல்கின்றன. அவ்வித மிருக்க, சேர மன்னர்கள் கப்பல்களைக் கொண்டிருக்கவில்லை என்று நாம் எப்படிக் கூறமுடியும்?

தவிர, இரண்டாம் குலோத்துங்க சோழன் மீது கவிச் சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் பாடிய பிள்ளைத் தமிழில்,

> "தண்டில் விழி ஞத்தெயில்
> தகர்த்துடைய முத்துச்
> சலாபமுழுதும் பொறையல்
> சாலையொடு கொண்டாய்"*

என்று காணப்படுகிறது. அதனால் காந்தளூர்ச் சாலையிலே முத்துக் குளித்து வந்த செய்தி பெறப்படும்.

விழிஞத்துக் கோட்டையைத் தகர்த்ததும், சேரன் சாலையோடு முத்துச் சலாபத்தைக் கொண்டதும் இச்செய்யுட் பகுதி குறிக்கிறது. முத்துச் சலாபத்தை விழிஞத்தோடு கொண்டு பொருள் கூறவும் இடமிருப்பதாகச் சிலர் கருதலாம். எனினும், இயற்கையாகவும் கலிங்கத்துப் பரணித் தாழிசையைக் கவனிக்குமிடத்தும், முத்துச் சலாபத்தைச் சாலையுடன் சேர்த்தே பொருள் கொள்ள வேண்டும்.

பாண்டி நாட்டுக் கடற்கரைக்குப் பக்கத்தில் குளித்து எடுக்கும் முத்துக்களே பிரசித்தி பெற்றவை. இலக்கியங்களிலும் அவைகளைப் பற்றிய குறிப்புகளே உள்ளன. மேலைக் கடற்கரையில் முத்துக் கிடைப்பதைப் பற்றிய செய்திகள் அதிகமாக நமக்குக் கிடைக்கவில்லை. எனினும் மலையாளக் கரையில் முத்துக் குளித்து வந்திருக்கிறார்கள் என்பதை நாம் நிச்சயமாகக் கூறலாம்.

பாரசீகம், பாண்டிய நாடு ஆகிய இடங்களில் கிடைக்கும் முத்துக்களே உயர்ந்தவை யானாலும் பாரசீக வளைகுடாவிலிருந்து இந்தியக் கடற்கரையோரமாக அங்கங்கே நெடுக முத்துக் குளித்து வந்தார்கள் என்று முன்னாளில் நம் நாட்டுக்கு வந்து போன யாத்திரிகர்கள் குறித்து வைத்துச் சென்றிருக்கிறார்கள். கி. பி. 1672 முதல் 1681-வரையில் இந்தப் பிரதேசங்களில் யாத்திரை செய்து வந்த ஜான் ஃபிரையர் என்பவர் அந்தக் காலத்தே மலையாளக் கரையில் முத்துக்குளித்து வந்தார்கள் என்பதைக் குறித்து வைத்திருக்கிறார்.†

மலையாளக் கரையில் முத்துச் சிப்பிகள் வளரா வென்று ஒரு காரணம் காட்ட முயலலாம். கடல் நீர் சலன மில்லாத இடத்திலேதான் முத்துச் சிப்பிகள் வளரும். சலனம் மிகுதியாகப் பெற்று உள்ளோட்டத்தின் வேகம் அதிகமாக இருக்குமிடங்களில் சிப்பிகள் சரியாக வளரா. மேலைக் கடற்கரையில் அவ்விதம் உள்ளோட்டத்தின் வேகம் அதிகம். ஆகவே அவ்விடம் முத்துச் சலாபம் இருக்க முடியாது என்று சொல்லலாம். இது தவிர்க்க முடியாத தடையல்லவென்றும், செயற்கை முறையாலே உள்ளோட்டத்தின் வேகத்தைக் குறைத்து முத்துச் சிப்பிகளை மேலைக் கடற்கரையில்

---

* குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ் — செய்யுள் 91. † ஜான் ஃபிரையர் எழுதிய 'கிழக்கு இந்தியாவும் பாரசீகமும்' (ஹாக்லியூட் ஸொஸைடி வெளியீடு) இரண்டாம் வால்யூம் பக்கம், 305.

வளர்ப்பது சாத்தியமானது என்றே அந்தத் துறையில் வல்ல ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். காந்தளூரில் முத்துக் குளித்து வந்தார்கள் என்பதைப் பற்றிய குறிப்புகள் திருவனந்தபுரம் ஆலயத்துக் கணக்குகளிலும் ஓலைகளிலும் காணப்படுகின்றன வென்றும் கேள்வி.

முத்துக் குளிப்பதற்குத் தோணிகளும் படகுகளும் அவசியமானவை. அந்தத் தோணிகளையும் படகுகளையும் கொஞ்சம் பெரிதாக்கிச் சீர்திருத்திவிட்டால், அவை நடுக்கடலுள் செல்லக்கூடிய மரக்கலங்கள் ஆகிவிடுதல் சுலபம். இங்ஙனம் சேர மன்னர்கள் கப்பல்களைக் கொண்ட ஒரு படையை வைத்திருக்கவில்லை யென்று நாம் சொல்ல முடியாது. தவிர, மேலைக் கடற்கரையிலே கடற்கொள்ளைக்காரர்கள் ஏராளமாக இருந்தார்கள் என்றும், அதனால் அந்தப் பிரதேசத்தில் கப்பற் பிரயாணத்தை ஜாக்கிரதையாகச் செய்யவேண்டுமென்றும் மேலை நாட்டு யாத்திரிகர்கள் பண்டைக் காலமுதலே குறித்துவைத்திருக்கிறார்கள். பழைய தமிழ் நூல்களிலும் கடற் கடம்பு என்று இவர்களைப் பற்றிக் காணப்பட்டுள்ளது.

இவற்றையெல்லாம் கவனிக்கும்போது மலைநாட்டு மன்னர்கள் காந்தளூரில் முத்துக் குளித்து வந்தார்கள் என்பதும், அதற்காக அவர்கள் அவ்விடத்தில் கடலில் செல்லக்கூடிய மரக் கலங்களை வைத்திருந்தார்கள் என்பதும் நிச்சயமாக விளங்குகின்றன. பல சமயங்களில் அந்த மரக் கலங்களின் தொகையையும் அளவையும் பெருக்கி மலைநாட்டு மன்னர்கள் அந்தக் கலங்களை ஒரு கடற்படையாக மாற்றி வந்திருக்கக்கூடும். அதை அடக்கி அந்தக் கலங்களைப் பழைய நிலையில் வைப்பதற்காகவே சோழ மன்னர்கள் அவ்வப்போது தண்டு எடுத்துச் சென்றார்கள் போலும்.*

---

*தஞ்சை ஜில்லாவில் செந்தலை என்னுமிடத்தில் கிடைக்கும் கல்வெட்டுகள் முத்தரையர் என்னும் குறுநில மன்னர்களைப் பற்றிய செய்திகளைக் கூறுகின்றன. அவற்றுள் ஒன்றிலே, கி. பி. எட்டாம் நூற்றாண்டின் மத்தியில், பல்லவ அரசனான நந்திவர்மன் பல்லவ மல்லனுக்குச் சமகாலத்தவனாகத் தஞ்சையிலிருந்து ஆண்டு வந்த சுவரன் மாறன் என்னும் முத்தரைய மன்னனைப் பற்றிய பின்வரும் செய்யுள் காணப்படுகிறது.

செருவ [ல ரெ]ன்பதனாற் சிந்தியாற் போலும்
மருவலராய் வான் மாறன் சிறக்—கருவிளை
கண்டோற்ற வண்டளவங் கார்தோற்றுங் காந்தளூர்
மண்டோற்ற வேந்தர் மறம்.

இதனால் அந்தக் காலத்திலேயே காந்தளூர் முக்கியமான நகரமாக இருந்த செய்தியும் விளங்கும்.

குறை கூறுதல்

ஒரு ஸ்தாபனத்தைச் சீர்திருத்தி அமைப்பதுதான் நமது கண்டனத்தின் முக்கிய நோக்கமாக இருந்தால், நமது கண்டனம் நேர்மையுடையதாகவே இருக்க வேண்டும்; எளிதில் பொய்ப்பிக்கப்படும் புனைந்துரைகள் அடங்கியதாக இருத்தல் கூடாது.

—ஸ்வதந்த்ரா

நமனை அஞ்சேல்!

●

விஞ்ஞானி

விஞ்ஞானம், ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களையும் புரிய வல்லது. ஆயினும், உலகம் விஞ்ஞானத்தின் அழித்தல் தன்மையையே வளர்த்து வருகிறது என்பதற்கு உலகத்தில் நடக்கும் யுத்தங்களே தக்க சான்றுகளாகும்.

நாம் புராண இதிகாசங்களில் மாண்டவர் திரும்பவும் உயிர் பெற்றெழுந்தனர் என்று படிக்கிறோம். ஆனால், அதை நம்புவதில்லை; கவிஞனின் புனைந்துரை என்று எள்ளி நகையாடுகிறோம். இன்று உலகில் இறந்தவர் பிழைக்க வழியுண்டு என்று நம் விஞ்ஞானிகள் சொன்னால், அதை நம்பாமல் விட்டுவிட முடியாது. உலகத்தையே அழிக்க வல்ல அணுக் குண்டு போன்றவற்றை உற்பத்தி செய்யும் விஞ்ஞானத்திற்கு மனிதர்களை மரணத்திலிருந்தும் காத்தருளும் சக்தி உண்டென்றே கொள்ள வேண்டும்.

இன்று ரஷ்யாவில் மாண்டவர் மீண்டும் உயிர் பெற்று வாழ்கிறார். இது விஞ்ஞானத்தின் நற்பயன்.

''நான் உயிர் நீத்த அந்த நாளை என்றும் மறக்க முடியாது'' என்று சொன்னார் லூதனன்ட் டென்டெய்ன் செரிப்னவ். கேட்பதற்கு ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? உண்மைதான்; அவன் செத்துப் பிழைத்தான். இது உண்மையில் நடந்த சம்பவம் என்பது ரஷ்ய மக்கள் அனைவருக்கும் தெரியும்.

1944-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 3-ம் தேதி செம்படையின் வானொலி நிலையம் வெட்பிஸ்க் என்கிற ஊரருகில் நிறுவப்பெற்றிருந்தது. ஜெர்மானியத் துப்பாக்கிப் படையினர் நிலையத்தை நோக்கிச் சுட்டுக்கொண்டேயிருந்தனர். பீரங்கியின் வெடிச் சத்தம் மிக அருகாமையில் கேட்டது. செரிப்னவ் மெல்ல வெளியே வந்தான். 150 கெஜங்களுக்கப்பால் ஒரு குண்டு விழுந்து வெடித்தது. ஒரே புகைப் படலம், ஒருவர் முகம் மற்றவருக்குத் தெரியாதபடி சூழ்ந்துகொண்டிருந்தது. செரிப்னவ் தைரியமாக வெளிவந்து, வெட்ட வெளியில் படுத்துக் கொண்டான். மீண்டும் ஒரு வெடிச் சத்தம் கேட்டது. அந்த அதிர்ச்சியில் அவன் உடல் நடுங்கியது; பயத்தில் அவனுடைய இருதயமே நின்றுவிடும் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. அடுத்த கணம் அவன் தன் உணர்வை இழந்தான். அவனையே குறி வைத்துச் சுட்டதுபோல அவன் பக்கத்தில் ஒரு குண்டு வெடித்தது அவனுக்குத் தெரியாது. சில விநாடிகளுக்குப் பிறகு தன் உணர்வு வரப்பெற்றான். எழுந்திருந்து ஓட வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது. எழுந்திருக்க முயற்சியும் செய்தான்; ஆனால் முயற்சி பயனற்றதாக முடிந்தது. 'காயப்படுத்தப்பட்டோம்' என்ற பயங்கர உணர்ச்சி அவனை அலமாரச்

செத்தவனை உயிர்ப்பிக்கும் விஞ்ஞான அதிசயம் இன்று ரஷ்யாவிலே நடக்கிறது. இதில் தம்முடைய சொந்த அனுபவத்தையே கூறியிருக்கிறார், செரிப்னவ் என்ற ராணுவ வீரர். அந்தக் கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டது இது.

செய்தது. அது உண்மைதானு என்று அறிய அவன் தன் கையினல் உடல் முழுவதும் தடவிப் பார்த்தான். 'கொழ, கொழ' என்ற எதையோ அவன் கை ஸ்பரிசித்தது. "காயப்படுத்தப் பட்டோமே" என்ற ஐயம் அவனுக்கு ஊர்ஜிதமாயிற்று. மீண்டும் உணர் விழுந்து கிடந்தான். உடனே ஒரு 'சார்ஜென்ட்' ஓடி வந்து அவனைப் பக்கத்துக் கூடாரத்துக்குத் தூக்கிச் சென்ருன். அங்கு முதல் சிகிச்சை கொடுக்கப்பட்டது.

பிறகு, யுத்தத்தில் அழிக்கப் பட்டு உருமாறியிருந்த 'கேஸிக்கினே' என்ற சிறு கிராமத்திலிருந்த ராணுவ ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டான்.

குண்டு வெடித்து அதிலிருந்து வெளிப்பட்ட சல்லிகளால், செரிப்னுவினுடைய வலது இடுப்பில் பலத்த காயம் ஏற்பட் டிருந்தது. அதற்காக ராணுவ டாக்டர்கள் சிகிச்சை செய்ய முற்பட்டனர். ஆனல், அந்தச் சிகிச்சையின்போதே அவன் உயிர் நீத்தான். நாடி ஒடுங்கி விட்டது ; ரத்த ஓட்டம் தடைப் பட்டது : இருதயம் நின்று விட்டது. இன்னும் என்ன சந்தேகம்? மருத்துவ நூல்படி செரிப்னுவ் இறந்துவிட்டான்.

செரிப்னுவுக்கு ஆயுள் கெட்டி. அவனுடைய நல்ல காலம், அந்தக் குக்கிராமத்திலேயே புரொஃபசர் வ்ளாடிமிர் எ. நிகோவ்ஸ்கி மாண்டவரை உயிர்ப்பிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட் டிருந்தார். வீணே காலம் கடத்தாமல், செரிப்னுவ் இறந்த மூன்றரை வினடிகளுக்குள், நிகோவ்ஸ்கியினுடைய ஆராய்ச்சிக் கூடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டார். உடனே, உயிர்ப்பிக்க வேண்டிய ஏற்பாடு எவ்விதத் தடையுமின்றித் தொடங்கியது. "ஆட்ரினலின்", "க்ளூகோஸ்" போன்ற மருந்துகளின் உதவியால் உடலிலுள்ள ரத்தக் குழாய்கள் அனைத்தின் மூலமும் குருதி பாயுமாறு செய்யப்பட்டது. செயற்கைச் சாதனங்களின் மூலம் மூச்சு விடுவதற்கும் வழி கோரப்பட்டது. என்ன ஆச்சரியம்! செரிப்னுவின் பிரேதம் லேசாக மூச்சுவிடத் தொடங்கியது. முதலில் மூச்சு விடுவது வெகு மெதுவாகத் தான் நடைபெற்றது. சில மணி நேரத்துக்குப் பிறகு செரிப்னுவ் உணர்வு பெற்ருன். மாண்டவன் மறு பிழைப்புப் பிழைத்தான்! சஞ்சீவிப் பருவதத்தைக் கொண்டுவந்து, இறந்துபோன ராமனுடைய படைகளை மீண்டும் உயிர்ப்பித்தனர் என்று படித்த பொழுது நாம் நம்பவில்லை அல்லவா? இப்பொழுது, 'ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ' என்ற வாசகம் பொய்ப்பிக்கப் பட் டிருக்கிறது.

எவ்வளவு நேரம் அவன் தூங்கிக் கொண் டிருந்தான் என்று அவனுக்குத் தெரியாது. அன்று இரவு என்ன நடந்தது என் பதையும் அவன் அறியான். அவனைக் கவனித்துக்கொண் டிருந்த தாதி அவனருகில் உட்கார்ந்துகொண்டு, "உடம்பு எப்படி இருக்கிறது?" என்று கேட்டபொழுதுதான், அவனுக்குக் காயம் பட்டது, அதற்குச் சிகிச்சை செய்ய அவனை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் சென்றது முதலியன ஞாபகத்துக்குவந்தன. ஆயினும், அவனுக்கு, "எங்கு இருக்கிருேம்" என்பது மட்டும் தெரியவில்லை. கண்களை நன்ருகத்

துடைத்துக்கொண்டு அகல விழித்துப் பார்த்தான். அவன் கண்கள் பார்வையை இழந்தன என்பதை உணர அவன் உள்ளம் மறுத்தது. "ஆ! நான் குருடனா?" என்று உரத்த குரலில் கத்தினான்.

அவன் குருடன் என்ற எண்ணம் அவனை வாட்டியது. பல டாக்டர்கள் அவன் கண்கள் மீண்டும் ஒளி பெறும் என்று பல முறை சொல்லித் தைரியம் கொடுத்ததால் அவன் மனம் ஒருவாறு சரிப்பட்டது. அவன் உடல் இரத்தமின்றி இருந்ததால், அவன் உடலுக்குள் செயற்கை முறையில் ரத்தம் பாய்ச்சப் பெற்றது.

மறுநாள், அதாவது மார்ச்சு 3-ம் தேதி மீண்டும் அவனுக்குப் பார்வை வந்துவிட்டது.

இந்தத் தற்காலிகமான குருட்டிற்குக் காரணம் என்னவென்றால், உடலைப் பொறுத்தமட்டில், அதாவது, மூச்சு விடுதல், நாடி, இருதயம் முதலியன நின்று விடுவதால் ஏற்படும் சாவின் போது, மூளை வேலை செய்வதற்கு வேண்டிய இரத்தம் இல்லாததுதான் காரணம். ஆனால், அப்படி இரத்தம் இல்லாததுதான் அந்த மாதிரியான மாறுதல்களுக்குக் காரணம் என்றால், மீண்டும் உயிர் வந்த பிறகு மூளை முன் போலவே வேலை செய்யவேண்டுமே?

இந்தத் தற்காலிகக் குருடு வருவதற்குக் காரணம் என்ன என்ற கேள்வி எழலாம். இரத்தமில்லாமல் சோர்வுற்ற தசைநார்கள், உயிர்ப்பிக்கப்பட்டவுடன், முன்போலச் சாதாரண நிலைக்கு வரச் சில நாட்கள் பிடிக்கின்றன என்பது இயற்கைதானே? பல நாட்கள் பட்டினி கிடந்தவனுக்குத் திடீரென்று சாப்பாட்டைக் கொடுத்து எழுந்து ஓடச் சொன்னால்? அவனால் ஓட முடியாதல்லவா?

அவன் சாவினின்று மீண்ட பிறகு, பல நாட்கள் அவனுக்குப் பசி முதலியன ஏற்படவில்லை. மிகுந்த பலஹீனமாக இருந்தான். அவனை உயிர்ப்பித்த டாக்டர்களும் மற்றும் அந்த ஆஸ்பத்திரியிலிருந்தவர்களும் அவனைச் சிறு குழந்தையைப் பாதுகாப்பது போல மிகுந்த கவனத்துடன் அவனுக்குச் சிகிச்சை செய்தார்கள்.

அவன் செத்துப் பிழைத்தான் என்பதை அவனால் நம்பவே முடியவில்லை. இந்த எண்ணம் அவனை ஆழ்ந்த யோசனையில் ஆழ்த்தியது. தன்னிடம் இந்த மறு பிறப்பின் விளைவாக ஏதாவது மாறுதல்கள் ஏற்பட்டுள்ளனவா என்று சர்ச்சை செய்யத் தொடங்கிவிட்டான். தான் சில நிமிஷங்கள் பிணமாகக் கிடந்த காரணத்தால் தன்னுடைய மூளை முன்போல் வேலை செய்யவில்லை என்று கண்டான். ஒரு பக்கத்தில் கடைசி வரியைப் படிக்கும் பொழுது முதல் வரியில் என்ன படித்தான் என்பதை மறந்துவிடுவான். இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய அவன் மாஸ்கோவிலுள்ள ஒரு பெரிய ஆஸ்பத்திரிக்குப் போனான். அங்கு, மூளை சம்பந்தமான வியாதிகளை நிவர்த்தி செய்வதில் நிபுணரான கிராஷ் சென்காவ் என்ற டாக்டரின் மேற்பார்வையில் இருந்தான். அவருடைய சிகிச்சையினால் மீண்டும் தனது ஞாபக சக்தியைப் பெற்றான்.

செரிப்னவ் உயிர் பிழைத்தது போல, மற்ற எல்லோரையும் இறப்பினின்று காப்பாற்றுவது மருத்துவ சாஸ்திரத்தின்

சக்திக்குமீறியதல்ல. ''விஞ்ஞான முறைப்படி சுலபமான காரியம் தான். ஆனால், எல்லாச் சமயங்களிலும், எல்லாருக்கும் அதை வெற்றிகரமாகக் கையாளலாம் என்று சொல்வதற்கில்லை'' என்று சொல்கிறார் புரொஃபசர் நிகோவ்ஸ்கி. மனிதனுக்கு மூச்சு நின்ற அடுத்த ஆறு வினாடிகளுக்குள் மனிதன் உண்மையில் இறந்துவிடுவதில்லை; அவனுடைய இறப்புக்கு 'உடற்சாவு' (க்ளினிக்கல் டெத்) என்றுதான் சொல்லவேண்டும். இந்த ஆறு விநாடிகளுக்குள் அவனை மீண்டும் உயிர்ப்பித்தல் எளிது. இந்த ஆறு விநாடிகள் கழித்தும்கூட அவனுடைய இருதயத்தை மீண்டும் வேலை செய்ய வைக்கலாம். ஆனால், அவனுடைய மூளைக்கு மட்டும் ஆறு விநாடிகளுக்கு மேல் இரத்த ஓட்டமில்லாவிட்டால் மீண்டும் பழைய நிலையை அடைவது கடினம். மாண்டவர் மீள்வது நிச்சயம் என்று எண்ணிவிட முடியாது. கடுமையான சுரத்தினாலோ, பலத்த பெரிய காயத்தினாலோ, மண்டை, இருதயம் போன்ற இடங்களில் ஏற்படும் பலத்த அடியினாலோ, அல்லது வயது முதிர்ச்சியினாலோ மரணம் நேர்ந்தால் அவனைப் பிழைக்க வைப்பது இயலாது.

பத்தில், ஒன்பது பேர்களை இறந்த ஆறு விநாடிகளுக்குள் பிழைக்க வைக்க முடியும். ஆனால், அதில் ஐவரே மீண்டும் சாதாரண வாழ்வைப் பெறுகிறார்கள்; மற்ற நால்வர் உயிர் பிழைத்தாலும் சில நாட்களுக்குப் பிறகு இறந்துவிடுகிறார்கள். முன்போலவே ஒருவிதக் குறைபாடுமின்றி முழு வாழ்வை அடைகிறவர், பத்துப்பேரில் ஒருவர் தான். 'ஆபரேஷன்' செய்யும் சமயத்தில்தான் வியாதியஸ்தன் இறந்துவிடுகிறான். ஆகவே, மீண்டும் அவனை உயிர்ப்பிக்கும் முறையைக் கையாளலாம். ''இறந்தவர் பிழைக்கமாட்டார்கள் என்ற முடிவான ஒன்றை இன்று பொய் என்று நிரூபித்த விஞ்ஞானம், சில காலத்துக்குள் உடற்சாவு நிகழ்ந்த ஆறு விநாடிகள் கழிந்த பிறகும் இறந்தவரை உயிர்ப்பிக்கலாம் என்பதை உலகுக்குக் காட்டும்'' என்று புரொஃபசர் நிகோவ்ஸ்கி அபிப்பிராயப்படுகிறார்.

விஞ்ஞானிகள் வாழ்க! விஞ்ஞான முயற்சிகள் வெல்க!

✲

இதுதான் வித்தியாசம்

பர்ன்ஸும் மாலட்டோவும் ஜனநாயகத்தைப் பற்றிச் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். பர்ன்ஸ், ''ரஷ்யாவில் நீங்கள் ஜனநாயகம் என்பது என்ன என்பதையே மறந்துவிட்டீர்கள். எங்கள் நாட்டில் நிலவும் சுதந்தரத்திற்கு அளவே கிடையாது. இப்பொழுது நான் நேரே ஜனதிபதியின் பங்களாவிற்குச் சென்று, ட்ரூமனின் எதிரிலேயே 'ஏய்! நீ ஒரு முட்டாள்!' என்று சொல்வேன். என்னை யாரும் ஒன்றும் செய்ய மாட்டார்கள்'' என்று கூறினர்.

''உங்கள் நாட்டில் மட்டும்தானா? எங்கள் நாட்டிலும் இந்தச் சுதந்தரம் உண்டு. நானும் இப்பொழுது நேரே க்ரெம்லினுக்குச் சென்று, ஸ்டாலின் முன்னிலையில் 'ட்ரூமன் ஒரு முட்டாள்' என்று தைரியமாகச் சொல்வேன். அதனால் எனக்கு ஒன்றும் ஏற்படாது'' என்று சுடச் சுடப் பதிலளித்தார் மாலட்டோவ்.

—டெய்லி மெயில்

விடுதலைக்கு வழி

●

ஆர். ராமநாதன்

தேசத்தின் விடுதலைக்காகப் புரட்சிக் கொடியை உயர்த்தப் பர்மிய மக்கள் துடித்துக்கொண்டிருக்கும் பொழுது, பர்மாவின் "தலைவிதி"யை நிர்ணயிப்பதற்காக லண்டனில் "சமரச நாடகம்" நடக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளும், பர்மியத் தலைவர்களும் பர்மாவின் எதிர் காலத்தைப் பற்றி லண்டனில் விவாதித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த விவாதத்தின் முடிவு எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதைச் சொல்லுவது அவ்வளவு கடினமல்ல. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தன்மையை அறிந்தவர்கள் இந்தக் கேள்விக்கு எளிதில் பதில் சொல்லிவிட முடியும். பர்மிய மக்களைப் பிரிக்கவும், முடிவான அதிகாரத்தைத் தங்களிடமே வைத்துக்கொள்ளவும், "பொம்மை அரசியல் நிர்ணய சபை"யைப் பர்மிய மக்கள் மீது திணிக்கவும், பர்மிய நிலச் சுவான்தார்களின் உதவியுடன் அடிமைச் சாஸனத்தைப் பலாத்காரமாகப் புகுத்தவும் ஏகாதிபத்திய வாதிகள் முயலுவார்கள். உண்மையில், லண்டன் பேச்சு பர்மியச் சுதந்தர இயக்கத்தை முன்னுக்குத் தள்ளாது; ஆனல் பின்னுக்கு இழுக்கும். ஆங்ஸான் ஏகாதிபத்தியவாதிகள் விரித்த வலையில் விழுவாரா, மாட்டாரா என்பது இன்னும் சில தினங்களில் தெரிந்துவிடும்.

அதிகாரத்தை விட்டுக் கொடுக்க விரும்பாத ஏகாதிபத்திய வாதிகள் பர்மியத் தலைவர்களை என் லண்டனுக்கு அழைத்தார்கள்? பர்மாவுக்குச் சுதந்தரம் வழங்குவதாக அவர்கள் என் பறை அறைந்தார்கள்? கவர்னரின் நிர்வாக சபையில் பாஸிஸ எதிர்ப்பு மக்கள் சுதந்தர லீக்குக்கு என் இடம் அளித்தார்கள்?

ஜப்பானியப் பாசிஸ்டுகள் சரணகதி அடைந்த பிறகு, சுதந்தர இயக்கம் வளர்ச்சியின் சிகரத்தை அடைந்தது. "பர்மாவை விட்டு வெளியேறுங்கள்" என்னும் சுலோகம் பர்மா எங்கும் ஒலித்தது. பர்மிய மக்கள் புரட்சிப் பாதையில் நடந்தனர். நிலைமை நெருக்கடியாயிற்று. பர்மா புரட்சியை நோக்கித் தலை தெறிக்கும் வேகத்தில் தாவுகிறது என்பதை ஏகாதிபத்திய வாதிகள் தெளிவாக உணர்ந்தனர். அத்துடன் தேசத்தின் பொருளாதார நிலை மிகக் கேவலமாக இருந்தது. நெருக்கடி அதிகரித்தது. இந்தச் சுமையைப் பிறர்மீது சுமத்த ஏகாதிபத்திய வாதிகள் முயன்றனர். எனவே, அவர்கள் பதவி ஏற்கும்படி பாஸிஸ எதிர்ப்பு லீக் தலைவர்களைக் கேட்டுக்கொண்டனர். ஆனல், முடிவான அதிகாரம் கவர்னரிடம் இருந்தது. இதை டில்லி பிரசங்கத்தில் ஆங்ஸான் ஒப்புக்கொண்டார்.

கவர்னரின் நிர்வாக சபையால் ஜனங்களின் குறைகளைத் தீர்க்க முடியவில்லை. அதே சமயத்தில் ஏகாதிபத்திய வாதிகள் ஆங்ஸானையும், மற்றவர்களையும் கொண்ட நிர்வாக சபையின்

பர்மாவையும் விட்டு வெளியேற வேண்டிய கதி ஸ்ரீமான் ஜான்புல்லுக்கு ஏற்பட்டிருக்கிறது. நிலைமையைச் சமாளிக்க அவர் ஆட்டம் போட்டுப் பார்க்கிறார். அது பலிக்குமா?

நிழலில் ஒண்டிக்கொண்டு, சுதந்தர இயக்கத்தை நசுக்க முயன்றனர். இதைத் தெளிவாக உணர்ந்த பாசிஸ எதிர்ப்பு மக்கள் சுதந்தர லீக், இந்த வருட முடிவுக்குள் பர்மாவுக்குப் பரிபூரண சுதந்தரம் வழங்கப்படும் என்று பிரிட்டிஷ் சர்க்கார் அறிவிக்க வேண்டும் என்று கோரிற்று. கவர்னரின் நிர்வாக சபையை இடைக்கால சர்க்காராக மாற்ற வேண்டும் என்றும் அந்த ஸ்தாபனம் கோரிற்று. பொருளாதாரப் பிரச்னைகளைப் பாசிஸ எதிர்ப்பு லீக்கின் சம்மதத்துடன்தான் முடிவு செய்ய வேண்டும் என்றும் அது கோரிற்று.

இந்தக் கோரிக்கைகளின் அடிப்படையில் கிளர்ச்சி வலுத்தது. மீண்டும் நெருக்கடி அதிகரித்தது. எனவே, மேற்கண்ட கோரிக்கைகளைப் பற்றி விவாதிப்பதற்காக லண்டனுக்கு வரும்படி ஏகாதிபத்திய வாதிகள் பர்மியத் தலைவர்களை அழைத்தார்கள். பர்மியத் தலைவர்கள் இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டார்கள்.

பர்மியத் தூது கோஷ்டியில் பாசிஸ எதிர்ப்பு லீக்கைச் சேர்ந்த இருவர்தான்—ஆங்ஸான், தக்கின் மியா—ஜனங்களின் உண்மையான தலைவர்கள்; ஊபாபே, ஊ தின், ஊஸா, பாஸீன் ஆகிய நால்வரும் முதல் தரமான சந்தர்ப்ப வாதிகள். ஆங்ஸானைப் பின்னுக்கு இழுக்கவும் பிரிட்டிஷ் திட்டத்தை அங்கீகரிக்கும்படி அவரை நிர்ப்பந்தப்படுத்தவும்தான், நான்கு சந்தர்ப்ப வாதிகளைக் கொண்ட இந்தத் தூது கோஷ்டியை ஏகாதிபத்தியம் தேர்ந்தெடுத்தது. எனவே, சமீபத்தில் லண்டனுக்குச் சென்று திரும்பின இந்தியத் தூது கோஷ்டியின் கதிதான் பர்மியத் தூது கோஷ்டிக்கும் நேரும் என்பது நமது கருத்து.

லண்டன் விஜயம் பர்மாவின் விடுதலைக்கு வழி கோலாது. விடுதலைக்கு வழி லண்டனும் அல்ல. பொதுஜனப் புரட்சிதான் விடுதலைக்கு வழி. சந்தர்ப்ப வாதிகளுக்கு நிரந்தர விடை கொடுத்துவிட்டு, இடது சாரிகளின் சுதந்தர முன்னணியை ஆங்ஸானும், அவரைச் சேர்ந்தவர்களும் சிருஷ்டி செய்ய வேண்டும்; ஏகாதிபத்திய எதிர்ப்புப் போருக்கு ஆங்ஸான் தலைமை தாங்க வேண்டும். பர்மாவுக்கு முன் இருக்கும் வழி இது ஒன்றுதான். இந்த வழியை ஆங்ஸான் மேற்கொள்ளுவாரா?

*

கட்டுரையாளர் கவனிக்க!

கேட்கப்படாமல் வரும் கதை, கட்டுரைகளைத் திருப்பி அனுப்புவதாக உத்தரவாதம் கூற முடியாதென்று முன்பே சொல்லியிருக்கிறோம். தபால் தலையுடன் வரும் கதை, கட்டுரைகளைத் திருப்பி அனுப்ப முயலுவோம். மற்றவர்கள் இவை பற்றிக் கடிதம் எழுதுவது இருதரப்பினருக்கும் தொல்லை தரும் விஷயம். அன்பர்கள் கவனிக்க வேண்டுகிறோம்.

—ஆசிரியர், சக்தி

ஒரு நாள்

சோம்பலும் சோர்வும் கொண்டு ஒரு நூறு வருஷம் உயிர் வாழ்வதைவிட, ஒரு நாளேனும் பெரு முயற்சியோடு வாழ்ந்திருத்தல் மேலானது.

—புத்தர் பிரான்

★ டிமிர் பாரன் பட்டாச்சார்யா 1910-ம் வருஷம் கல்கத்தாவில் பிறந்தவர். அவர் தனது 18-வது வயதில் 'சாரட்' என்ற வாத்தியம் கற்றார். அதுதான் அவருக்கு முதல் கீர்த்தியை அளித்தது. அவர் உஸ்தாத் அமீர்கான், உஸ்தாத் அல்லாவுதீன்கான் இவர்களின் சிஷ்யர் 1930-ம் வருஷம் உதய ஷங்கர் கோஷ்டியில் சேர்ந்து அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பா முதலிய நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்தார். அந்நாடுகளிலெல்லாம் அவரின் திறமை நன்கு தெரிந்துகொள்ளப்பட்டது. அவரின் இந்திய சங்கீதத்தை வாத்தியங்களில் நன்கு அமைத்து வாசிப்பதின் திறமை அவருக்கு அளவில்லா கீர்த்தியையும் நற்பெயரையும் பெற்றிருக்கிறது.

டிமிர் பாரன் ஸ்வரப் பாடகர்

கியாதி பெற்ற பாடகரும் இந்திய சங்கீதத்துக்கு புது ஸ்வரங்கள் ஏற்படுத்தி இந்திய வாத்தியங்களின் வாசிப்பையே புதுப்பித்தவருமான டிமிர் பாரன் சொல்லுவதாவது:

"சங்கீத சிருஷ்டிக்கு டீயின் உதவியை நான் மிகவும் மதிக்கிறேன். எனது பிரதமையில் அது அடிக்கடி ஒரு ஸ்வரத்தையும்-லயத்தையும் தூண்டுகிறது. அதை வாத்தியத்தில் வாசிக்க அது ஒரு உன்னத வாத்திய இசைப் பொருத்தத்தின் உச்ச நிலையை அடைகிறது."

டீ

ஊக்கத்திற்கு

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது

மனோஹரன் ஸ்டோர்ஸ்

தந்தி:
"HARANTALKY"

181, கீழ வாசல்
மதுரை

போன் நெ.
219

கீழ்க்கண்ட ஜவுளிகளின் ஸ்டாக்கிஸ்டுகள் :

மோஹன் ராம் கம்பெனியாரின் சேலைகள், வேஷ்டிகள்

✲

M. K. C. "சிங்கம் மார்க்"

பனியன்கள், ஸ்லிப் ஓவர்ஸ், அண்டர்வேர்ஸ் சின்டஸ் வகையரா

✲

சென்னை இன்டோ-லங்கா டிரேடர்ஸின்

30-இஞ்ச், 44-இஞ்ச் டோரியா வாயல்கள்

(சுத்த கைத்தறி ஜவுளிகள்) கண்களைக் கவரும் நவ நாகரிக டிஸைன்களின் பற்பல ரகங்களில் கிடைக்கும்

✲

மொத்த & சில்லரை ஆர்டர்களுக்கு எழுதவும்

சக்தி • மாத வெளியீடு

தனிப் பிரதி 'தபால்'	0 8	ஆறு மாதம்	3 8
ஒரு வருஷம்	6 0	2 வருஷம்	11 0

ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு
0-3-0 விகிதம் சேர்த்து அனுப்பவேண்டும்

பர்மா

தனிப்பிரதி	0 9	ஆறு மாதம்	4 0
ஒரு வருஷம்	7 0	2 வருஷம்	13 0

மலேயா, முதலிய வெளி நாடுகளுக்கு

தனிப்பிரதி	0 10	ஆறு மாதம்	4 8
ஒரு வருஷம்	8 0	2 வருஷம்	15 0

SHAKTI KARYALAYAM :: MADRAS—14.

என்ற விலாசத்திற்குச் சந்தாத் தொகை அனுப்பவேண்டும்

அவன் பட்ட பாடு

ஆர். கே. பார்த்தசாரதி

அப்பப்பா! கையிலிருந்த காசை அவன் எவ்வளவு தடவை தான் எண்ணுவான்! காலணாக் களாக நாலணா இருந்தது. பாவம் அவன், தெருவில் நடந்துபோய்க் கொண்டே, அதை அப்பொழுது நூறுவது தடவையாக எண்ணி விட்டான். அவ்விதம் செய்தும் நாலணா நாலணாவாகவே இருந் தது; ஒரு தம்படி கூட அதிகமாக வில்லை. அரைமணி நேரமாகக் காசை எண்ணியும் அது அப் படியேதானிருக்கின்றது என்ற உண்மையை அவன் இன்னும் உணரவில்லை போலும்! என்ன வேடிக்கை! லட்சக்கணக்கான பணமுடையவனும் தன்னைப் போலத்தான் காசையெண்ணு வான் என்று அவன் நினைத்த போது அவன் உள்ளத்தில் தானும் ஒரு லட்சாதிபதிதான் என்ற எண்ணம் ஏற்பட்டது. அடுத்த விநாடி, "எவ்வளவு பைத்தியக்காரத்தனமான உப மானம்" என்றெண்ணி, 'களுக்' கென்று சிரித்துக்கொண்டான்.

இப்பொழுது அவன் சாலையின் பக்கவாட்டிலிருந்த ஒரு மரத்தின் கீழ்உட்கார்ந்துகொண்டே, சாவ தானமாக அந்தக் காலணாவை ஒவ் வொரு காலணாவாக வலக் கையி னால் எண்ணி, இடக் கையில் போட்டு மூடிக்கொண்டான். ஹூம்! எவ்வளவு அருமையா கச் சம்பாதித்த பணம்! அக்கிர மமான வழியில் ஆயிரக்கணக் காகச் சம்பாதித்துச் சேர்க்கும் லோபிதான் பணத்தில் அவ்வ ளவு கருத்துடன் இருக்கவேண் டுமா என்ன? நெற்றி வியர்வை நிலத்தில்விழச் சம்பாதித்த அவன் தனக்கே சொந்தமான காசை ஏன் அவ்விதம் போற்றக்கூடாது? எதையும் ஊன்றிக் கவனிக்க மறுக்கும் உலகம், முன்னவனு டைய செய்கையை 'ஜாக்கி ரதை' யென்று புகழ்ந்து, பின் னவனுடைய செய்கையை அல் பத்தனம் என்றுதான் இகழும். இகழட்டுமே! உலகம் அவனையே கவனிப்பதாக அவன்தான் நினைக்கவில்லையே! அது தன்னைக் கவனித்திருந்தால், அவன் இப்படி யாகவா இருப்பான்?

ஒவ்வொரு காலணாவும் மற் றொரு காலணாவின் மீது விழுந்து 'டொங்' என்று சப்தம் செய்தது, அவன் காதுகளில் தேவகான மாக ஒலித்தது. எனவே, அந்தத் தேவ கானத்தை அவன் அடிக் கடி எழுப்பி, ஆத்மத் திருப்தி யடைந்துகொண் டிருந்தான். இப்பொழுது, இடக் கையில் வைத்திருந்த காலணாக்களை பழையபடியே, வலக் கைக்கு மாற்றிக்கொண் டிருந்தான்.

இப்பொழுது ஒவ்வொரு கால ணாவும் செல்லுமா என்று ஒவ் வொன்றாகத் திருப்பித் திருப் பிப் பார்க்க ஆரம்பித்தான். ஆம்! ஒரு காலணா செல்லாதென் றாலும் அவனுக்கு எவ்வளவு மகத்தான நஷ்டம்! இரண்டு நாள் சம்பாத்தியத்தில் ஒரு பகுதி உபயோகமற்றதாகப் போய்விட் டால்?

"வெயிலில், சுருண்டு துடிக்கும் புழுவைப் போல் அவனும் முனகியவாறே உடம்பை நெளித்து: முறித்துக்கொண்டான்." பசி வயிற்றைக் கிள்ளியது. ஆனாலும், 'அந்த நாலணா'வைச் செலவழிக்க அவன் மனம் துணியவில்லை. அதைச் சம்பாதிக்க 'அவன் பட்ட பாடு' அவனுக்கல்லவா தெரியும்!

இந்த வேலையும் முடிந்துவிட்டது. ஆயினும், அவன் காசை யெடுத்து மடியில் போட்டுக் கொள்ள வில்லை. ஒரு குவியலாக அந்தக் காலணுக்களைக் கீழே வைத்து அழகு பார்த்தான். ஹூம்! அல்பத்தனத்தின் சிகரம்! குவியலிலிருந்த ஒவ்வொரு காலணுவும், தான் வந்த வழியைக் கதை கதையாக அவனுக்குச் சொல்லியது.

குவியலிலிருந்து இரண்டு காலணுக்களை யெடுத்துத் தனியாக வைத்தான். அவை, 'எழும்பூர்' ஸ்டேஷனிலிருந்து 'ட்ராம்' நிற்குமிடம் வரை ஒரு கனவானின் கனம் பொருந்திய சாமான்களைத் தூக்கிச் சென்றதன் பலன். அவை, அவன் கைக்கு வருவதற்கு முன், அவன் கழுத்தை ஒடித்துவிட்டன.

மீண்டும் மூன்று காலணுக்களைத் தனியாக எடுத்துவைத்தான். அவை ஒரு பெரிய மனிதரின் பிரம்மாண்டமான கொல்லையைக் கொத்திச் செப்பனிட்டதற்காகக் கிடைத்தவை. அந்த முக்காலணுவை அவன் பார்த்த பொழுது, மேலும் ஒரு காலணுவிற்காக, தான் அந்தப் பெரிய மனிதரிடம் கெஞ்சிக் கூத்தாடியது ஞாபகத்திற்கு வந்தது. அதோடு, இந்த முக்காலணுவும் நல்ல வேளையாகக் கிடைத்ததே என்ற சந்தோஷமும் சேர்ந்து கொண்டது. ஆம்! அவன் ஒரு காலணு அதிகமாகக் கேட்டவுடன், ஆத்திரமடைந்த 'எசமானர்' கொடுத்த முக்காலணுவையுமல்லவா திருப்பி யெடுத்துப்போக ஓடிவந்தார்! அவருக்கு முன்னால் அவன் அந்தக் காசை எடுத்தானே, அதுவும் தங்கியதோ!

அடுத்தபடியாக, நான்கு காலணுக்களை யெடுத்து அப்புறம் வைத்தான் அவை, பாரவண்டியின் பின்னால். தலையைக் கொடுத்து முட்டிச் சம்பாதித்த பணம். அப்பா! பெரும் பள்ளத்திலிருந்து மேட்டிற்கு அந்த வண்டியை முட்டித் தள்ளிக்கொண்டு சென்றதில் அவன் மூளையே—அவனுக்கும் மூளை உண்டா என்று, 'அறிவாளிகள்' ஆச்சரியப்படலாம்—கலங்கிவிட்டது.

மிஞ்சிய ஏழு காலணுக்கள் அவனுடைய 'ரிக்கார்டு' வருமானம். 'ஸ்ட்ரைக்' நடந்த ஓரிடத்தில் எதிர்பாராத விதத்தில் 'கருங்காலி'யாக வேலை செய்து அவ்வளவு சம்பாதித்துவிட்டான் அவன். நல்ல வேளையாக 'ஸ்ட்ரைக்' செய்த தியாகிகளின் கண்ணில் அவன் விழவில்லை; விழுந்திருந்தால் அவனும் தியாகியாக மாற்றப்பட்டிருப்பான்; அவனுடைய 'கருங்'கூலி பிடுங்கப்பட்டிருக்கும்; 'யாரால்' என்பது அவனுக்குத் தெரியும்.

இப்பொழுது, தனித்தனியாக வைத்த பணத்தை ஒன்றாகச் சேர்த்து எண்ணிப் பார்த்தான். அதே 'சனியன் பிடித்த' நாலணு. கொஞ்சங்கூட அதிகமாகாத அந்தப் பணத்தை, உதட்டைப் பிதுக்கிக்கொண்டே, மடியில் கட்டிக்கொண்டான். அந்தப் பணத்தை அவன் முதல் நாள் இரவிற்குள்ளேயே சம்பாதித்துச் சேர்த்துவிட்டான். ஆனாலும், இன்று காலைவரை அதைச் செலவழிக்க அவன் மனம் இடந்தரவில்லை. ஐயோ! செலவழித்துவிட்டால், நாலணு பறந்து போய்விடுமே என்று அவன் ஒரு குழந்தையைப் போல் பயப்பட்டான். ஆனாலும், வயிற்றைக் கிள்ளிக்கொண்டிருந்த கொடுமை

யான பசி அந்தக் காசைப்போக் கடிக்கப் பலமாகச் சதி செய்து கொண் டிருந்தது. எப்படியோ இதுவரையில் அவன் தாங்க முடி யாத பசியின் தணியாத சக்தியை ஒருவாறு எதிர்த்து அதைச் சிறிது அடக்கியும்விட்டான். ஆனால், இனி...?

அதே மனிதன் இப்பொழுது படைப்பதைக்கும் வெயிலில் மூச்சுத் திணறியவாறே நடந்து கொண் டிருந்தான். பசியால் நலிந்த உடலின் தளர்ச்சியை உள்ளத்தின் வேதனை பன் மடங்காக்கியது. சூரியனின் சுட் டெரிக்கும் வெம்மையை உள் ளக்கொதிப்பு மேலும் பயங்கர மாக்கியது. வெய்யிலில், சுருண்டு துடிக்கும் புழுவைப்போல் அவ னும் முனகியவாறே உடம்பை நெளித்து முறித்துக்கொண்டான்

இப்பொழுது, காலணக்களை அவன் எண்ணவில்லை. பாவம்! ஆயிரந்தடவைக்கு அதிகமாக எண்ணி எண்ணிப் பார்த்துக் கொண் டிருந்த நான்கணவைத் தான்—பதினறு காலணக்களைத் தான்—அரை நொடியில் அறவே தோற்றுவிட்டானே, அந்தத் துரதிருஷ்டக்காரன்! இப்போது காலணக்களை எண்ண முடியா மற் போகவே, அவை மறைந்த மாயத்தை எண்ணிப் பார்த்தான். மடையன்! அருமையாகச் சம் பாதித்த காசை அரைக் கணத்தில் இழந்துவிடுவதென்றல்... அந்தோ, நினைக்கவும் அவன் இத யம் குமுறியது.

ஆனல், யார்மீது குற்றம் சுமத் துவது? தெரிந்து, ஆற்றில் கொட்டுவது போலல்லவா அவ் வளவு காசையும் அந்த ஊர், பெயர் தெரியாத ஆளிடம் அளந்து கொட்டிவிட்டான் அவன்! அந்த 'ஆசாமி' கட் டாயப்படுத்தியா இவன் காசைப் பிடுங்கிக் கொண்டான்? பேரா சையில் இவனே அவனிடம் தன் காசைத் தொலைத்தான். ஆனல், இவனுடைய செய்கையை பேராசை என்றுதான் எப்படிக் குறிப்பிடுவது? சாதாரணமாக, எல்லா மனிதர்களும் நாக ரிகமாகச் செய்யும் அதே வேலையைத்தான் இவனும் அநாக ரிகமான—ஆனல், இவனுக்கும் இவனைப் போன்ற நாடோடி களுக்கும் முற்றிலும் நாகரிக மான, நியாயமான—முறையில் செய்து பார்த்தான். முன்பு, பணத்தை எண்ணி எண்ணிப் பார்த்துக் காசு குட்டி போடுமா என்ற சோதனையில் இறங்கின னல்லவா? அதே சோதனையைத் தான் சற்றுமுன் வேருரு முறையில் செய்து பார்த்தான். பணம் குட்டி போடுவதற்குப் பதிலாக இவனிடமிருந்தே மறைந்துவிட்டது. ஆராய்ச்சி யின் விபரீதப் பலன்தான் என்ன!

மீண்டுமொரு முறை காசு போன வகையை நினைத்துப் பார்த்துக்கொண்டான். இதில் என்ன திருப்தியோ அவனுக்கு!

மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு, அப்பொழுது பணத்தை எண்ணின னல்லவா? பிறகு, காசை மடியிற் கட்டிக் கொண்டு சாலைவழியே நடந்து சென்றன். சாலையின் ஓரத்தில் சில சோம்பேறிகள் — ஆனல், பணத்தை எப்படி எப்படியோ சம்பாதிப்பதில் சுறு சுறுப்பு உடையவர்கள்—'எட்டுக் காசு' விளையாடிக்கொண் டிருந்தார் கள். "தலையா? பூவா?" என்ற கூக்குரலில், அவனவன் காசு அவனவனை விட்டுப் போய்க் கொண் டிருந்தது. இவன் சற்று நின்று அந்த விளையாட்டைச்

சுவாரஸ்யமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். காசைக் குட்டி போடவைக்க அவன் ஏற்கெனவே முயன்றுகொண்டிருந்ததன் ஞாபகம் இன்னமும் அவன் உள்ளத்தின் வெளியில் பசுமையாக இருந்தது. இப்பொழுது, இதோ அவன் எதிரில், அந்த 'விஞ்ஞானக் கூட'த்தில் அந்தச் சோம்பேறிகள் அதே சோதனையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவனுடைய அப்போதைய மனம் அவனையும் அந்தப் பரீட்சையில் கலந்து கொள்ளும்படித் தூண்டியது. சுண்டியெறிந்த பொழுது மேலும் கீழும் சென்று கொண்டிருந்த காசு அவனுடைய உள்ளத்தையும் "இந்த முயற்சியில் கலந்து கொள்வதா, வேண்டாமா?" என்ற எண்ண ஊஞ்சலில் மேலும் கீழுமாக ஆட்டியது. ஆகாசத்தில் 'கிர்' என்று சத்தமிட்டுச் சுழன்ற காசு, அவன் மனத்தையும் 'கிர்' என்று சுழற்றியது. கடைசியில், அவன் துணிந்துவிட்டான். "அண்ணே!" என்று உறவு கொண்டாடிக் கொண்டே கீழே "குதித்தான்". ஆட்டத்தில் கலந்து கொண்டான். ஆனால்......

ஆனால் என்ன? இதோ அவன் தான் காசைப் பறி கொடுத்து விட்டுக் கடுமையான வெய்யிலில் கருகிக்கொண்டிருக்கிறானே! அந்தோ! அந்த நாலணாவில் கொஞ்சமேனும் மிச்சப்படுத்தி வைத்துக்கொண்டானா? எப்படி வைத்துக்கொள்வான்? அவன் தான் அந்தக் கடைசி அரையணாவில் இழந்த காசு முழுவதையும், அதற்குமேலும் திரும்பப்பெற்று விடலாமென்று நினைத்தானே?

அவன் பழைய நிலைக்கு—ஒட்டாண்டியான நிலைக்கு — வந்தவுடன், பசி அவனை மேலும் வாட்டி வதைத்தது,—இப்பொழுது பணத்தாசையின் எதிர்க்கும் சக்தி அவனிடமில்லையென்பதைக் கண்டு. இப்பொழுது, மறுமுறையும் பணம் சேர்த்துப் பசியாறுவதெப்படி என்பதைச் சிந்தித்துக் கொண்டே, மேலும் போகுமிடம் தெரியாமலேயே, வழி நடந்தான். யாரேனும் பிச்சை போடுவார்கள் என்று அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை, நம்பவில்லை. நெடுநாளைய, பழைய அனுபவம் இருக்கிறதல்லவா?

காலில் ஏதோ தென்பட்டது.

அதுவரை அவன் ஆண்டவனை நினைந்து கொண்டே ஆகாசத்தை அண்ணாந்து பார்த்தவாறு நடந்துகொண்டிருந்தான். இப்பொழுது கீழே குனிந்து பார்த்தான். ஒரு பொட்டணம். எல்லையில்லாத ஆனந்தத்துடனும், அளவற்ற பதற்றத்துடனும் அதை எடுத்தான்; பிரித்துப் பார்த்தான். அவனுடைய இதயமே அந்த ஒரு விநாடி நேரம் நின்றுவிட்டாற்போலிருந்தது. சந்தோஷத்திற் பிறந்த திகைப்பு அவ்வளவு! திகைப்புச் சிறிது தணிந்தவுடன், அந்த வெள்ளி நாலணாவைக் கண் கொட்டாமல் பார்த்தான்; திருப்பித் திருப்பிப் பார்த்தான்; ஓரங்களை வருடிப் பார்த்தான். சூரிய ஒளிபட்டுப் பளபளத்த அந்த வெள்ளிப் பணம் அவன் இருண்ட இதயக் குகையில் மின் வெட்டியது. சுற்றிலும் கண்களைச் சுழல விட்டான். அவனைத் தவிர்த்து வேறு எவரும் அங்கில்லை. சிறிது தைரியம் பிறந்தது. என்றாலும், அவனுடைய மனச்சாட்சி—அவனுக்கும் அது உண்டு—ஏதோ மெல்லிய குரலில் ஆட்சேபித்துக்கொண்டே இருந்

தது. சிறிது நேரத்தில் அந்தப் பலவீனமான குரலைப் பசியின் பேரிரைச்சல்—பேயிரைச்சல் என்றாலும் தகும்—அடக்கிவிட்டது. காசு கட்டப்பட்டிருந்த காகிதத்தை வீசியெறிந்துவிட்டு, நாலணாவை இடுப்பில் செருகிக் கொண்டு, மேலும் நடந்தான். அவன் கால்களுக்கு எங்கிருந்தோ ஒரு புது சக்தி வந்துவிட்டது. ஓர் 'தில்லானா'ப் பாடிய வாறு அடுத்தபடியாக அந்த நாலணாவிற்கு எங்கே 'பலகாரம்' சாப்பிடுவது என்று யோசித்துக் கொண்டே நடந்தான்.

ஒரு சிறுமியின் அழுகைக் குரல் அவனுடைய பாட்டிற்கு 'ப்ரேக்' போட்டது. கிட்டே நெருங்கிய குழந்தையை, "என்ன விசயம் தங்கச்சி? ஏன் இப்படி அழுவறே?" என்று ஆதரவுடன் கேட்டான். ஒரு வெள்ளி நாலணாவைத் தொலைத்துவிட்டுத் தேடுவதாகக் குழந்தை கூறிய பொழுது, அவன் உள்ளத்தில் ஏதோ வேதனை புரண்டது. ஆனால், கோரமான பசியின் கொடுமை—வறுமையின் வெம்மை—அந்தப் புரட்சியை உடனே சமாளித்துவிட்டது. மனிதத் தன்மையை மிருக உணர்ச்சி வென்றுவிட்டது. அவன் நோக்கில் அதுவும் நியாயந்தானோ என்னவோ? எதிர் பாராத விதத்தில் கிடைத்த காசை மீண்டும் அனுதாபப்பட்டு அக் குழந்தையிடம் உதறிவிட்டால், அவனுடைய அன்றைய பசிப் பிரச்னை எவ்விதம் தீரும்? இவனுக்காக எவர் அனுதாபப்படப் போகின்றனர்? இந்த எண்ணத்தில், இடுப்பிலிருந்த நாலணாவை நன்கு தடவிப் பார்த்துப் பத்திரப்படுத்திக் கொண்டு, குழந்தையுடன் தானும் தேடினான். அனுதாப வார்த்தைப் போலிகள் அவன் வாயினின்றும் அவ்வப்போது வெளிவந்துகொண்டிருந்தன. கடைசியில், "தங்கச்சி! இங்கே ஒண்ணையும் காணோமே! ஹூம்! பாவம்! வேறு எங்கனாச்சியும் போய்த் தேடு" என்று கூறிவிட்டுக் குழந்தையை விட்டு நகர்ந்தான். தான் பாசாங்கு செய்ததை நினைந்து நினைந்து, அவன் வழி முழுதும் அக்கிரமமாகச் சிரித்துக் கொண்டே சென்றான். ஆனாலும், அந்தச் சிரிப்பின் மேல் மட்டத்தின் மீது ஏதோ ஒன்று கனமாக மிதந்து கொண்டுதானிருந்தது.

அதை அலட்சியம் செய்து கொண்டே அவன் நடந்தான். ஆனால், மனச்சாட்சியின் சுமை போகப்போக அதிகரித்து, அவனை இறுக்கி அழுத்தியது. அவனால் மேலே ஓரடிகூட எடுத்து வைக்க முடியவில்லை. உடல் ஏனோ நடுங்கியது! அவனையு மறியாமலே கண்கள் நீர் சுரந்தன. என்ன தோன்றிற்றோ! உடனே, திரும்பினான். "தங்கச்சி, தங்கச்சி! இந்தா உன் காசு" என்று கதறிக் கொண்டே, பைத்தியம் பிடித்தவனைப்போல், அந்தக் குழந்தை சென்ற பக்கமாக ஓடினான். ஹூம்! அந்தக் குழந்தை அதற்குள் எங்கேயோ சென்றுவிட்டது. அவன் தன்னையே வெறுத்துக்கொண்டு திரும்பினான். தள்ளாடியவாறு மேன்மேலும் நடந்துகொண்டேயிருந்தான். மனச்சாட்சி அவனைக் குத்திக் கொண்டேயிருந்தது.

சிறிது நேரத்தில், அதே பசியின் வேதனையில் அவன் செய்த கொடுஞ் செயலின் நிழல் மெல்ல மெல்ல இதயத் திரையினின்றும் மறைந்தது. அவனுடைய கால்

கள் அவனை ஏதோவொரு 'க்ளப்' பிற்கு இழுத்துச் சென்றன. தங்கச்சி'யை ஏமாற்றியதுகூடச் 'சரியென்று அப்பொழுது அவனுக்குத் தோன்றியது.

அந்த 'ஐயர் ஓட்ட'லில் நாலணாவிற்குக் கிடைக்கக்கூடிய அத்தனை பலகாரத்தையும் வயிறு நிறையத் தின்றான். சந்தோஷத்தால் அவன் உள்ளம் அவன் வயிற்றைப்போல் நிரம்பியது. களிப்புக் கரை புரண்டோடியது. பணம் கொடுத்துச் சாப்பிடும் சக்தி — பிரபுத்துவம் — அன்று அவனுக்கு ஏற்பட்டுவிட்டதல்லவா? கூட்டத்தை இடித்துக் கொண்டு வெளியே வந்தான்.

வெளியே வந்த அவனை 'க்ளப்' வேலைக்காரன் ஒருவன் கழுத்தைப் பிடித்து உள்ளே தள்ளிக் கொண்டு வந்தான். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. குற்றவாளியைக் கூண்டில் நிறுத்துவது போல் வேலைக்காரன் அவனை முதலாளியின் முன் கொண்டு வந்து நிறுத்தினான். இப்பொழுதும் அவனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. முதலாளி "எங்கடா உன் 'பில்'பணம்?" என்று கோபமாக அதட்டி, வாயில் வந்தபடி அவனை, மேலும் —ஹோட்டல்காரர்களின் தனித்த பாணியில்—வைத பொழுதுதான் அவனுக்கு விஷயம் சிறிது விளங்கியது. தன்னை —திடீரென்று பிரபு வாகிவிட்ட தன்னை—அவர் காரணமில்லாமல் திட்டியது அவனுக்கு மிகுந்த ஆத்திரத்தை உண்டாக்கியது. "என்ன, சாமி! வெள்ளி நாலணாக் காசையும், பில்லையும்தான் மேசை மேலே வச்சேனே! அதாங்காட்டியும் என்னவோ மேலே மேலே பேசறிங்களே! எங்கணச்சியும் விழுந்திருக்கும், நல்லாப் பாருங்க" என்று அவன் தனது பிரபுத்துவத்தை நிலை நாட்டிக்கொண்டான். ஆனால், அதற்குப் பதில் ஒரு பேயறை; அடி பொறியைக் கலக்கிவிட்டது. வலி தாங்காமல் அவன் 'திரு திரு' என்று விழித்தான்.

"பார்த்தகளா சார்! திருடன் மாதிரி முழிக்கறான்" என்று முதலாளி தம்முடைய செய்கையின் நியாயத்தைச் சாப்பிட வந்தவர்களிடம் நிரூபித்தார். உடனே, அந்த வார்த்தைகளைத் தொடர்ந்து—

"ஆமாம், ஆமாம், அயோக்கியப் பயல்! திருட்டு முழிதான் முழிக்கிறான்"—

"இந்த மாதிரி துணிஞ்ச பயல்கள் எத்தை வாணாலும் செய்வானுக"—

"மேல் வேட்டியைப் பிடுங்கிக்குங்கோ சார்"—

"திருட்டுக் களுதை! காசில்லேன்னா சாகறதுதானே"—

என்றெல்லாம் பல மனித வேட்டை நாய்கள் அவன் மீது விழுந்து பிடுங்கின. அந்த ஒவ்வொரு வார்த்தைக்கும் முத்தாய்ப்பு வைப்பதுபோல், அவன் உடலெங்கிலும் அடி விழுந்து கொண்டிருந்தது.

அவன் 'ஓ'வென்று அழ ஆரம்பித்துவிட்டான். அவனை 'க்ளப்' வேலைக்காரன் பூரணமாகப் பரிசோதித்துப் பார்த்தான்—எல்லார் முன்னிலையிலும். அந்த அல்பப் பயலுக்கு மானம் என்ன வேண்டிக் கிடக்கிறது என்பது அவன் அபிப்பிராயம்! காலணாக்கூட அவனிட மில்லை. வேறு என்ன செய்வது? முதலாளி, கடைசியாக, ஆத்திரம் தீர ஓர் அடி கொடுத்துவிட்டு, அவனை

வெளியே நெக்கித் தள்ளினர். வேலைக்காரன் மேல் வேட்டியைப் பிடுங்கிக்கொண்டான்.

வெளியில் வந்து விழுந்த அவனுக்கு மீண்டும் மெய்யுணர்வு வரச் சிறிது நேரமாகியது. மெதுவாக எழுந்தான். சிறிது நிதானித்துக்கொண்டு, அடிவானத்தை நோக்கி எங்கேயோ புறப்பட்டான். "ஹூம் ஆண்டவன் நல்ல கூலி கொடுத்தாண்டா! பச்சைக் கொளந்தையின் காசை 'அக்குரும்பா' எடுத்துக் கிட்டேனில்ல?" என்று அவன் வாய் முணுமுணுத்தது. முன்னர், காசு பத்திரமாக இருக்கிறதா என்று தடவிப் பார்த்துக் கொண்டிருந்த அதே கை இப்பொழுது தேகமெங்கிலு மிருந்த வீக்கங்களைத் தடவிப் பார்த்தது.

அவன் சென்ற சில விநாடிகளுக்குப் பின், 'க்ளப்' முதலாளி ஏதோ காரியார்த்தமாக நாற்காலியை விட்டெழுந்தார். அவர் அரை வேட்டியி லிருந்து ஒரு வெள்ளி நாலணாத் தரையில் விழுந்து, உருண்டோடியது. அவர் மனத்தில் ஏதோ 'சுரீர்' என்று தைத்தாற்போ லிருந்தது. ஆனால், அந்த உணர்ச்சி கண் மூடிக் கண் திறக்கும் நேரத்தில் மறைந்துவிட்டது. இல்லாவிட்டால் அவர் தம் குற்றத்தை ஒப்புக்கொள்ளவா போகிறார்? மேலும், அதை யாரிடம் ஒப்புக் கொள்வது? எதற்காக ஒப்புக் கொள்வது? இவருமா அவனைப் போல் ஒட்டாண்டி?

ஒன்றுமே நடக்காததுபோல், அவர் "ராமா! செட்டியாருக்கு என்ன கணக்கு?" என்று கேட்டுக்கொண்டே, தமது சிம்மாதனத்தில் மீண்டும் அமர்ந்தார்—கொடுங்கோல் புரிய.

'அந்த' வெள்ளி நாலணாக் 'கல்லாய்ப் பெட்டி'க்குள் சென்றுவிட்டது. அதற்கு எங்கே தெரியப் போகிறது 'அவன்' பட்ட பாடு?

✲

அமெரிக்க மரியாதை

ஓர் அமெரிக்கனும், ஒரு வெளி நாட்டானும் சந்தித்தனர். வெளி நாட்டான் தன்னுடைய தேசத்தாரின் மரியாதைப் பண்புகளைப் பற்றியும், மரியாதை செலுத்தும் விஷயத்தில் அவர்கள் அமெரிக்கர்களைவிட ஒரு படி மேலாக இருப்பதைப் பற்றியும் ஓயாமல் பேசினான். கடைசியில், "இதையெல்லாம் நீங்கள் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்; இல்லையா?" என்று கேட்டான்.

"ஆமாம், கண்டிப்பாக. அது எங்கள் தேசத்து மரியாதை" என்று சாவதானமாகச் சொன்னான் அமெரிக்கன்.

—கிறிஸ்டியன் சயன்ஸ் மானிட்டர்

விளக்கம்

பணக்காரன்: "இன்னும் கொஞ்சம் மலிவானதாக எடேன்!" என்று கடைக்காரனிடம் சொல்லப் பயப்படாதவன்.

மாரிக்காலம்: "வெய்யில் கொளுத்துகிறது!" என்று கூறி அலுத்துக்கொண்டவர்களே, அதே நிலையைத் திரும்ப அடைய ஏங்கும் பருவம்.

—லேடீஸ் ஹோம் ஜர்னல்

பர்மியத் தலைவர் ஆங்சான்

'பதி'

உருவத்தை மட்டும் கொண்டு மனிதனுடைய திறமையையோ, கல்வியறிவையோ நிர்ணயம் செய்துவிடுவது முடியாது. உருவத்தில் ஆங்சான் கல்லூரிப்பையனைப் போலத்தான் இருக்கிறார்; அவர்தான் பர்மாவின் தலைவர்; பர்மியரின் நேர்மையான பிரதிநிதி; பர்மா சுதந்தர மடையப் பாடுபடும் இளம் சிங்கம். லண்டனுக்குப் போகிறபோது டெல்லியில் இறங்கினார். ஆங்சான் விமானத்திலிருந்து இறங்கிய பிறகும் அங்கே கூடியிருந்த அனைவரும் விமானத்தையே கூர்ந்து கவனித்துக்கொண் டிருந்தார்களாம், இன்னும் ஆங்சான் இறங்கவில்லையே என்ற எண்ணத்தில். தலைமைப் பதவி வகிக்க வேண்டுமானால் அதற்குப் பழுத்த அனுபவமும், முதிர்ந்த அறிவும, கவர்ச்சிமிக்க தோற்றமும் இன்றியமையாதன என்ற எண்ணத்துடன், டெல்லியில் ஆங்சானைக் காணவந்தவர்கள் இருந்தார்கள் போலும்! பத்தாண்டுகளுக்கு முன், கல்லூரி மாணவராக மாணவர் இயக்கங்களில் ஈடுபட்டு அதன் மூலம் நாட்டுக்குச் சேவை செய்துவந்த பெருந்தகை அவர். ஆழ்ந்த கல்வியறிவும் உலக அனுபவமும் மக்களைக் கவரக்கூடிய பேச்சுத் திறமையும் பெற்றிராதவர் போன்று காணுகிற இந்த இளைஞர், எந்தத் திறமையை நம்பித் தம் நாட்டைச் சுதந்தர நாடாக்க முன் வந்துள்ளார் என்று பலர் ஐயப்படலாம். எல்லாம் துப்பாக்கியின் துணைகொண்டுதான்!

ஆங்சான் மாக்வே என்னும் ஊரில் பிறந்தார். இவர் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்தான். இவருடைய தந்தையார் ஒரு வக்கீல். இவர் தமது இளம் பிராயத்தை ரங்கூன் நகரில்தான் கழித்தார்; கல்வி கற்றதும் அங்குதான்.

கலாசாலையிலும் கல்லூரியிலும் இவர் சாமான்யத் திறமையுடையவராகத்தான் கருதப்பட்டார். இவர் கலாசாலையில் பயிலும்பொழுது, இவரது போக்கிலே சில தனிச் சிறப்புக்கள் இருந்தனவாம். இவர் மற்ற மாணவர்களோடு அதிகம் பழகியதில்லையாம்; அனுவசியமாக அதிகம் பேசுதல் முதலியன செய்யாமல், காரியமே கண்ணுயினர் போல, ஏதோ ஒரு கனவு உலகத்தில் சஞ்சரிப்பவர் போல் இருப்பாராம். ஏதோ ஒரு குறிக்கோளை அடைய முயற்சி செய்பவர் போலத் தோன்றினாராம். இவருடைய கலாசாலை வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் எதுவும் ஏற்படவில்லை. ஆனால், 1937-ம் ஆண்டு மாணவ இயக்கத்துக்குத் தலைமை வகித்தவர்தான், இன்று பர்மா நாடு போற்றும் ஒப்பற்ற தலைவராக விளங்குகிறார்.

சாதாரண மக்களின் வாழ்க்கையில் தற்செயலாக நிகழும்

பர்மாவின் விடுதலைக்காகப் பாடுபடும் தலைவர்களுள், ஜெனரல் ஆங்சான் வயதில் இளையவர்; காரியத் திறனிலும், மக்களிடையே பெற்றிருக்கும் செல்வாக்கிலும், மற்றத் தலைவர்களைவிடப் பெரியவர். அவருடைய தீர மிக்க வாழ்க்கையை விவரிக்கிறது இக் கட்டுரை.

எவ்விதமான
வேலைக்கும்
ஈடு கொடுக்கக்
கூடியவை

கட்டிட வேலையிலோ, சுரங்கத்திலோ ரயில் பாதைகளைச் செப்பனிடவோ, எவ்வித வேலைக்கும் சுளகுப்பாரை ஈடு கொடுக்க வேண்டும்.

பிரத்தியேகமான முறையில் உயர்ந்த இரும்பிலிருந்து உண்டு பண்ணப்பட்ட எங்கள் சுளகுப் பாரைகள் எத்தகைய கடுமையான வேலையிலும் நன்கு உழைக்கக் கூடியவை

வெஸ்ட்கோஸ்ட், வடசர்க்கார் நீங்கலாக சென்னை மாகாணத்திற்கு வினியோகஸ்தர்கள் :

மெஸர்ஸ். வி. கனகய்ய செட்டி அண்ட் கம்பெனி
105, நயினியப்ப நாயக்கன் தெரு, ஜி. டி. சென்னை

மெஸர்ஸ். டி. வி. மதன் அண்ட் கம்பெனி
39, சகண்ட் லைன் பீச், ஜி. டி. சென்னை

டாட்டா அக்ரிகோ
கருவிகளையே வாங்குங்கள்

தி டாட்டா அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட்

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி

லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள் :

5,00,000 நூற்கும் கதிர்கள்	ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல்.	நம்பர் 80 வரை நூல்கள்

●

நாங்கள் சப்ளை செய்வது :

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான் வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

●

தற்காலம் நூல் வினியோகம் கட்டுப்பாடு செய்யப் பட்டிருப்பதால், உங்கள் தேவைக்கு உங்கள் மாகா ணம் அல்லது ஸ்டேட்டில் உள்ள துணிக் கட்டுப்பாடு அதிகாரிக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்

எதிர்பாராத சம்பவங்கள்தான் அவர்களைப் பெரிய மனிதர்களாகச் செய்துவிடுகின்றன. 1937-ல் நடந்த மாணவர் இயக்கங்களைத் தடை செய்யப் போலிசார் 'வழங்கிய' தடையுத்தரவுகளும், தடியடிகளும் இயக்கத்தைப் பலப்படுத்தின. இயக்கத்தை அடக்குவதற்குப் போலிசார் சுட்டதன் காரணமாக ஒரு மாணவன் இறந்தான். இந்தச் சம்பவம் மாணவர்களை, ஆங்சான் தலைமையில் வீறு கொண்டெழச் செய்தது; பர்மியர் அனைவரையும் ஒன்று படுத்தியது. இந்தச் சமயங்களில்தான் ஆங்சான் மாணவர்களின் தலைவன் என்ற முறையில் மந்திரி ஊ சா முதலியோரைக் கண்டு பேசவும் அவர்களுடன் நட்பு கொள்ளவும் வாய்ப்புக்கிடைத்தது. இவர் தலைமை வகிக்கும் கூட்டங்களிலெல்லாம் வீரமிக்க சொற்பொழி வாற்றுவார். இவர் அடிக்கடி அதிகாரிகளிடத்திலும், மக்களிடத்திலும், "இன்று இளைஞர்களாகிய நாங்கள்தான் வருங்காலத்தில் இந்த மகத்தான நாட்டை ஆளும் பொறுப்பேற்கப் போகிறோம்" என்று அறைகூவுவார். இது இன்று உண்மையாக முடிந்தது.

1941-ம் ஆண்டு இரண்டாவது உலக மகா யுத்தம் பர்மாவைப் பாதிக்கத் தொடங்கியது. பர்மியர்கள் யுத்தத்தில் நேசக் கட்சியினருடன் சேர்ந்து உதவி புரிந்தால் அதற்குக் கைம்மாருகச் சுதந்தரம் பெறலாம் என்ற எண்ணத்துடன் மந்திரி ஊ சா இங்கிலாந்து சென்றார். ஆனால், இதன் விளைவால் நிலையான பயன் ஒன்றும் கிட்டவில்லை. அதுவுமல்லாமல் ஊ சா காவலில் வைக்கப்பட்டார். இந்தச் சமயத்தில் நாட்டில் அமைதி குலைந்து, அராஜகம் தலையெடுத்தது; குழப்பம் நிலவிற்று; மக்கள் நலிந்து வாடினர். நாட்டு மக்கள், சிறப்பாக இளைஞர்கள் இந்தச் சங்கடமான நிலையைச் சமாளிக்கத் தக்க தலைவன் தேவை என்றும், ஆங்சான்தான் ஏற்ற தலைவர் என்றும் கண்டனர். ஆனால், ஆங்சான் இந்தச் சமயத்தில் நாட்டில் இல்லை. தலைமறைவாகச் சில காலம் வாழ்ந்த பிறகு, ஜப்பானியத் தலைநகரான டோக்கியோவில் ராணுவப் பயிற்சி பெற்று வந்தார். தமது நோக்கங்களை நிறைவேற்றச் சில சமயங்களில் தலைவர்கள் குறுக்கு வழிகளைக் கையாளுவ துண்டு. அவ்வாறே ஆங்சானும் ஜப்பானியர்களின் உதவியைக் கொண்டு பர்மாவை அடிமைத் தளையினின்றும் விடுவிக்கலாம் என்றெண்ணி, ஜப்பானியப் படையில் 'மேஜர் ஜெனர'லாக வந்து நாட்டைக் கைப்பற்றினர். சிலகாலம், ஜப்பானியர் சூத்திரதாரியாக இருந்துகொண்டு ஆட்டிவைத்த அரசாங்கத்தில் இவரும் பாதுகாப்பு மந்திரியாகப் பதவி ஏற்றுக்கொண்டார்.

அடிமையாக வாழ விரும்பாத வீரரல்லவா ஆங்சான்? பிரிட்டிஷாருக்குப் பதிலாக ஜப்பானியர்களுக்கு அடிமையாக வாழ விரும்பாதவராய்த் தன் மக்களைச் சுதந்தரப் பாதையில் நடத்திச் செல்ல ஒரு தக்க தருணம் பார்த்திருந்தார். இவர் ஜப்பானியருக்கு விரோதமாக, ஜப்பானிய ஆட்சியில் இருந்துகொண்டே ரகசியமாக ஒரு பெரிய படையைத் திரட்டியது இவரது புத்தி சாதுர்யத்தையும், ஆற்றலையும் ஆளுந் திறத்தையும் நன்கு புலப்படுத்துகிறது.

ஜப்பானிய ஆட்சி முறை ஜனங்களை அவர்களிடம் வெறுப்புக் கொள்ளத் தூண்டியது. ஜப்பானிய ஆட்சியை ஒழிக்கச் சரியான சமயம் பார்த்திருந்த இவருக்கு, 1945-ல் நேசக் கட்சியினர் பர்மாவைத் திரும்பக் கைப்பற்ற முயன்றது, ஓர் அரிய சந்தர்ப்பத்தை அளித்தது. சமயத்தைக் கை நழுவ விடாமல், ஜப்பானியரை விரட்ட ஆங்சான் பெரிதும் உதவி புரிந்தார். இவரது நோக்கம் பர்மா நாட்டு விடுதலைதான். ஆகவே, கட்சி மாற்றங்கள் அவசிய மாயின. நேச நாட்டினரின் வெற்றியில் தனக்குப் பெரும் பங்கு உண்டென்றும் தன்னுடைய கட்சியான பாசிச எதிர்ப்பு லீக்தான் மக்களின் ஆதரவு பெற்ற பெரும் கட்சி யென்றும் பிரபலப்படுத்தினர். ஆம், உண்மையும் அதுவே.

ஊ சா, ஊ பா தீன் போன்ற பெரிய ஆட்களைக் காட்டிலும் இவர் நாட்டில் மிக்க செல்வாக்குள்ளவர் என்பதை, இவர் பர்மா நாட்டுச் சுதந்தரம் பற்றி, பிரிட்டிஷாருடன் விவாதிக்க இங்கிலாந்து சென்றிருப்பதே விளக்கும்.

இவர் இளமையின் துடிப்பு மிக்கவர்; வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்று பேசும் சுபாவமுடையவர். இவருடைய லண்டன் பயணம் பர்மா நாட்டைச் சுதந்தர நாடாக்குகிறதோ அல்லது சுதந்தரத்துக்காக நடத்தப்படும் போர்க்களமாக்குகிறதோ, காத்திருந்து பார்ப்போம். ஆங்சான் போராட்டத்துக்குச் சளைத்தவரல்ல. இந்த உண்மையை உலகத்தார் யாவரும் அறிவார்கள்; பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் தெரிந்துதானிருக்கும்.

✲

'பேர் போன' புகைப் படங்கள்!

சக்தி பொங்கல் மலரில், மூவர்ணத்தில் வெளியான (1) அட்டைப் படம், (2) கோலமிடும் கோலக் கை, (3) "ஏற்றம் தேட ஏற்றம் போடும் ஏழை" ஆகிய மூன்று புகைப் படங்களும் கும்பகோணம் ஸ்ரீ ஆர். கிருஷ்ணனுடையவை.

(1) வலையும் வாழ்க்கையும் (2) பிரதி பலிப்பு என்ற இரு படங்களும் மாயவரம் ஸ்ரீ என். ராமகிருஷ்ணனுடையவை.

—ஆசிரியர், சக்தி

கோயில்களை மூடுங்கள்

[ஆசிரியர்: கோரநாதன். சாந்தி நிலைய வெளியீடு, துறையூர், திருச்சி ஜில்லா. விலை 8 அணா]

"அடியுங்கள் சாவுமணி!" என்று கோராவேசத்துடன் தொடங்கி, 'நட்ட கல்லும் பேசுமோ?' என்ற வினா எழுப்பி, கலையின் சமாதி, கடவுள் விஷயம், பக்தியின் இன்றைய நிலை, பாழடைந்த கோவில், கடவுள் ஸ்தானத்தை ஆக்ரமித்துக்கொண்ட கயவர்களின் போக்கு, கடவுள் பெயரால் நடக்கும் தவறுகள் முதலியவைகளைப் பற்றி வெகு வேகமான நடையில் ஆசிரியர் சொல்லிச் செல்கிறார். கோயில்கள் சமூகத்துக்கு எப்படி உதவலாம் என்பதற்கு யோசனையும் சொல்லுகிறார். தலைப்பைக் கண்டு அஞ்சாமல் படிக்கலாம்.

தேவகானம்

●

எஸ். ஆர். குப்புஸ்வாமி

நாரதர் ஒரு சமயம் பூலோக சஞ்சாரம் செய்வதற்காகப் புறப்பட்டு, அனேக இடங்களுக்கு விஜயம் செய்தார். ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குக் காட்டு மார்க்கமாய்ப் பிரயாணம் செய்யும் பொழுது இவரையும் அறியாமல் இவரது மனம் ஓர் இடத்தில் இழுக்கப்பட்டது. நாதப் பிரம்மம்தான் அவ்விதம் நாரதரை இழுத்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரக் கூடிய அளவில், ஓர் உருக்கமான சங்கீதம் நாரதரை இழுத்தது. அந்த ஆகர்ஷண சக்தி வசப்பட்ட நாரதர், சிறிது தூரம் சென்று பார்க்கும்போது, அளவற்ற தபோபலம் நிறைந்த கௌசிகர் என்ற மகரிஷி, சுருதிபலம் பிசகாமல் பாடிக்கொண்டிருந்தார். மனித கானத்தை விடத் தேவ கானம் சிறந்தது என்றும், தேவ கானத்திலும் நாரத கானத்திற்கு மகிமை அதிகம் என்றும் புராணக் கதைகள் கூறுகின்றன. கௌசிகரின் சங்கீதமோ, நாரதரையும் பிரமிக்கச் செய்து விட்டது. அந்தச் சங்கீதத்தைக் கேட்ட நாரதர், பேரானந்தமடைந்ததோடு, கௌசிகரை மேல் உலகத்திற்கு அழைத்துச் சென்று, அங்குள்ள விஷ்ணு, பிரம்மன், இந்திரன், மற்றுமுள்ள தேவர்களும் கௌசிகரின் சங்கீதத்தைக் கேட்க வைக்கவேண்டும் என்றும் நினைத்தார். தன்னுடைய நோக்கத்தை அவர் மகரிஷியினிடம் தெரிவிக்க அவரும் அதற்கு இசைந்தார். இருவரும் திவ்ய உலகத்திற்குச் சென்றனர்.

வானுலகில், எங்கே பார்த்தாலும் ஒரே குதூகலமாக இருந்தது. பூலோகத்திலிருந்து வந்த ஒருவன், தேவர்களைக்காட்டிலும் விசேஷமாகப் பாடுகிறான் என்பதைப்பார்க்கத்தேவர்களனைவரும் ஒருங்கே கூடினர். அந்தத் தினம் ஒரு திருவிழாக் காலம்போல் மிகுந்த கல கலப்புடனிருந்தது. விளம்பரம் பிரமாதமாயிருந்தது. கம்ப நாட்டாழ்வார், மிதிலையைச் சுற்றி வரும் ராமனை வர்ணிக்கும் பொழுது "தோள் கண்டார் தோளே கண்டார்" என்று கூறியபடி, தேவர்களெல்லோரும் ஒரே முகமாய்க் கௌசிகரின் வாயையே பார்த்த வண்ணமாயிருந்தனர். விஷ்ணு முதலியோர் வந்து, தத்தம் ஆசனத்திலமர்ந்தனர். லட்சுமி வருவதற்குத்தான் கொஞ்சம் தாமதமாயிற்று. ஆனால், லட்சுமி வந்ததும் கூட்டத்திற்குள் சுலபமாய் நுழைய முடியாமற் போகவே, தனது வேலைக்காரியை விட்டுப் பூமியில் சவுக்கால் அடிக்கச்சொல்லி இடமேற்படுத்திக்கொண்டு உள்ளே போகவேண்டி நேர்ந்தது. அவ்விதம் அடிக்கையில் ஓர் அடி நாரதர்மேல் கூட விழுந்தது! ஆனால், மத்தியில் நில்லாது, ஓரத்தில் நின்றிருந்தால் அடி விழுந்திருக்காதே என்று நினைத்து, அவர் தம் மனத்தைச் சமாதானப்படுத்திக்கொண்டார். லட்சுமி விஷ்ணுவுக்குப் பக்கத்திலுள்ள தனது ஆசனத்திலமர்ந்தாள். விஷ்ணுவும அந்தச் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி ஓர் அக்கிரா

சங்கீதத்தை யாருமே பூரணமாய் அறிந்து கொண்டதாகச் சொல்லிக்கொள்ள முடியாது என்று முடிவு கட்டுகிறது இந்தக் கதை. எந்தப் புராணத்திலும இல்லாத இந்தக்கதை ஸ்ரீ எஸ். ஆர். குப்புஸ்வாமியை ஆசிரியராகக் கொண்ட கர்நாடக சங்கீதம் 2-ம் பாகத்தில் இருக்கிறது.

சனரை ஏற்படுத்தும்படி லட்சுமியிடம் கூறினர். தேவலோக சங்கீத வித்வான்களுள் தன்னைச் சிறந்தவராகக் கருதிக்கொண்டிருக்கும் நாரதர், தனக்குத்தான் அக்ராசன ஸ்தானம் கிடைக்கும் என்று மனப்பால் குடித்துக்கொண்டிருந்தார். மேலும், இவர்தானே அந்தச் சங்கீத வித்வானை அழைத்துவந்தவர்? ஆகையால், இவருக்குத்தான் 'சான்ஸ்' அதிகம். ஆனல்,லட்சுமி, "ஏன், தும்புரு அக்கிராசனம் வகிக்கலாமே?" என்றதும், நாரதர் முகத்தில் ஈயாட வில்லை! துக்கம் ஒரு பக்கம் நாரதர் நெஞ்சையடைத்தது; கண்கள் சிவந்தன; மீசை துடித்தது; உதடுகளும் படபடவென்று துடிக்க ஆரம்பித்தன. பாவம், என்ன செய்வார் நாரதர்!

கௌசிகரின் சங்கீதக் கச்சேரி ஆரம்ப மாயிற்று. எங்கு பார்த்தாலும் நிசப்தமாயிருந்தது; எங்கும் நாதமயம்; பட்டமரம் பாலாய் உருகியது; கல்லும் கரைந்து, ஆருய் ஓட ஆரம்பித்தது; தேவர்கள் கௌசிகரின் சங்கீதத்தில் ஈடுபட்டு, சித்திரத்தில் எழுதப்பட்ட பொம்மைகளானர்கள். கௌசிகரின் கான மகிமையை என்னவென்று கூறுவது? சங்கீதக் கச்சேரி முடிந்ததும், தும்புருவும், வந்த மகா வித்வானுக்குத் தகுந்தபடி வந்தனோபசாரம் செய்து அக்கிராசனரின் பிரசங்கத்தை வெகு விமரிசையாய் முடித்தார். ஆனல் இதெல்லாம் நாரதருக்கு நாராசமாயிருந்தது.

சபை கலையும் பொழுது லட்சுமி, தனது வேலைக்காரியைக் கொண்டு சவுக்கால் பூமியில் அடித்து, வழி உண்டாக்கிக் கொண்டு கூட்டத்தை விட்டு வெளியே செல்லும் பொழுது, மறுபடியும் நாரதர்மேல் ஓர் அடி விழுந்தது. ஏற்கெனவே நாரதர் மனம் புண்பட்டிருந்தது; அதில் கோலிட்டது போலாயிற்று,இரண்டாம் முறை அடி விழுந்தது. அரக்கர்களுக்குரிய முரட்டுக்குணம் லட்சுமியினிடத்தில் தோன்றியதால் லட்சுமி அரக்கர் வயிற்றில் பிறக்கக் கடவது என்று நாரதர் சபித்துவிட்டார். (அந்தச் சாபத்திற்கிணங்க, லெட்சுமியும், ராவணனின் மனைவியான மண்டோதரி வயிற்றில் சீதையாகப் பிறந்தாள் என்ற கதை ஒன்று, ஒரு வித ராமாயணத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதை இங்கு விளக்குவது பொருந்தாது.)

கலகம் செய்யாதிருந்தால் நாரதருடைய மண்டை பதினயிரம் சுக்கலாக வெடித்துவிடுமல்லவா? ஆகையினல் நாரதர் சும்மா இருப்பாரா? சும்மா இருக்க அவருடைய சுழிதான் விட்டுவிடுமா? ஒருகாலும் விடாது. தும்புருவைச் சண்டைக்கு இழுத்து அவருக்குச் சங்கீதஞானம் போதாது என்ருர். தும்புருவும் நாரதருக்குச் சங்கீத ஞானம் சூன்யம் என்ருர். இப்படி இருவரும் சங்கீதத்தில் ஒருவரைவிட ஒருவர் மேம்பட்டவர் என்று விவாதம் செய்ய ஆரம்பித்தார்கள். வாய்ச் சண்டை கைச் சண்டையாகி விபரீதத்தில் முடியும் போலாயிற்று. நல்ல வேளை ஒருவருக்கொருவர் குடுமியைப் பிடித்துக்கொள்ளும் அளவுக்குச் சண்டை முற்ற வில்லை. சமயம் பார்த்து ஆஞ்சனேயர் வந்து சேர்ந்தார். ஆஞ்சனேயரைக் கண்டதும், தும்புருவும், நாரதரும் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்கள்; அதாவது இருவரும் ஆஞ்சனேயரிடத்தில் பாட

வேண்டியது; அவர் யாருடைய சங்கீதம் உயர்வு என்று சொல்லுகிறாரோ அதை இருவரும் ஒப்புக்கொள்ளவேண்டியது. நாரதருடைய சங்கீதம் உயர்வு என்று ஆஞ்சனேயர் சொன்னால், நாரதருக்குத் தும்புரு அடிமை; தும்புருவுடையதை உயர்வு என்று சொன்னால், தும்புருவுக்கு நாரதர் அடிமை என்று முடிவு செய்தார்கள். இருவரும் இதை ஒப்புக்கொண்டு ஆஞ்சனேயரை 'ஜட்ஜ'ாக வைத்து, 'ஜட்ஜ்' என்ற முறையில் அவருக்கு உயர்ந்த ஸ்தானத்தையும் கொடுத்தார்கள்.

பிரபலமான குஸ்திச் சண்டை என்றால், பார்க்கக் கோடிக் கணக்காய்க் கூட்டம் கூடுகிறார்கள்; அப்படி, மனிதர்களுக்குள்ளே போட்டி என்றாலே பிரமாதப்படுகிறதே, தேவர்களுக்குள் போட்டி என்றால் கேட்கவும் வேண்டுமா? எங்கு பார்த்தாலும் ஒரே அமர்க்களம். எல்லோரும் அவரவர்கள் வேலையை விட்டுவிட்டு, தும்புரு—நாரதர் போட்டியைக் கவனிப்பதில் மும்முரம் செலுத்தினார்கள். ஆடவர்களெல்லோரும் 'நீட்'டாய் க்ஷவரம் செய்துகொண்டு, விலையுயர்ந்த பட்டாடைகளை அணிந்து கொண்டு, அதிவிமரிசையுடன், கல்யாணத்திற்குப் போகிறவர்களைப்போல் சென்றார்கள். ஸ்திரீகளும் அவரவர்களுக்கேற்றவாறு, பலதினுசுப் புடவைகளைக் கட்டிக்கொண்டும், பவுடர் முதலிய 'டாயலட்' அலங்காரம் செய்துகொண்டும் புறப்பட்டார்கள். அப்போது, துணி, மணி, முதலியவைகளில் 'ரேஷ'னில்லாததால், எல்லோரும் நாகரிக முறையில் செல்ல முடிந்தது. இந்தக் காலமாயிருந்தால் அப்படியெல்லாம் முடிந்திருக்காது.

இவ்வளவு தடபுடலுக்கும் மத்தியில், நாரதர் சுருதி சேர்த்துக்கொண்டு, பாட ஆரம்பித்தார். எங்கும் ஒரே நிசப்தம். "நாரத கானம் என்றால், அதன் மகிமையே வேறு" என்று சொல்வதற்கேற்ப, மிகவும் உயர்வாய்ப் பாடினார். தும்புருவோ, தனது திறமை பூராவையும் காண்பித்து, சகலரும் பிரமிக்கும்படிப் பாடினார். இனி, ஆஞ்சனேயர் 'ஜட்ஜ்மெண்ட்' கொடுக்க வேண்டியதுதான் பாக்கி. ஆனால் நவ வியாகரண பண்டிதராயிருந்தாலும், சங்கீதத்தில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தபோதிலும், தேவரிஷிகளாகிய தும்புரு, நாரதர் விஷயத்தில் 'ஜட்ஜமெண்ட்' சொல்லுவதற்குக் கொஞ்சம் யோசித்தார் அனுமார். பிறகு ஒருவாறு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, இரு மகரிஷிகளையும் பார்த்துப் பின்வருமாறு ஆஞ்சனேயர் கூறினார்: "மகரிஷிகளே, தபச் சிரேஷ்டர்களே! நீங்கள் மிகவும் பூஜா பலம் செய்து இத் தேவ நிலையை அடைந்திருக்கிறீர்கள். அதிலும் பகவானுக்குத் தேன் அபிஷேகம் செய்தீர்களோ என்னவோ, உங்களுக்கு மிக உயர்ந்த சாரீரம் அமைந்திருக்கிறது. இவ்வளவு ஞானத்தை உடைய உங்கள் விஷயத்தில், 'ஜட்ஜ்மெண்ட்' கூறுவதே பெரிய அபசாரம். இருந்தாலும் எனது அபிப்பிராயப்படி நீங்கள் நடந்துகொள்வதாக முடிவுக்கு வந்துவிட்டபடியால், நான் ஏதாவது உளறவேண்டும் என்கிற நிர்ப்பந்த நிலைக்குக் கொண்டுவந்துவிட்டீர்கள். ஆகையால், எனக்குத் தெரிந்ததை உளறிவிடுகிறேன். உசிதம்போல் செய்துகொள்ளுங்கள். உங்களில் ஒருவர் உயர்வு, மற்றொருவர் தாழ்வு

என்று சொல்லி, பாபழுட்டை யைக் கட்டிக்கொள்ளப் பிரிய மில்லாதபடியால், நான் வேறு ஓர் உபாயம் செய்யத் தீர்மானித் திருக்கிறேன். எனக்குத் தெரிந்த வரையில் நானும் பாடுகிறேன்; அதே மாதிரி யார் பாட்டு இருக் கிறதோ, அவரே உயர்ந்தவர்.''

சகல சாஸ்திரங்களிலும், சங் கீதத்திலும் அபரிமிதமான ஞானத்தை யுடையவராதலால், ஆஞ்சனேயரின் பாட்டு உண்மை யில் மிகவும் விசேஷமாய்த்தா னிருக்கும்; அப்படித்தான் இருந்தது. குண்டக்கிரியா என்ற ராகத்தை ஆஞ்சனேயர் பாடப் பாட, அதைக்கேட்டு, அவர் உட்கார்ந்திருந்த மலை உருகி ஓடி யது. இதைப் பார்த்த தும்புரு, நாரதர் இருவரும் தங்க ளால் அவ்வளவு உருக்கமாய்ப் பாட முடியாததுப்பற்றி வருந்தி னார்கள். இருவரும் சமரஸப் பட்டு, கற்றுக்கொள்ள வேண் டியது இன்னும் எவ்வளவோ இருக்கிறது என்ற முடிவுடன் தங்கள் இருப்பிடம் அடைந் தார்கள்.

தேவலோகத்தில் மிகுந்த கியாதி யடைந்த தும்புரு, நாரதரே ஆஞ்சனேயரிடத்தில் அவமான மடையும்படி ஏற்பட்டுவிட்ட தென்றால் ஆஞ்சனேயர் சும்மா இருப்பாரா? அப்போது ஆஞ்ச னேயர் ராமபிரானின் அரண் மனையில் வசித்துவந்தார். ஆஞ்ச னேயர் மமதை கொண்டிருப்பது ராமபிரானுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அவர் ஆஞ்ச னேயரின் மமதையை அடக்க எண்ணினர்; அதற்கு ஒரு சந்தர்ப் பம் கிட்டியது.

ஒரு நாள், ராமபிரான் வேட்டையாடுவதற்காகக் கான கம் சென்றார். தமது இஷ்டப்படி யெல்லாம் வேட்டையாடிய பிறகு, மிகவும் களைப்படைந்த வராய், தாக சாந்திக்காக ஒரு முனிவரின் ஆசிரமத்தை யடைந் தார். அந்த முனிவருக்கு, ஸப்த ஸ்வரங்களும் உருவெடுத்து வந் தனபோல் ஏழு பெண் குழந் தைகள் உண்டு. மகரிஷியின் அருளாலும், அனுக்கிரகத்தின லும் அப் பெண்கள் சங்கீதத்தில் அளவற்ற தேர்ச்சி பெற்றிருந் தார்கள். அந்த முனிச் சிரேஷ் டரும் சாஸ்திர முறைப்படி, சிறப் பாகக் கானம் செய்தார். இதைக் கேட்ட ராமர் ஆஞ்சனேயரைக் கர்வபங்கம் செய்யத் தகுந்த இடம் இதுவே என்று தீர்மானித் தார். அரண்மனையை அடைந்த தும், ஆஞ்சனேயரைக் கூப் பிட்டுப் பின் வருமாறு சொன் னர்: ''மாருதி! இன்று மாலை தாகசாந்திக்காக ஒரு ரிஷி யின் ஆசிரமத்தில் நுழைந்த பொழுது, அங்கு ஒரு ரிஷி தமது ஏழு பெண்களுடன் ஏதோ பாடிக்கொண்டிருந்தார். அதைக் கேட்ட நான், 'இதெல்லாம் என்ன பாட்டு, என்னுடைய ஆஞ்சனேயனின் பாட்டுக்குச் சமமாகுமா?' என்றேன். உடனே அந்தரிஷி ''அந்தக் குரங் கிற்கா பாடத் தெரியும்?'' என்று உதாசீனமாகப் பேசினர். எனக்கு மிகுந்த கோபம் வந்து விட்டது. ''நாளைக்கு மாருதியை அழைத்து வந்து, பாடச் செய்து உங்களை அவமான மடையச் செய்கிறேன்'' என்று சொல்லி விட்டு வந்திருக்கிறேன். நீ என்ன சொல்லுகிருய்?''. ஆஞ்ச னேயர் புன்சிரிப்புடன் ''பிரபோ, தங்களால் அனுக்கிரகம் செய் யப்பட்டவனாயிருக்கிறேன். ரிஷி உதாசீனமாகப் பேசியதற்குத் தாங்கள் பதில் சொல்லி வந்தது,

மிகவும் பொருத்தம்தான். தங்களுடைய இஷ்டப்படி நானும் நாளை வருகிறேன். தேவலோகத்தில் பெயரும், புகழும் படைத்த தும்புரு, நாரதரின் பாச்சாவே என்னிடம் பலிக்கவில்லையே, இந்த ரிஷி எனக்கு எம்மாத்திரம்? நாளையதினம் பாடி, அவரை அவமானம் அடையச் செய்கிறேன்'' என்றார்.

மறு நாள், குறிப்பிட்டபடி ஆஞ்சனேயர், ராமபிரான் ஆகியோர் ரிஷியின் ஆசிரமத்தை அடைந்தனர். முதலில் ஆஞ்சனேயர் மிக்க மமதையுடன் பாட ஆரம்பித்தார். பாட்டில் ரசத்தை விட மமதைப் பாகந்தான் அதிகமாய்த் தென்பட்டது. பாட்டின் நடுவில் அபசுரம் ஏற்பட்டது, உடனே எந்தச் சுரம் அபசுரமாகப் பாடப்பட்டதோ, அந்தச் சுரத்திற்கு அனுகுணமான ரிஷியின் பெண்களில் ஒருத்தி, மூர்ச்சை யடைந்துவிட்டாள். உடனே, ரிஷி மிகவும் கோபமடைந்தவராய், ஆஞ்சனேயரைச் சினந்துவிட்டு, அவர் பாடிய ராகத்தைச் சுளுதமாய்ப் பாடினார். மூர்ச்சித்துக் கிடந்த பெண்ணும் மூர்ச்சை தெளிந்தாள். இதைக்கேட்டதும், ஆஞ்சனேயர் வெட்கத்தால் முகம் சிறுத்தவராய், சற்று நேரம் ஒன்றும் தெரியாமல் திகைத்தார். அகாரணமாய் மமதை கொண்டது பற்றி வருந்தினர். சங்கீதத்தில் தெரிந்து கொள்ள வேண்டியது இன்னும் எவ்வளவோ இருக்கிறது என்பதை உணர்ந்தார்.

அன்று முதல், அசுர சாதகம் செய்து, உயர்ந்த சங்கீத ஞானத்தைப் பெற்று, ராம பஜனையில் முன்னைவிட அதிகமாய் ஈடுபடத் தீர்மானித்து, ரிஷி முதலியவர்களை வணங்கிவிட்டுச் சென்றார்.

*

பிழை விளக்கம்

சென்ற இதழில் அவசரத்தில் நேர்ந்துவிட்ட குறளாட்சிப் பிழை ஒன்றைப் பற்றிப் பம்பாய் நண்பர் திரு. வி. முனுசாமிப் பிள்ளை நமக்கு எழுதியுள்ளார்.

திருவள்ளுவரின் குறளடிகள் ஒரே சமயத்தில் தொடர்பாய் எழுதப் பெற்றவை யல்ல; மற்றவர்களால் தூண்டப்பெற்று எழுதப்பெற்றவை பல. வள்ளுவரின் குறளடிகளால் தூண்டப்பெற்று, இவர் கருத்துக்களை எடுத்தாண்டவர்கள் பலர். வள்ளுவரின் சகோதரியாகிய ஔவையாருடைய நூல்களில், குறளடிகள் பல எடுத்தாளப்பெற் றிருப்பது முற்றும் இயல்பே. இராமாயணம், பெரிய புராணம் முதலியவைகளில் குறளடிகள் விரவியிருக்கக் காணலாம்.

சம்பந்தப்பட்ட குறளும், வெண்பாவும் வருமாறு:

உழுது உண்டு வாழ்வாரே வாழ்வார் மற்று எல்லாம்
தொழுது உண்டு பின் செல்பவர் —திருவள்ளுவர் (திருக்குறள்)

ஆற்றங் கரையின் அரசும் அரசு அறிய
வீற்றிருந்த வாழ்வும் விழும்அன்றே! ஏற்றம்
உழுதுஉண்டு வாழ்வதற்கு ஒப்புஇல்லை கண்டீர்!
பழுதுஉண்டு வேறுஓர் பணிக்கு —ஔவையார் (நல்வழி)

—ஆசிரியர், சக்தி

88867
சென்னை-600 028

புத்தக உலகம்

[illegible] கை: ஆசிரியர்: க. தி. மாட்கொல்கர்; மொழி பெயர்ப்பு: கா. ஸ்ரீ. ஸ்ரீ. பக்கம் 194. விலை ரூ. 2-8-0. **2. நீல மாளிகை:** ஆசிரியர்: கா. ஸ்ரீ. ஸ்ரீ. பக்கம் 183. விலை ரூ. 3-8-0. **3. பெரியாழ்வார் பிள்ளைத் தமிழ்:** ஆசிரியை: த. பதுமாவதி அம்மாள். பக்கம் 102. விலை ரூ. 1-8-0. **4. இந்தியச் சிற்பங்கள்:** ஆசிரியை: ஆர். எஸ். ருக்மிணி, எம். ஏ. பக்கம் 143. விலை ரூ. 2-0-0. எல்லாம் க்ரௌன் 1X8. வெளியிட்டோர்: புத்தக நிலையம், ராயவரம், புதுக்கோட்டை ஸ்டேட்.

"இளமை என்பது வெறும் இன்ப நுகர்ச்சிக்காக இல்லை. அதிலும், தாழ்வுற்று அடிமைப்பட்ட நாடுகளிலும் சமூகங்களிலும் உள்ள இளைஞர்களுக்குச் சுக போகங்களில் ஆழ்ந்து போக உரிமை இல்லை. சரீரத்தின் தன்மைகள் யாரையும் விடுவதில்லை; ஒரு குறிப்பிட்ட எல்லை வரையில் இந்தத் தன்மைகளைக் கடைப்பிடிப்பதனால் வாழ்க்கைத் திறன்கள் வலுவடைந்து, ஏற்றுக் கொண்ட செயலை நிறைவேற்றும் திறமை உண்டாகிறது. ஆனால் உடலின் தன்மைகளுக்குத் தேவைக்கு மேலான மதிப்பைக் கொடுப்பது, மனிதன் விலங்காவதற்கு ஒப்பாகும்"—

மதிப்புரைக்கு இரண்டு இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்

என்று இந்த நூலில் ஓர் இடத்தில் ஆசிரியர் குறிப்பிடுவது முற்றும் உண்மையான செய்தி. நாவல் ரூபத்தில், புரட்சிப் பெண்ணின் உள்ளத்தில் துடித்துச் சுழலும் ஆசாபாசங்களை மிக்க அழகான முறையில், ரஞ்சிப்பான கவிதை நடையில் இந்த நூல் சொல்லிச் செல்லுகிறது. விஷயங்களைப் பச்சை பச்சையாய்ச் சொன்னாலும், பக்குவமடைந்த வாசகர்களுக்கு விரசம் ஏற்பட நியாயம் இல்லை. படிக்க வேண்டிய புத்தகம்தான். சில இடங்கள் மிதமிஞ்சி அந்தரங்கமாய்ப் போய்விட்ட போதிலும், உண்மைத் துணிவுக்காகவும், மொழி பெயர்ப்பாசிரியரின் பொருத்தமான, அற்புதமான தமிழ் நடைக்காகவும் முழுவதும் படித்து முடிக்கத்தான் வேண்டும்.

2. இதில் பதினாறு கதைகள் உள்ளன. அட்டைப் படம் நன்றாய் இருக்கிறது. இந்தக் கதைகளைப் பற்றி ஆசிரியர் கூறியிருக்கும் செய்திகள் ஆசிரியரின் பெருமையையும், தன்னம்பிக்கையையும் விளக்குகின்றன. 'புதுமைப் பித்த'னின் முன்னுரை நேர்மையாகவும், உண்மையாகவும் இருக்கிறது. கதைகள் எல்லாமுமே நல்ல கருத்துக்களைக் கொண்டவை. "குண சித்திரங்கள் அவ்வளவு வாய்ப்பாக இல்லை" என்று 'புதுமைப் பித்தன்' சொல்வதை நாமும் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. அதோடு, ஆசிரியரின் மொழிபெயர்ப்பு நடையில் இழைகிற குழைவும், மென்மையும் இங்கேயும் வாய்த்திருந்தால் இன்னும் நன்றாயிருக்கும் என்று எண்ணத் தோன்றுகிறது.

3. இனிப்பான விஷயம். இனிப்பான தமிழ். அழகிய நூல். "பெரியாழ்வார் கண்ணனைப் பாலனாகப் பாவித்துப் பல மாதிரிகளில் அவனுடைய அற்புத விளையாடல்களை மனமார அனுபவித்திருக்கிறார். அவருடைய பாடல்களின் நயம் முழுவதையும் சாரமாகத் திரட்டி, தி. பத்மாவதியம்மையார் இந்த அரிய நூலைத் தமிழகத்துக்கு வழங்கியிருக்கிறார்."

4. சிற்பக் கலை, பாரத நாட்டுப் பண்பு, கச்சிக் கடல் மல்லை, தஞ்சைப் பெரிய கோவில், எல்லோரா, அஜந்தா, தாஜ் மஹால் ஆகியவைகளைப் பற்றி எழுதப் பெற்ற—ஆதரிக்க வேண்டிய—நூல். நடை முரடு தட்டுகிறது. படங்கள் உள்ளன.

—நாரா

உங்களிடம் இருக்கிறதா?

விஜயலக்ஷ்மியின் வெற்றி — ரா. ஹாலாஸ்யநாதன்

தென்னுப்பிரிக்கா இந்தியர் உரிமைக்காக ஐக்கிய தேச மகாசபையில் பீல்டு மார்ஷல் ஸ்மட்சைத் தோற்கடித்து வெற்றி மாலை சூடிய விபரங்கள் அடங்கியிருக்கின்றன. அணு எட்டு

செல்வம் — க. சந்தானம்

சிக்கலான பொருளாதார விஷயங்களை மிகத் தெளிவாக யாரும் புரிந்து கொள்ளும்படி விளக்கியிருக்கிருர் ஆசிரியர். 'கல்கி' ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தி முகவுரையுடன் ரூபாய் ஒன்றரை.

வீயட்நாம் குடியரசு — ஆர். ராமனுதன்

சுதந்திரத்திற்காகப் போராடும் விபரம். உணர்ச்சியுடன் எழுதப் பெற்ற சிறு நூல். அணு எட்டு.

அறிஞர் மார்க்ஸ் — ஆர். ராமனுதன்

மகான் மார்க்ஸ் வரலாறும், அவரது கொள்கைகளும். ரூபாய் ஒன்றரை

பழிக்குப் பழி — எட்டுக் கதைகள்

கி. ந. சுப்பிரமணியன், கா. ஸ்ரீ. ஸ்ரீ., முனிமாணிக்கம் நரசிம்மராவ், 'பொற்றைக்காட்', பி. எம். கண்ணன், ரா. ஸ்ரீ. தேசிகன், வே. ரங்கராஜன், என். நாராயணன் ஆகியோர் எழுதிய கதைகள் 112 பக்கம். ரூபாய் ஒன்று

ரத்தக் களரி — நேத்தாஜி

நேத்தாஜி சுபாஷ் பாபுவின் வீரமிக்க பிரசங்கங்கள், அறிக்கைகள் 'சக்தி மோஹன்' தமிழாக்கியது. ரூபாய் ஒன்றரை

காய்கறித் தோட்டம் — மு. அருணசலம்

பயிரிடுவது எப்படி, தோட்டம் போடுவது எப்படி, காய் கறிகளின் சத்து முதலியவை பற்றிய விரிவான நூல். முதல் பதிப்பு பூராவும் மூன்று மாதங்களில் விற்றுத் தீர்ந்தன. விரிவு படுத்திய இரண்டாம் பதிப்பு, படங்களுடன். ரூபாய் ஐந்து

இந்திய சமஸ்தானங்கள் — கே. அருணசலம்

இந்திய சமஸ்தானங்களின் அரிய விபரங்களும், சமஸ்தான அதிபதிகளின் தான்தோன்றித் தனம் முதலியவைகளை—காரசாரமாக எழுதியிருக்கிருர், ஆசிரியர். ஆறு வருடங்களுக்குப் பிறகு 1946 செப்டம்பரில் சென்னை அரசாங்கம் தடை நீக்கம் செய்திருக்கிறது. ரூபாய் நாலரை

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை :: சென்னை 14.

இலங்கை சோல் ஏஜண்டு:—கலைமகள் கம்பெனி, செட்டியார் தெரு, கொழும்பு.

மலேயா சோல் ஏஜண்டு :— ஹிந்துஸ்தான் நியூஸ் ஏஜன்சி, ரவாங், மலேயா.

பிரசினை: நான்கு தீக்குச்சிகளைக் கொண்டு, இரண்டு சதுரங்களை நான்கு சதுரங்களாக மாற்றவும்.

விடை:

அதிகப்படியான நான்கு தீக்குச்சிகளைப் படத்தில் காட்டியுள்ளபடி அமைக் கவும்.



ஷே நான்கு தீக்குச்சிகளை விவேகத்துடன் அமைப்பதனால், அவை எட்டுக்குச்சிகளின் வேலையைச் செய்யும்படிப் பண்ணலாம். அதுபோலவே, உம்மு

டைய சேமிப்பைக் கொண்டு என்ன செய்ய வேண்டுமென்பதை அறிவதனால், நீர் உம்முடைய குடும்பத்தின் வரவு செலவுத் திட்டத்தில் அதிகபட்ச பலனைப் பெறக்கூடும். நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளை வாங்கவும்—இவை சிறு சேமிப்புக்காரர்கள் பணத்தை வட்டிக்குப் போட்டு வைப்பதற்காகவென்றே ஏற்படுத்தப்பட்ட சாதனமாகும்.

நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள்.

இவை முக்கியமான அனுகூலங்களாகும்:—

1. நீர் நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளை 5, 10, 50, 100, 500, 1,000 அல்லது 5,000 ரூபாய்க்கு வாங்கலாம்.

2. ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களுள் ஒவ்வொருவரும் (அவர் பெரியவரா யிருந்தாலுஞ்சரி மைனரா யிருந்தாலுஞ்சரி) 5,000 ரூபாய் வரையில் வாங்க முடியும். இரண்டு பேர் கூட்டாக 10,000 ரூபாய் வரையில் வாங்கலாம்.

3. இவைகளின் மதிப்பு 12 வருஷங்களில் 50 சதவிதம் உயருகிறது. வட்டிக்குப் போட்டு வைக்கப்பட்ட ஒவ்வொரு ரூபாயும் ஒன்றரை ரூபாய் ஆகிவிடுகிறது. இது யாதொரு கவர்ன்மென்ட் பத்திரத்தின் மேல் கிடைக்கக்கூடிய மிக உயர்ந்த வட்டியாகும்.

4. சம்பாதிக்கப்பட்ட வட்டிக்கு இன்கம்டாக்ஸ் செலுத்த வேண்டியதில்லை.

5. இவைகளை 2 வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட்டுகள் விஷயத்தில், 18 மாதங்களுக்குப் பிறகு) ரொக்கமாக மாற்றிக் கொள்ளலாம்.

6. சிறு தொகைகளைச் சேர்த்து வைப்பவர்கள் 1 ரூபாய், 8 அணா அல்லது 4 அணாவுக்கு ஸேவிங்ஸ் ஸ்டாம்புகள் வாங்கலாம். இப்படி வாங்கிச் சேர்த்து வரப்பட்ட ஸ்டாம்புகளின் மதிப்பு 5 ரூபாயானதும், அவைகளைக் கொடுத்துவிட்டு அவைகளுக்குப் பதிலாக ஒரு ஸெர்டிபிகேட் பெற்றுக் கொள்ளலாம்.

7. இந்த ஸெர்டிபிகேட்டுகள், ஸ்டாம்புகள் ஆகிய இரண்டையும் தபாலாபீஸ்களிலாவது கவர்ன்மென்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜென்டுகளிடமாவது ஸேவிங்ஸ் பீரோக்களிலாவது பெற்றுக்கொள்ளலாம்.

உம்முடைய ஸேவிங்ஸ் க்ரூப்பில் இப்போதே சேரவும்!



அயோடிசால்

மிகச் சிறந்த

ரத்த சுத்தி மருந்து

இது திரேகத்தில் உஷ்ணம் அதிகரித்து அதனுல் ஏற்படும் ரோகங்களை குணப்படுத்தி திரேகத்திற்கு ஆரோக்கியத்தை கொடுக்கும்.

ரத்தத்தை சுத்திசெய்து ரத்த விருத்தியையும் உண்டாக்கும்.

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள் :

தீ சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி
மதுரை

குழந்தைகளுக்கு முக்கியமானது

பேபி கிரைப்

குழந்தைக்கு ஆரோக்கியமளிப்பது

குழந்தைகளுக்கு உண்டாகும் வாயு, வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, அஜீரணம், மாந்தம். பல் முளைக்கும் போது ஏற்படும் வயிற்றுப்போக்கு, முதலிய சகல வியாதிகளையும் போக்கி நல்ல ஆரோக்கியத்தையும் தரும் சிறந்த திராவகம்

தயாரிப்பவர்கள் :

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி
மதுரை

சிலோன் ஏஜண்டுகள் : M. C. A. ஹாதா அண்ட் கோ., 20, டாம் தெரு :: கொழும்பு

புதிய விஷயங்களுடன் இரண்டாம் பதிப்பு வெளிவந்துவிட்டது

நிர்வாக ஆசிரியர் : வை. கோவிந்தன் ஆசிரியர் : சுப. நாராயணன்.

Printed and Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press) 115 - E, Mowbrays Road, Royapettah, Madras-14

દેવાંગના

சுமங்கலி

அவள் அணிந்திருக்கும் நகைகளிலிருந்து சுமங்... என்று தெரிகிறது.

நவரத்தினங்களும், ... களும் தெய்வங்களு... உரியவை. ஒவ்வொரு ... ணுக்கும் தெய்வ அ... உண்டு. நவரத்தினங்... நகைகளும், ஒரு கணமே... அணியாதிருந்தால் பெ... ளது போக பாக்ய ஐச்வ... களுக்குக் குறைவு ஏற்ப... கிறது.

வைரங்கள் அவர்களுக்கு அழகு தருவதோடல்லாம... நிரந்தர ஐச்வரியமாக... இருக்கிறது.

வைரம் வாங்குவது வீ... சிலவல்ல. அது ஒ... சேமிப்பே.

ஸுராஜ்மல்ஸ் மனச் சாந்... யும் வாழ்க்கையில் மு... னேற்றமும் அளிக்கக் கூடி... வைர நகைகளையே விற்பவ... கள்.

ஐம்பது ஆண்டுகளுக்குமேல் ஒழுங்காகவும், நாணய... மாகவும், பொதுஜன சேவை... செய்து வருகிறார்கள். அவ... களது வியாபாரம் அவ்வளவு நேர்மையானது.

ஸுராஜ்மல்ஸ்

313, எஸ்பிளனேட், மதராஸ்